சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி


41

மார்கழி 2023

தனிப்பிரதி 100ரூபா

ஆசிரியர்: மு.தயாளன்

வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்



மதிப்புமிகு பேராசிரியர்
செ. யோகராசா
அவர்களின்மறைவையொட்டி
சிறுகதைமஞ்சரி வழங்கும்
துயர்ஆற்றுகற்
சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication


முதயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்



மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்


மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்



மு.தயாளன்


சு. ஆர்த்திகா



அலெக்ஸ் பரந்தாமன்


சியாமளா



பிரமி



M.Thayalan



M.Thayalan



M.Thayalan



M.Thayalan



மு.தயாளன்

எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0771960160

# மரணம் கொடிது!

இறப்பு எப்பொழுதுமே சோகமானதே. ஒவ்வொரு இறப்பின்போதும் பழைய நினைவுகள் கிளறப்படும். அந்த நினைவுகளால் தூண்டப்படும் உணர்வுகள் எப்பவும் சோகம் கலந்தவையாகவே இருக்கின்றன. எம்மோடு பழகிய பலரை காலப்போக்கில் நாம் இழந்து கொண்டிருக்கிறோம்.

முதன் முதல் பேராசிரியர் கைலாசபதி அவர்களை இழந்தபோது அதிர்ந்தேன். பின்பு நந்தினி சேவியரை இழந்தபோதும் அதிர்ந்தேன். இப்போ யோகராசா என்கின்ற யோகனை இழந்தபோது அதிர்ந்து கொண்டிருக்கிறேன்.

கடவுளை இல்லை என்பவனும் கடவுளை இருக்கிறது என்பவனும் சந்திக்கின்ற ஒரு புள்ளிதான் மரணம். வாழ்நாள் முழுவதும் எதிரிகளாக தம்மை எதிரிகளாகக் கருதிக்கொண்ட இவர்கள் மரணம் ஒன்றின்போது தம்மை அமைதியாகப் பார்க்கின்றனர். ஆனால் அந்தக் கணத்தை நம்மால் பார்க்க முடிவதில்லை.

யோகன் அமைதியான ஒரு நண்பன். என் வயதொத்தவனாக இல்லாதபோதும் நாம் நண்பர்களாகவே பழகினோம். என்னுடைய 14 வயதிலிருந்து யோகனோடு பழுகுகிறேன். இடையில் சில வருடங்கள் தொடர்புகள் அற்று வேறுவேறு திசைகளில் பயணித்தபோதும் மீண்டும் சந்தித்தபோது இடையில் தொலைந்த வருடங்கள் பூச்சியமாகிவிட்டன.

மிகவும் மெதுமையானவன். சில விடயங்களை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் சொல்லும் வல்லமை நிறைந்தவன். யோகனை நான் ஒரு தகவற் களஞ்சியம் என்றே சொல்வதுண்டு. எல்லாவிடயங்களையும் சின்ன மூளைக்குள் பத்திரமாக ஒழித்து வைத்திருக்கும் திறமைசாலி.

இறுதியாக ஒருதரம் அவன் குரலை என்னால் கேட்க முடியவில்லையே என்பதை நினைக்கும்போது மனம் பதட்டப்படுகிறது. யோகனைப்பற்றி எழுத வெளிக்கிட்டால் ஒரு புத்தகமே எழுதிவிடலாம்.

போய் வா நண்பனே! காலத்துள் கரைந்துவிட்டாய் ஆனாலும் காலம் உன்னை மனதில் வைத்திருக்கும்

**மு. தயாளன்**

---

இந்த இதழில் அமரர்.பேராசிரியர் செ. யோகராசாபற்றி வந்துள்ள ஆக்கங்கள் யாவும் முகநூலிலிருந்தே எடுக்கப்பட்டன. முகநூலுக்கும் எழுதியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...


1 **மரணம் கொடிது!**
மு. தயாளன்

2 **உள்ளடக்கம்**

3 **விசாரணை**
ஆதவன்

14 **பலூன்**
இ. மதன்

18 **இரண்டாவது தாலி**
செங்கதிரோன்

23 **மூன்றாவது கால்**
ந. ஜெயரூபலிங்கம்

28 **ஆயான்**
தேன்மொழி

31 **கண்ணீர் உப்பிட்டு**
கனகசபை ~~தேவசகாயம்~~ தேவகடாட்சம்

33 **இப்படியும் சில பிறவிகள்**
ஷெல்லிதாசன்

41 **வடுக்கள்**
சியாமளா யோகேஸ்வரன்

49 **படிப்பும் பாதிப்பும்**
அலெக்ஸ் பரந்தாமன்

48 **Lost Cause - Ayshnavi Vinojan**


**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,+94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649
வெண்பா புத்தகசாலை, யாழ்ப்பாணம் + 94 212 225 090

**சிறுகதை மஞ்சரி 46**

தனி ஒருவரின் தொகுப்பாக வரவுள்ளது. மஞ்சரியில் வராத கதைகள். மஞ்சரியில் ஒரு கதையாவது எழுதிய எழுத்தாளர்.

**அன்பான வேண்டுகோள்.**

*நீங்கள் படைப்புகளை அனுப்பும்போது வங்கிவிபரம் குறிப்பிட்டால்மட்டுமே உதவித் தொகை அனுப்பி வைக்கப்படும*


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்,

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , T. சௌந்தர்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன், திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்**
Dr P.இராஜையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:**1000Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்விட்டு வணங்குகிறோம்

**சிறுகதை மஞ்சரியோடு இணைந்து பயணித்த அன்புக்குரிய நண்பன் யோகராசாவின் நினைவுகளால் எமது உள்ளம் அழுகிறது.**

பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பேராசிரியர் செ.யோகராசா பற்றி உருக்கமானதோர் முகநூல் பதிவினை எழுதியிருந்தார். அதனை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன். (முகநூல் பதிவு) மிக மிகத் துயரமான செய்தி

## பேராசிரியர் யோகராசா காலமானார்

### பேராசிரியர் சி.மௌனகுரு

கருணை யோகன் என அழைக்கப்படும் பேராசிரியர் யோகராஜா இன்று மதியம் காலமானார். கேன்சர் நோய் என அறிய ப்பட்டு அவர் மகரம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார். சென்ற மாதம் நான் மட்டக்களப்பு சென்றபோது வீடு தேடி வந்து பல மணி நேரம் உரையாடிச் சென்றார். நோயாளியைப் போல தோற்றமளித்த. அவரைப் பார்த்து 'உடனடியாக வைத்தியரிடம் செல்லுங்கள்" என்று கூறினேன். வழக்கம் போல சிரித்துக் கொண்டார்

மூன்று நாட்களுக்கு முன்னர் தான் நானும் சித்ரலேகாவும் அவரை. மகரகம வைத்திய சாலையில்சென்று பார்த்து வந்தோம். மக்களோடு மக்களாக ஒரு கட்டிலிலேயே படுத்துக் கிடந்தார். அருகில் சென்று அமர்ந்து கொண்டு அவர் தலையைத் தடவிக் கையைப் பிடித்து ஆறுதல் கூறினேன். அவர் உடம்பில் சேர்லைன் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். என்னை கண்டதும்படபட படவென்று பேசத் தொடங்கினார்.

நான் அவரை கையமர்த்தி "நீங்கள் பேசாமல் இருங்கள் நான் பேசுகிறேன்" என்றேன். "வருத்தம் பற்றிப் பேசாமல் வேறு ஏதும் பேசுங்கள்" என்றார். நோயின் தீவிரத்தை அவர் அறிந்திருந்தார். போலத் தெரிகிறது.

நான் 1999 இல் இருதய சத்திர சிகிச்சையில் இருந்து வெளிவந்த போது எழுதிய கவிதை யிலிருந்து ஒரு வரியை சொல்லிக் காட்டி னார். "நடந்தே கழிய வேண்டும் பயணம்" என்பதுவே அவ்வரி. சாகும் வரை வாழ்வோம் என்ற உறுதி அக் கவிதையில் இறுதியாக வரும். அதனையும் சொல்லிக் காட்டினார். கவிதைகளில் உயிர்ப்புகளை கண்டு ரசித்த மனம் அல்லவா அது. மேடையில் மீண்டும் சந்திப்போம் என்று கூறி ஒரு சிரிப்பு சிரித்தார். அவரது வழமையான சிரிப்பு அல்ல அது.

மலையகத்தை முறையாக எனக்கு அறிமுகம் செய்தவரும் அவரே. 1992 ஆம் ஆண்டு ஒரு நாள் நடு இரவிலே அவர் திருமணம் முடித்த இடமான மலையக மண் ராசியை அடைந்தோம். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த குடும்பத்தை கண்டதும் அவர்களோடு சில நாட்கள் கழித்ததும் மலைகளில் ஏறித் திரிந்ததும் என அது ஒரு தனிக் கதை. அவரது பெரும் குடும்பத்தில் நானும் ஒருவன் ஆனேன்.

அந்த உறவுகள் என் உறவுகள் ஆகின. அவரைப் பற்றி எழுத அதிகம் உண்டு எழுதுவேன். நான் பேசப் பேச அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டி ருந்தது. அவர் தோற்றம் எனக்கு மகாதுயரம் தந்தது. கால் கை வயிறு வீங்கி இருந்தது. முகம் அதைத்திருந்தது. என்னோடு ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்க முயன்றார். அவர் உணர்வுகளை புரிந்து கொண்டேன்.

அவரைச் சூழ நிறைய வயது முதிர்ந்தோர் நின்று கொண்டிருந்தார்கள். அனைவரும் மலையகத்தவர். அவரது பழைய மாணவர்கள். யோகராசா. மலையக மண் ராசியில் கற்பிக்க வந்த பிறகு அந்தப் பாடசாலை மாணவர்கள் பெற்ற புத்துணர்ச்சியையும் அதனால் தாங்கள் பெற்ற பயனையும் வளர்ச்சியையும் அவர்கள் வாயாரக் கூறினர். அவை உதட்டில் இருந்து வந்த வார்த்தைகள் அல்ல அவர்கள் உள்ளம் பேசிய வார்த்தைகள்.

சில மலையக மாணவர்களை அவர் அழைத்துச் சென்று நெல்லியடி மகா வித்தியா லயத்தில் அனுமதி வாங்கி தந்து தன் வீட்டில் வைத்து படிப்பித்ததாக அவர்கள் மூலம் அறிந்து கொண்டேன். அவர்கள் நெஞ்செல்லாம் நன்றி நிறைந்து போய்க் கிடந்தது. புல்லுக்கும் நோகாமல் நடந்து போகும் இதயம் கொண்டவர் யோகராசா. புத்தகங்களே அவரது வாழ்க்கை ஆயிற்று. மிகப்பின் தங்கிய மலை நாட்டு மக்கள் மீது பெரும் அனுதாபம் கொண்டிருந்தார். அவரால் முன்னிலைக்கு வந்த பல மலையகப் பெரியவர்களை நான் அறிவேன். நம்மோடு மிக நெருங்கியவர்கள் இறக்கும் போது தான் வாழ்க்கையின் நிலையாமை ஆழமாக மனதுள் இறங்குகிறது. போய் வாருங்கள் யோகராஜா. நன்றி மறவாத நற்பண்பு கொண்ட எனது அருமை நண்பரே . நான் ஒரு ஆத் மார்த்தமான நண்பனை இழந்தேன். இன்று முகநூலில் இந்த படம் கண்டேன் அகத்தைக் காட்டும் அந்த சிரிப்பு தான் யோகராசா. என்னோடு மனம் திறந்து உரையாடுபவர்கள் ஒவ்வொருவராகப் போய்க்கொண்டிருக் கிறார்கள்.

**அஞ்சலிப்பா**

பேராசான் செ.யோ!
பேதம் பாராப் பெரியோன்
தொய்வில்லா எழுத்தன்
ஓய்வில்லா வாசகன்
தேக்கமுறா நீரோடை
தெளிவன் ஒளிமுகம்
கடைவழி தேடிப் போனாயோ?
இடைவழி தவறி
தேம்புகிறோம்!

**- இதயராசன்**

---

ரோசிரியர் யோகராசா அவர்களின்
திடீர் மறைவுச் செய்தி தமிழ்
இலக்கியவாதிகளுக்கு மட்டுமல்ல
தமிழ் கூறும் நல்லுலகுக்கே பேரிடியாக
அமைந்துள்ளது.

**- சித்திரவேலாயுதன்**

---

சிறுகதை மஞ்சரியின் கதைகளை சீர்தூ க்கி நல் விமர்சனம் செய்து வழிகாட்டி வந்த பேராசானே!
தங்களை இழந்து உளம்
நொந்துபோனோமையா.
தங்களிடத்தை நிரப்ப யார் வருவார்?
தங்களது எழுத்தை
இனி மஞ்சரியில் காணமுடியாவண்ணம்
காலன்
சதிசெய்துவிட்டான்.
மஞ்சரிக்கும் அதில் தமதெழுத்தை
சஞ்சரிக்கவிடும் எழுத்தாளர்களுக்கும்
பேராசிரியரின் இழப்பு பெருமிழப்பாகும்
மஞ்சரியின் ஒரு
வலதுகை ஓய்ந்துவிட்டது.

**- ஷெல்லிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசானே! போனீங்களோ?

கர்ணன் சின்னத்தம்பி

எப்படித் தொடங்குவது, எப்படி எழுதுவது, எதையென்று எழுது வது என்று எதுவுமே விளங்கவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னமே, தயாளன் அண்ணா அனுப்பிய சிறுகதை மஞ்சரியில் அவரது விமரசனங்களை வாசித்தேன்..எந்த வெறுப்பும் இல்லாது உள்ளதை, உள்ளபடி விமர்சிப்பதில் இவருக்கு நிகர் இவரே. அதனால் இவரது விமர்சனங்களை எப்போதும் ஆவலாக வாசிக்க காத்திருப்பேன். ஆனால் இன்றுகாலை நண்பர் ரஜீவ் அனுப்பிய தகவலைக் கண்டதும் ஒரு கணம் அதிர்ச்சியும் வேதனையுமாக இருந்தது. முகநூலைத் திறந்த போது, இராகவண்ணாவின் பதிவைக் கண்டதும் மனதினுள் இனம் புரியாத ஒரு வலியாக இருந்தது..

எண்பதுகளின் பிற்பகுதியில் என்று நினைக்கிறேன், மலையகத்திலிருந்து, மாற்றலாகி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு உயர்வகுப்புகளுக்கு தமிழ், இந்து நாகரிகமும், கீழ் வகுப்புகளுக்கு தமிழும் கற்பிக்கும் ஆசானாக வருகிறார். பாடசாலைக்கு வரமுன்னம் பாடசாலை பற்றி அறிவதற்காக எனது மரியாதைக்குரிய மறைந்த தமிழாசான் குப்பிழான் ஐ சண்முகலிங்கன் அவர்களைத் தொடர்பு கொண்டபோது, சண்முகலிங்கன் சேர் தான் என்னை யோகராசாசேருக்கு அறிமுகம செய்து வைத்தார். பாடசாலைபற்றியும், எங்கள் அதிபரின் நிர்வாகத் திறன் பற்றியும

பாடசாலையின் வளர்ச்சி பற்றியும் சொன்னேன். அன்றிலிருந்து ஆசிரியர் என்பதோடு என்னோடு நல்ல நண்பராகவே பழகினார்.

பாடசாலை நாட்களிலும் கூட, புதிதாக வந்தபடியால் யாரையும் பெரிதாகத் தெரியாது. கூடுதலாக ஆரம்ப காலங்களில் நானும் அவருமே இடைவேளைகளின் போது கூடுதலாக கதைத்துக் கொண்டிருப்போம். அப்போது தான் ரஞ்சகுமார் என்று ஒரு நல்ல சிறுகதையாளன் இருக்கிறார் தெரியுமா என்று கேட்டார். நான் அவருக்குச் சொன்னேன், அவரோடு நல்ல பழக்கம், எங்கள் ஊரவர் என்றேன், நான் ரஞ்சண்ணாபற்றிச் சொன்னதைக் கேட்டு, தனது இயல்பான சிரிப்பை வெளிப்படுத்தினார். யோகராசா சேரினுடைய அப்பாவும் தமிழ் பண்டிதர். அதனால் தான் இவருக்கும் தமிழில் ஆர்வம் வந்ததோ தெரியவில்லை. எனக்குத் தெரிந்த இவரது தமிழ் ஆசான் பண்டிதர் வீரகத்தி அவர்கள், பண்டிதர் வீரகத்தி அவர்கள்மீது மிகுந்த மதிப்பும் , மரியாதையும் கொண்டவர்.

சேர், கரணவாயில் தமக்கையின் வீட்டிலிருந்தே பாடசாலைக்கு வருவார், கரணவாயில் உள்ள இவர்களது வீட்டுக்கு அடிக்கடி போவேன். இவரது மனைவி மிகவும் அன்பானவர், புன்னகையோடு வரவேற்பார். என்னைக் கண்டதும் , சேர் சொல்லாமலே பெரிய சில்வர் குவளையில் மோர் தருவார். அந்த வெயிலுக்கு மோர் நன்றாக இருக்கும். மோரைக்குடித்து விட்டு

ஒரு நாள் ஒரு வாசகம் சொன்னேன்.சேரின் மனைவிக்கு அது புதிதாக இருந்தது. ஏனெனில் அவர் மலையகத்தைப் பிறப்பிடமாக கொண்டவர், அதனால் எங்கள் ஊரப்பேச்சுவழக்கில் உள்ள ஒன்றைக் கேட்டதும் சிரித்துவிட்டார். எப்போதும் சேர் என்னோடு கதைக்கும் போது மோர் குடிக்கும் போது நான் சொன்னதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுபடுத்துவார்.

மிகுந்த நகைச்சுவையாகப் பேசுவார். ஆனால் மேலோட்டமாகப் பார்த்தால், அவரது நகைச்சுவைகள் விளங்காது. கொஞ்சம் ஆழமானவை. அறிவார்ந்து சிந்திக்க வேண்டி யவை.

எங்கள் விக்னேஸ்வரக்கல்லூரியில் பெண்களுக்கு பட்டி( ரை) அணிகின்ற நடை முறையை அதிபருக்கு எடுத்துச் சொல்லி அதை நடைமுறைப்படுத்துவதிலும் அதிபரோடு சேர்ந்து உழைத்தவர்.

பாடசாலையில், உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியம் என்ற ஒன்றின் தொடக்கத்திற்கும் இவரே போசகராகவும் இருந்தார். அன்றுதான் முதன் முதலில்" ஏணி" என்ற கையெழுத்துப் பிரதி ஒன்றை நான், ஆசிரியராக இருந்து, எனது தமிழாசான் குப்பிழான் சண்முகலிங்கன் அவரகளை அழைத்து வந்து வெளியிட்டோம். அந்த "ஏணி" என்ற கையெழுத்துப் பிரதி இப்போதும் வருகின்றது என நினைக்கின்றேன். யோகராச சேரின் முயற்சியிலே, பாடசாலை மாணவர்களையும், பழைய மாணவர்களையும் கொண்டு மாபெரும் கலைவிழாவொன்றை வெற்றிகரமாக நடாத்தி, பாடசாலையின் வளர்ச் சிக்காக அதிக நிதியினைத் திரட்டினோம்.

பாடசாலையின் வளர்ச்சியிலும், எங்கள் அதிபர் சிவபாதசுந்தரம் அவர்களோடு சேர்ந்து அரும்பணி ஆற்றினார். பின்னாளில் இவரது அயராத உழைப்பினாலே தான் , மாலை நேரங்களிலும், வாரவிடுமுறைகளிலும்" பண்டிதர்" " பால பண்டிதர்" என்ற கல்விப் பொறிமுறையும் உருவாக்கம் பெற்று பின்னாளில் சில அரசியல் காரணங்களால் நின்று போனது.

யோகராசா சேர், பண்டிதமணி சி கணப திப்பிள்ளை அவர்களின் இலக்கியப்பணி பற்றி ஆய்வு செய்து, யாழ்பல்கலைக் கழகத்தில் "முதுகலைமாணி" பட்டம் பெற்றார்.

சிறுகதைகள் . கவிதைகள், கட்டுரைகள் , விமர்சனங்கள் என்று பரந்துபட்ட இலக்கிய வாளனாக மிளிர்ந்தார். இவரது படைப்புகள் பெரும்பாலும். மனிதர்களைத் தோலுரிப்ப தாகவே இருக்கும். எவருக்கும் முகத்துதிபாடும் பழக்கம் இல்லை. இவரது கதைகளில் எனக்கு மிகவும் பிடித்தவை" கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டும்." இது அன்றைய எமது பிரதேசத்தில் நிலவிய சில சமூகப்பிரச்சினை களை மையமாக வைத்து எழுதியமை. மற்றது கட்டைவேலி கூட்டுறவுச் சங்கத்தால் வெளி யிடப்பட்ட " உயிரப்புகள்" என்ற சிறுகதைத் தொகுப்பில் எழுதிய " அகதிகள்" என்ற கதை.

நிறையவே கவிதைகள் எழுதி இருக்கிறார். மத்தொனி கலைவாணி சனசமூக நிலையத் திறப்பு விழாவில் . மன்னவன் சேர் தலை மையில் நடந்த கவியரங்கு நிகழ்வில் கலந்து கொண்டு , தனது கவிதையையும் சொன்னார்.. அந்தக் கவிதையில் ஒரு வரி "கட்டெறும்பு ஊர்வதனால் கற்கண்டு தேய்ந்திடுமோ.." இன்றுவரை நல்ல நினைவில், அதை ஏன் சொன்னார் என்ற காரணத்தை அவரே என்னிடம் சொன்னார். அந்தக் காரணத்தை இங்கு இப்போது சொல்லவிரும்பவில்லை.

1987 இன் பிற்பகுதியில் , எனது குருநாதர் ஜெபரட்ணம் சேர், என்னை விஞ்ஞானத் துறையை விட்டு, தமிழ்படியெடா என்றார். அதுதான் உனக்கான துறை என்றார். நானும் அவரின் சொல் கேட்டு தமிழபடிக்கத் தொடங்கினேன். அதன் பின் சேரோடு இன்னும் நெருக்கமாகப் பழகினோம். இன்றைய யாழ் பல்கலைக்கழை பொருளியல் துறைப் பேராசிரியராக இருக்கும் விஜயகுமாரும் நானும் சேர் வீட்டில் போய்ப்படித்தோம். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையவே பகிடி கலந்து நக்கல டிப்பார். எந்தப் பணத்தையும் எதிர்பார்க்காமல் தமிழும். இந்து நாகரிகமும் சொல்லித்தந்தார்..

இப்போது. எங்கள் ஊரில் யோகராசா சேர் நல்ல பரிச்சயமாகி தனியார் கல்வி நிறுவனங்க ளுக்கும் செல்லத்தொடங்கியதும். சைக்கிளில் எல்லாம் செல்வது கடினமாகப் போக. C90 என்றழைக்கப்படும் மோட்டார் சைக்கிளை. நவம் மாஸ்ரரின் உதவியோடு வாங்கினார். அந்த மோட்டார் சைக்கிளில் முதன் முதலாக சேரையும் ஏற்றிக் கொண்டு. அவரது வீட்டுக்குச் சென்றேன். சேருக்கு முதலில் ஓடுவது கொஞ்சம் பயமாகவே இருந்தது. அந்தப்பயத்தைப் போக்காட்டி ஓடவைத்தேன். யாழுப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற டானியல் அவர்களின் " தண்ணீர்" நாவல் வெளியீட்டு விழாவிற்கும் இரண்டு பேரும் போனோம். அப்போதும் என்னையே ஓடச்சொல்லிப் பின்னால் இருந்து வந்தார். அதன் பின் அவர் போகின்ற நூல்வெளியீட்டு விழாக்களுக்கு என்னையும் கூட்டிச் செல்வார்.

போகும் போதெல்லாம் அடிக்கடி ரஞ்சகுமார். கலாநிதி மாஸ்ரர். நெல்லை க பேரன். தெணியான். கண மகேஸ்வரன்.. இப்படிப் பலரது சிறுகதைகள் , அவர்களது ஆளுமைகள் பற்றி எல்லாம். சொல்லிக் கொண்டே வருவார்..

நான். சில அரசியல் காரணங்களால். நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழலில் ஜப்பான் சென்றுவிட்டேன். எனக்குமவருக் குமிடையில் கடிதப் போக்குவரத்துகள் இருந்து வந்தன.பின்னாளில் சில காரணங்களைச் சொல்லிப் பாடசாலையிலிருந்து வெளியேற இருப்பதாகவும் சொன்னார். அந்தக் காலத்தில் அதிபர் சிவபாத சுந்தரம்அவர்கள் ஓய்வு பெற்றுவிட்டார்.

பின்னாளில் ஒரு நாள். பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் மேற்பார்வையில் தான் கலாநிதிப்பட்டம் பெறுவத்காக" வட மராட்சிக் கல்விப்பாரம்பரியம்" என்ற ஆய்வினை மேற்கொள்வதாக சொன்னார். பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் செல்ல இருப்பதாகவும். சொன்னார் அங்கி ருந்தும் என்னோடு தொடர்பில் இருந்தார். மட்டக்களப்பில் இருந்த போது. அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு விடயம் செய்தேன்.. அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதிலே நான் செய்த அந்த விடயத்திற்காக என்னை பாரதி கண்ட பண்டைக்காலப் பைத்தியங்களில் நீயும் ஒன்று.. என்று எழுதி இருந்தார். அந்த வரிகளை இன்றும் மறக்கவில்லை. சேரின் மனைவியும் எப்போதும் நன்றியோடு நினைவு கூர்வார்..

" வடமராட்சிக் கல்விப்பாரம்பரியம்" என்ற ஆய்வுக்கட்டுரையை நூலாகவும் வெளி யிட்டார்.இலண்டனுக்கும் வந்து. தான் எழுதிய " முச்சந்தி இலக்கியம்" என்ற நூலையும் சிவன் கோயிலில் வெளியிட்டார். சில நாட்கள் வந்து இங்கும் தங்கினார்..

இப்படியாக எங்கள் மண்ணிலே மிகப் பெரும் இலக்கியவாதி. பேராசிரியர். கலாநிதி யோகராசா சேரின் இழப்பு மிகுந்த வலியைத் தருகிறது. அவரோடு பழகிய காலங்கள். நல்ல ஆசிரியராக. நல்ல நண்பராக. நலன் விரும் பியாகப் பழகிய காலங்கள் மிகவும் இனிமை யானவை. மறக்க முடியாதவை..

இந்த நேரத்தில் . யோகராச சேரை இழந்து தவிக்கும் . அவரது மனைவிக்கும். மகளுக்கும். மாணவ சமூகத்திற்கும். உற்றார் உறவினர் நண்பர்கள். அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்..

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடிக்காப்பகம் ஒன்றை இழந்த துயர்!!

**வரதராஜன் மரியாம்பிள்ளை**



யோகராசா மாஸ்டர் என்றும் சேர் என்றும் என்னால் அன்பாக அழைக்கப்பட்ட பேராசிரியர் யோகராசா அவர்களின் மறைவு எனது வாழ்வில் ஓர் அதிர்ச்சியூட்டிய பிரிவாகவே அமைந்துள்ளது.

நான் ஊரில் ஈழநாடு நிருபராகவிருந்த காலத்தில் " கருணை யோகன்" என்ற பெயரில் ஆக்கங்களையும் அவரது சனசமூக நிலையச் செய்திகளையும் கொண்டுவந்து தரும் யோகராசா மாஸ்டர் பின்னர் விரிவுரையாளர் யோகராசாவாகவும் பேராசிரியர் யோகராசாவாகவும் வந்தபோதும் எப்போதும் அவர் எனக்கு சேர்! தான்.

கடந்த மாதம் மாஸ்டரைத் தொடர்பு கொண்டபோது அவரது துணைவியார் திலகம் அக்காதான் மறுமுனையில் வந்தார். மாஸ்டர் மகரகமயில் உள்ளதாகச் சொன்னார். சோதனைக்காக அங்கு தங்கி நிற்பதாகச் சொன்னார்.

பின்னர் அழைத்துக் கேட்டபோது -அப்படியொன்றுமில்லை மாஸ்டர் கதைக்கிறார் வழக்கம்போல பகிடிக்குக் குறைச்சல் இல்லை' என்றதுடன் தான் தமது உடல்நிலை காரணமாக மட்டக்களப்புக்கு வந்துவிட்டதாகவும் மாஸ்டருக்கு ஒருவர் துணைநிற்பதாகவும், அவரது மாணவர் ஒருவர் தினமும் போய்ப் பார்ப்பதாகவும் சொன்னார்.

கடந்தவாரம் கடைசியாக அவரது துணைவியாருடன் பேசியபோது விரைவில் இங்கு (மட்டக்களப்புக்கு) வருவார் என்றும் இப்போதும் பகிடியாகக் கதைக்கிறார் என்றும் சொன்னபோது "சேர் வந்ததும் கதைக்கிறேன். கேட்டதாகச் சொல்லுங்கள்" என்று சொன்ன எனக்கு சற்று முன்னர் முகநூலைத் திறந்தவுடன் நண்பர் ராகவனின் Eliyathamby Ragavan செய்தியை அறிந்ததும் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

உடனடியாக அவர் துணைவியார் திலகமக்காவுக்கு எடுத்தேன்.மறுமுனையில் துணைவியாரின் சகோதரி பேசினார். இன்று மட்டக்களப்பு மருத்துவமனைக்குக் கொண்டு வரவிருந்ததாக அறிவித்ததுடன் சேரும் தன்னுடன் பேசியதாகச் சொன்னார்.நடந்தவற்றைச் சொன்னார்.சேருடன் கதைப்பதற்கு ஆவலாயிருந்தேன்- என்றேன்

மறுமுனையில் அழுகை!

சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டீர்களே சேர்! - அழுதேன்.

சேர்!

உங்களுடைய நகைச்சுவை ததும்பும் ஆழமான கருத்துகளும் விமர்சனங்களும் உங்களை நினைக்கும் அனைவருக்கும் இன்று வந்தபடியிருக்கும். பலரின் மனங்களில் உலா வருவீர்கள் சேர்!

என்னை வெளிவாரியாக தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு ஏனைய ஏதேனும் பாடங்களுடன் பட்டநெறி ஒன்றைக் கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியிலும் இலக்கணத்திலும் பட்டம் பெறவேண்டும் என்று ஊக்கியவர் யோகராசா சேர் அவர்களே!

எனது தொலைக்காட்சி நிலையத் தொழிற் பழு காரணமாக- கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மாதாந்த வகுப்புகளுக்கு போகத் தவறிய போது அவர் நைசாகச் சொல்லிக் கடிந்த விதம் என்றும் என் மனதில் அடிக்கடி வருவதுண்டு.

ஊடகத்துறையில் உள்ளவர்கள் தமக்கு எல்லா விடயங்களிலும் அறிவு உள்ளது இனி என்ன கற்கவிருக்கிறது என்று எண்ணுவ துண்டு.அதனால் மேற்கொண்டு எதையும் படிக்க விரும்புவதில்லை. பட்டமேதும் படித்து இடையில் விடுவதுண்டு.

பல்லைக் கடித்துக் கொண்டு படித்து முடித்து விட்டீர்கள் என்றால் ஒரு பட்டமும் கிடைத்த துடன். தமிழ் மொழியில் உள்ள விடயம் பற்றி நீங்கள் சொல்வதற்கும் பேசுவதற்கும் ஓர் அங்கீகாரம் கிடைத்ததாகவிருக்கும் என்றார். உங்கள் பதவிக்கும் நல்லது" என்றார்.

நான் கிழக்குப் பல்கலைக்கழக வகுப்புக ளுக்கு கொழும்பிலிருந்து போகும்போது பேரா சிரியர் மனோ சபாரத்தினம் அவர்களின் தயவில் அங்குள்ள மாணவர் விடுதியில் தங்குவதுண்டு.

நண்பரும் ஊடகவியலாளருமான உதய குமார் Rasanayagam Uthayakumar இல்லத்திலும் தங்குவேன்.

யோகராசா மாஸ்டர் என்னிடம்

" நீங்கள் இங்கு வரும் நேரத்தைப் பயனுள்ளதாக்குங்கள். என்னுடன் வந்து தங்குங்கள். வந்தால் நானும் பின்னேரத்தில் சில பாடங்களைப் பற்றிக் கதைக்க. விளக்க உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்" என்று சொல்லி தம் வீட்டில் வந்து தங்கிப் போகச் சொன்னார். அங்கு தங்கினேன்.

யோகராசா சேர் உயர்தர பரீட்சை விடைத் தாள்களைத் திருத்துவதற்கு கொழும்புக்கு வருவதுண்டு. கொழும்புப் பல்கலைக் கழகத்தில் ஊடக டிப்ளோமா நெறி மாணவர்க்கு ஊடகத்தில் மொழி தொடர்பான வருகை விரிவுரையாளராக வும் பணியாற்றினார்.

அவற்றுக்காக வரும்போதெல்லாம் கொழும்பில் நடைபெறும் இலக்கியக்கூட்டங் களில் பேசவும் பங்குபற்றவும் தமது நேரசூசி யைத் திட்டமிட்டுக் கொள்வார். தமது நேரத்தை விடாமல் இவற்றில் செலவழிப்பதே அவர் வழக்கம். பல்கலைக்கழக ஊடக மாணவர்க ளுக்கு ஊடகங்கள் தமிழ் மொழிப் பிரயோகத்தில் விடும் தவறுகளை இலக்கண விளக்கத்துடன் விளக்கிய ஆசான் அவர் .

அவரிடம் அவரது நகைச்சுவை கலந்த விளக்கத்தைக் கற்ற ஊடக மாணவப் பரம்பரை தமிழ் மொழியைச் சீராகப் பிரயோகிக்கும் என்பது நிச்சயம்.

சக்தி ரிவி தொடங்கிய ஆரம்ப காலப் பகுதியில் அதன் முதலாவது காலைநேர நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியான காலைக்கதிர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள அழைத்திருந்தேன்.

தம்மைப் பற்றியல்லாமல் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களைப் பற்றித் தாம் கதைக்க விரும்புவதாகவும் அறிவிப்பாளர்கள் அல்லாமல் என்னையே நேர்காணல் செய்யவேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் கேட்டார். "சிவத்தம்பி சேர் பற்றி நீங்களும் அறிந்திருப்ப தால் ஒரு கலந்துரையாடல் போல செய்யலாம்" என்றார். அவரின் விருப்பப்படி அந்த நேர் காணலை நானே செய்தேன்.

யோகராசா மாஸ்டர் சிவத்தம்பி சேர் எழுதிய பல நூல்களைக் கட்டுக்கட்டாகக் கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடி நிகழ்ச்சியில் அவர் கதைக்கும் போதே அவ்வளவு நூல்களையும் காட்டினோம்.

சக்தி ரிவியின் தொடக்ககாலம்.கலையகத்தில் இரண்டு கமராக்களே இயங்கிய காலம் அது. சிவத்தம்பி சேர் பிற்காலத்திலும் விதந்து பாராட்டிய நிகழ்ச்சியாக -அவரைப் பற்றிய ஓர் ஆவணமாக- அந்த நிகழ்ச்சி அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் பெருமை யோகராசா சேர் அவர்களுக்கே சொந்தமானதாகும்.

சில மாதங்களுக்கு முன் அவருக்கு நான் தொலைபேசி அழைப்பு எடுத்தபோது வழமைபோல நீண்ட நேரம் கதைத்தார். கடைசியில்,நேரத்தைக் கேட்டு விட்டு "படுங்கள் நித்திரை தான் முக்கியம்" என்றார். அண்மையில் அவரது துணைவியாருடன் கதைத்தபோது "சேர் யார் நேரம் என்று பார்க்காமல் ஒவ்வொருவராகக் கதைப்பார். கதைத்து முடிந்ததா என்று பார்த்தால் ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார். அல்லது வாசிப்பார். வீட்டிலுள்ள எல்லாப் பேப்பர் துண்டுகளிலும் எழுதி வைத்திருப்பார். கலண்டர் பின்பக்கம், இடைவெளி என்று காணும் கடதாசி எல்லாம் எழுதிவந்தார். வீடு திருத்த வருபவர்கள் காணும் கடதாசி பேப்பர்களை எல்லாம் எடுத்து ஒரு புறமாக வைக்கப் பழகிவிட்டார்கள் என்று சொன்னார்.

யோகராசா மாஸ்டர் போலவே நகைச்சுவையாகப் பேசும் அவர்-" மாஸ்டர் பஸ்ஸில் போகும்போது பஸ் கண்டக்டர் டிக்கெற் தருமட்டும் அவனைப் பார்த்தபடியே இருப்பார். நாங்களென்றால் கண்டக்டரிடம் டிக்கெட் வாங்குவது சோதனையாளர்கள் வந்தாலும் என்ற பயத்தில். ஆனால் மாஸ்டர் பார்ப்பது அதற்காக அல்ல. எழுதுவதற்கு ஒரு சிறு துண்டு கிடைக்கும் என்ற ஆவலே அதற்குக் காரணம்" என்று சிரித்தார்

என்னையும் அன்றைக்குச் சிரிக்க வைத்தது இந்தச் செய்திக்காகத்தானா சேர்? - என்று இன்று நினைக்கிறேன். அவருடன் உரையாற்றும்போது ஒருமுறை 'பாரதியாரின் குரு அல்வாய்ச் சாமி பற்றிய நிகழ்ச்சி "ஸ்கைப்பில்" உங்களைப் பார்த்தேன் சேர் நிகழ்ச்சி நன்றாக இருந்தது" என்றேன். ஸ்கைப் பில் தான் பங்கு பற்றுவதை விரும்புவதில்லை என்றார்.

ஏன் சேர்- என்றேன்.

தான் மற்றவர்கள் கதைக்கும்போது அடிக்கடி தூங்கிவிடுவதாகவும் அதிலுள்ள ஒருவர் அலைபேசியில் வந்து தம்மை எழுப்பிவிடுவதாகவும் சொன்னார். "அதால நான் அப்படி இருந்து பேச விரும்புவதில்லை அந்த நேரம் ஏதாவது வாசிக்கலாம் எழுதலாம் " என்றார்

கண்டிப்பு, துயரம், விரக்தி எல்லாவற்றையும் நகைச்சுவையாகவே பகிரும் பண்பு நிறைந்தவர் என்பதை அவருடன் பழகிய அனைவரும் அறிவர்.தொண்ணூறுகளில் மட்டக்களப்பில் விபத்துக்குள்ளாகிப் படுகாய முற்ற அவரது துணைவியாரை கொழும்பு விபத்து மருத்துவமனையில் பார்க்கப் போனபோது மாஸ்டர் மிக்க துயரத்துடன் நின்றிருந்தார்

"என்ன சேர் நடந்தது. நியூசில் பார்த்தோம்" என்றபோது நாட்டின் ஜனாதிபதி கூட கூட்டங்களுக்குத் தாமதமாகத் தான் வருகிறா.. எங்கட அம்புலன்ஸ் ட்ரைவர் அவசரப்பட்டு முந்தியுள்ளான்" என்றார்.இத்தனை தேடல்கள் ஆய்வுகள் வைபவங்கள் கட்டுரைகள் என்பவற்றுக்கு மத்தியில் நாளாந்தம் தமது துணைவியாருக்குத் துணையாகப் பணிசெய்த அவரது வாழ்க்கைப் பயணத்தை அவரை அறிந்தோர் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாதங்களுக்கு முன் கதைக்கும்போது இரண்டு நாளாக மனது சரியில்லை என்றார்.

"ஏன் சேர்?"-என்றேன்.

"நூல் ஒன்றுக்கு அணிந்துரை கேட்டு வந்துள்ளான் பாவம் நல்ல ஆர்வம் உள்ள பையன்" என்று சொன்னவர் நூலைப்பற்றியும் சில வரிகளில் ஒரு பகிடியும் சொல்லி

"முன்பு கரேக்டர் சேட்டிவிக்கற் குடுக்கிற மாதிரி" டைப் பண்ணிக் கொண்டு வாங்கோ நான் கீழ சைன் பண்ணுறன்- என்று லெற்றர் கெற்றைக கொடுக்கவேண்டும் போல இருக்கு" என்றார்.நான் அவர் வீட்டில் தங்கப்போன வேளையில் ஒருமுறை புலம்பெயர் கவிதைகள் வந்த பல நூல்களை தரையில் பரவி வைத்திருந்தார்.அவை தொடர்பாக ஒரு கட்டுரை எழுதப்போவதாகச் சொன்னார்.இன்னொரு முறை போனபோது போராளிகள் எழுதிய ஆக்கங்களையும் நூல்களையும் பரவி வைத்திருந்தார்.

அதுவும் ஓர் ஆய்வுக் கட்டுரைக்காக..!

அண்மையில் கதைக்கும்போது கிழக்கிலங்கையில் மறைந்துள்ள பல ஆக்க இலக்கியங்களை எடுத்து வைத்திருக்கிறேன்.கனடா தாய்வீட்டில் எழுதவுள்ளேன் என்று மிகவும் மகிழ்ச்சி ததும்பக் கூறினார்.

பல வெளிவராத நூல்கள் இலக்கியங்கள் பற்றி எழுத உள்ளேன் என்பதே கடைசியாகச் சொன்னது. பட்டத்திற்கான ஆய்வுக்குப் பின்னரும் தேடல்களையும் ஆய்வுகளையும் தொடர்ந்து கொண்டிருந்த அறிஞர் யோகராசா அவர்கள்.கடைசிவரையும் தேடிக்கொண்டேயிருந்தவர் தமது தேடற் பணியை இடையில் நிறுத்திவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் சென்று விட்டார் என்பதே எல்லோரதும் துயரமாகும்

இலக்கியப் பரம்பரைக்கு மட்டுமன்று ஊடகப் பரம்பரைக்கும் யோகராசா மாஸ்டரின் மறைவு பேரிழப்பாகும்.ஓர் அரிய சுவடிக்காப்பகத்தை இழந்துள்ளோம் என்பதை உணர்ந்து ஏங்குகிறோம் சேர்!

உங்கள் புன்னகை கலந்த மென் குரலும் ஆர்வத்தைத் தூண்டும் கதைகளும் எங்கள் நினைவுகளில் என்றும் கலந்தவை சேர்!

போய்வாருங்கள் சேர்!!

உங்களில் அன்பும் நட்பும் நன்றியும் உள்ளவர்களே பலர். அதில் நானும் ஒருவன்.

## நான் அறிந்த பேராசிரியர் யோகராசா சேர்

தோளில் எப்போதும் கருப்பு பையுடன் அமைதியான நடையுடன் நிகழ்வுகளுக்கு வருகை தருவார்.அன்பின் பாதையின் எண்ணம் போல் கலை இலக்கிய அமைப்பின் நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளார். நேரத்தை கடைப்பிடிப்பதிலும் வல்லவர். நிகழ்வு முடிந்த பின் அதிகம் நின்று பேசவே மாட்டார். காரணம் அறிந்தேன் அவரின் துணைவியாருக்கு சுகயீன காரணமாக நிகழ்வு முடிந்தவுடனே பயணப்பட்டு விடுவார்.

வீட்டின் தேவைகளை நிறைவு செய்துவிட்டு பல நிகழ்வில் ஒரே நாளில் கலந்துக்கொள்வார். சலிப்பில்லாது பல மேடை பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளார். பல எழுத்தாளர்களை ஊக்குவித்தவர் எனலாம்.

எழுத்தாளர்களின் புத்தகங்களில் அணிந்துரை கூடிய தொகை எழுதிய பெருமைக்குரியவர். அவரின் எழுத்துக்கள் காலத்தால் அழியாது. அமைதியானவரின் நிரந்தர உறக்கம் மனதை வாட்டுகின்றது.

**- றொசில்டா அன்டோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்வம் இல்லாத மனிதன்



ஈழத்துப் படைப்பாளிகள் பல ரது நூல்களுக்கு அணிந் துரை எழுதிய இலக்கிய ஆளு மையும் ஓய்வுநிலை தமிழ்த் துறைப் பேராசிரியருமான கலாநிதி செ. யோகராசா அவர்கள் எழுதுவதை நிறுத்திக் கொண்ட செய்தியறிந்து துயரடை கிறேன்.

சிறுகதை மஞ்சரியில் பேராசிரியர் செ. யோக ராசா அவர்களின் சிறுகதைகள் பற்றிய ஆய்வு எமது எழுத்தை வளப்படுத்த உதவியது என்றால் மிகையில்லை. பேராளுமையாக இருந்தாலும்

கர்வம் இல்லாத எளிமையான மனிதர் என் பதை அவருடனான ஒருநாள் உரையாடலி லேயே புரிந்துகொண்டேன்.

மகுட வெளியீடான எனது நூலொன்றிற்கு அணிந்துரை எழுதியதோடு வெளியீட்டிற்குப் பிரதம அதிதியாக வந்து சிறப்பித்தமை பெரு மகிழ்வைத் தந்தது.

இனி வருங்காலங்களிலும் அவருடனான இலக்கியப் பயணம் தொடருமென நினைத்தேன் ஆனால் இன்றைய செய்தி மிகுந்த வேதனை யைத் தருகிறது.

பேராசிரியரை இழந்து துயருறும் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா இறைவனடியில் இளைப் பாற வேண்டுகிறேன்

சென்று வாருங்கள் ஐயா

உங்கள் இலக்கியப் பணி என்றென்றும் வாழும்

**- நக்கீரன் மகள்**

# இலக்கிய ஆளுமை

பேராசிரியர் மதிப்புக்குரிய செ.யோகராசா அவர்கள் அமரத்துவமடைந்துள்ளார்.

திருகோணமலையில் நடைபெற்ற எனது 'பறையொலி' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவின் போதே நான் இவரை முதன் முதலாக சந்தித்தேன். எனது தொகுப்பைக் குறித்து அவரது விமர்சன உரை நடைபெற இருந்தது.

என்னைக்கண்டதும் அவரிடமிருந்து ஒரு புன்முறுவல் வெளிப்பட்டது.

அவருக்கு அருகில் சென்றதும், கைலாகு கொடுத்து, பக்கத்தில் அமரச் செய்தார்.

"உங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பதான் நேரில் பார்க்கிறேன்..." என்றார்.

பதிலுக்கு நானும், " மிக்க மகிழ்ச்சி ஐயா. உங் களது கட்டுரைகளை ஜீவநதி இதழில் கூடுதலாக வாசித்திருக்கிறேன்..." என்று கூறினேன்.

ஐயாவினுடைய முகத்தில் ஆச்சரியக்குறிகள். சிறுகதை மஞ்சரியின் கதைகளை ஆய்வு செய்து வரும் நாளில், எனது கதைகளின் தரத்தையும் நிர்ணயம் செய்தார், மஞ்சரியில் நான் எழுதிய 'குழம்புச்சோறு' எனும் சிறுகதையின் குறைபாடுகளை அடுத்த மஞ்சரியில் கதைகளோடு கதையாகத் தெரிவித்தபின், பறையொலி வெளியீட்டு விழாவின்போது, அவரிடம் அக்கதையில் குறைபாடுகள் தோற்றம் பெற்றதற்கான காரணத்தை நான் அவரிடம் விளக்கியபோது, அதைக்கேட்டு அவர் மிகவும் கவலைப்பட்டார். தான் ஒரு பேராசிரியர் என்ற எதுவித பந்தாவும் இல்லாமல், எளிமையாக, இயல்பாகப் பழகினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவரால் இப்படி இருக்க முடிகிறது? அறிவினதும் அனுபவத்தினதும் முதிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாக இருக்கலாம்.

எது எப்படியோ... எல்லோர்க்குமான நிகழ்வே அவருக்கும் நிகழ்ந்திருக்கிறது. மனதைத் தேற்றுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. மீண்டும் ஒருதடவை இவரைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பு, கருப்பாகிப் போய் விட்டது.

சென்றிடுங்கள்...

மீண்டும் வந்திடுங்கள் ஓர் இலக்கிய ஆளுமை யாக... உங்களுக்காகக் காத்திருப்போம்.

பெரியவரின் இழப்பினால், துயர் தாங்க முடியாது. மனம் துவண்டு வருத்தப்படும் அவரது குடும்ப உறுப்பினர்களை இறைவன் ஆற்றுப்படுத்துவானாக. - ஆமென்.

**- அலெக்ஸ் பரந்தாமன்**

# மகுட அஞ்சலிகள்



செ. யோகராசா அவர்களை பற்றியும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது பாரிய பங்களிப்பு பற்றியும் வெறும் எழுத்துக்களில் அடக்கி விட முடியாது. பல்கலைக் கழக வாழ்வியலில் ஆரம்பமான அவருடனான தொடர்பு பல தளங்களில் இருவரும் இணைந்து செயற்படுவதற்குரிய வாயில்களை திறந்துவிட்டது. துடிப்பான இயங்கு நிலை எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. எறும்பை போன்று எந் நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிய ஆத்மா இன்று தனக்கான ஓய்வைத் தேடிக்கொண்டது.ஈழத்தில் வெளிவந்த அதிக நூல்களுக்கு அணிந்துரை எழுதியவர் இவரே. தனது எழுத்துக்கள் மூலம் பல இளம் படைப்பாளிகளின் முகங்களில் வெளிச்சம் பாய்ச்சியவர். எவருடனும் எந்த சந்தர்ப்பத்திலும் முரண்படாத, கோபம் என்ற உணர்வை வெளிக் காட்டாதவர். இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னு ரைகள் ஓர் நூலாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. எமது மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழுடனும், மகுடம் பதிப்பகத்துடனும், நெருங்கிய தொடர்பில் இருந்தவர். பதிப்பகத்தின் அதிக வெளியீடுகளுக்கு அணிந்துரை எழுதியவர் பேராசிரியர் செ. யோகராசா அவர்களே."ஈழத்து முச்சந்தி இலக்கியம்" என்ற ஆய்வு நூலும், ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதன் முறையாக ஒரு பேராசிரியரை இன்னொரு பேராசிரியர் நேர்கண்ட "சங்க காலம் முதல் சம காலம் வரை" மகுடம் இதழில் வந்த பேராசிரியர் சி. மௌனகுருவுடனான நேர்காணல் நூலும் மகுடம் வெளியீடாக வெளி வந்தது குறிப்பிடத்தக்கது.கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினங்களில் நடாத்தும் பல கலை இலக்கிய நிகழ்வுகளின் பேச்சாளராக தனது ஆய்வு ரீதியான கருத்துகள் மூலம் மட்டக்களப்பு கலை இலக்கிய வளர்ச்சிக்கு புது ரத்தம் பாய்ச்சியவர் பேராசிரியர் யோகராசா அவர்கள். மணி விழா ஆண்டில் (2016) அவரது பணிகளை பாராட்டி பணி நயப்பு விழாவினை நடாத்தி பாரிய மலர் ஒன்றினை வெளியிட்டு மட்டக்களப்பு மண் தனது நன்றிக்கடனை தீர்த்துக் கொண்டது. பேராசிரிருக்கு எமது மகுட அஞ்சலிகள்.

**வி. மைக்கல் கொலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல கலியாணமண்டபத்திற்கு முன் ஜந்தரை மணியிலிருந்து நின்று கொண்டிருக்கின்றான் குபேரன். கால்கள் சற்று வலித்தன. பின்பகுதியில் சிறிய கிழிசல் விழுந்த அரைக்காற் சட்டையும் நைந்துபோன மேற்சட்டை ஒன்றையும் அணிந்திருந்தான். வியர்வையில் மேற்சட்டை நனைந்திருந்தது. எண்ணெயையே காணாத சீவப்படாத பரட்டைத் தலைமுடியை கைகளால் கோதிவிட்டான். நிறம் சற்று தூக்கலாக இருப்பதனால் அழகுக்குக் குறைவில்லை. ஒரு கையில் கொப்பி புத்தகங்கள் இரண்டு மூன்றும், பேனா ஒன்றும் வைத்திருந்தான். அவனருகில் சிகப்பு நிற பிளாஸ்டிக் கூடை ஒன்றும் கிடந்தது. மெல்லிய தேகம். ஒட்டிய வயிறு. காய்ந்த உதடுகள். கரடுமுரடான கரங்கள். இறுகிய பாதத்தசைகள். கொஞ்சமும் சந்தேகமற்ற ஏழைச்சிறுவன் ஆண்டு ஏழு படிக்கின்றான். படிப்பில் ஓரளவு சுமாரானவன்.

கலியாண மண்டபத்தின் முகப்பு அழகிய பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டு அழகாகக் காட்சியளித்தது. முன்பக்கச்சுவரின் மேற் பகுதியில் அம்மண்டபத்தின் பெயர்ப் பலகை தங்க நிற வேலைப்பாடுகளுடன்கூடிய எழுத்துக்களால் வடிவமைக்கப்பட்டு மேலும் அழகாகக் காணப்பட்டது. ஒவ்வொரு சொல்லாக வாசித்து அம்மண்டபத்தின் பெயரை முழுமையாக அறிந்துகொண்டான்.

நீண்டநேரம் ஒரே இடத்தில் நிற்பது முடியாத காரியமாய் இருந்தது அவனுக்கு. இருநூறு மீற்றர் நீளமான அவ்வீதியின் இரண்டு பக்கங்களுக்குமாக மாறி மாறி நடந்து அங்கும் இங்குமாக போயும் வந்தும் கொண்டிருந்தான்.

மண்டபத்தின் முன் வாசலில் விதவித மான விலையுயர்ந்த மோட்டார் வண்டிகளும், உந்துருளிகளும் வந்து போயின. சில தரிப்பிடத்திலே தரித்து வைக்கப்பட்டு மிருந்தது. மேலும் சில முச்சக்கர வண்டி களும் வந்து போயின. அதிலிருந்து பலர் பலவிதமான வர்ணங்களைக்கொண்ட

# பலூன்

விதவிதமான வடிவங்களாலான, மிக விலையுயர்ந்த ஆடைகளையும், பாதணி களையும், ஆபரணங்களையும் அணிந்து வந்திருந்தார்கள். அவர்கள் பூசியிருக்கும் அரிதாரத்திற்கு மட்டுமே அதிகளவு பணம் செலவழித்திருப்பார்கள் போலும். அவர்களில் அனேகமானோரது முகமே அடையாளம் தெரியாது மாறியிருக்கிறது தெரிகிறது. இவற் றையெல்லாம் பார்க்கும் போது இது ஒரு பணக்கார வீட்டு விசேசமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் ஊகித்துக் கொண்டான். அதிலும் உள்ளே சென்ற வர்களில் சிறுவர்களே அதிகமாக காணப்பட் டார்கள். ஆகவே அது ஒரு பிறந்தநாள் விழாவாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். அதுவே அவனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மறுபடியும் வீதியின் ஒரு பக்கத் தொங்க லுக்குச் சென்று திரும்பியவன் மண்டப வாசலுக்கு இருபது மீற்றர் தொலைவில்போய் நின்று கொண்டான். அவனது பார்வை முழுவதும் அந்த மண்டபத்தினுள்ளேயே குத்திட்டு நின்றது.

சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே பாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலியும், கைதட்டல்களும், ஆரவாரமும் கேட்டன. "ஹப்பி பேட்தடே டூ யூ", ஹப்பி பேட்தடே டூ யூ", "ஹப்பி பேட்தடே டியர்." சத்தமான சிரிப்பொலிகளும், அதனைத் தொடர்ந்து பலவண்ண வெளிச்சங்களும் பரவின. இவனுக்கும் அவற்றை பார்க்க வேண்டும்போல் இருந்தது. ஆனாலும் உள்ளே



**இ. மதன்**

போகமுடியாதே! எனினும் அந்த மகிழ்ச்சி அவனையும் தொற்றிக் கொண்டது.

தன்னையுமறியாமல் "ஹப்பி பேட்தடே.." படித்தான். யாரும் பார்க்காமல் கைதட்டினான். பன்னிரெண்டு வயது. இத்தனை வருடங்களில் பன்னிரெண்டு தடவைகள் அவனுக்கு பிறந்த நாள் வந்து போயிருக்கின்றது. ஒரு தடவை யாவது எவரும் அவனுக்கு "ஹப்பி பேட்தடே" படித்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஒருமுறை அவனது தங்கைக்கு. அவளுக்கு அவனைவிட ஆறு வயது குறைவு. பிறந்தநாள் விழா வந்து போனதாக ஞாபகம்.

அவனது நினைவுகள் எங்கோ சென்று கொண்டிருக்க, சட்டென ஒரு பலூன் மண்டப வாசலைக் கடந்து வீதிக்குப் பறந்து வந்துகொண்டிருந்தது. வீதிக்கு வந்த பலூன் காற்றின் போக்குக் காரணமாக அவனை நோக்கியே வேகமாக வந்தது.

கையிலிருந்த புத்தகத்தையும் பிளாஸ்டிக் பையையும் அப்படியே போட்டுவிட்டு பலூனைப் பிடிப்பதற்காக ஓடினான். பலூன் கைக்கு அருகில் வந்து விட்டது. அப்பொழுதுதான் பார்த்தான் அவனையொத்த நாலைந்து சிறுவர் சிறுமியர் அந்த பலூனை நோக்கி ஓடிவருவதை. ஓடிவந்த கும்பல் அவனை புறம் தள்ளி அந்த பலூனைக் கைப்பற்ற முனைந்தது. நான்தான் அதனை முதலில் பிடிக்க ஓடினேன் என்று வீராப்புடன் பறந்து செல்லும் பலூனை நோக்கி அவனும் ஓடினான். ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு பலூனை கைப்பற்ற முனைந்தார்கள். அங்கே கோபமோ குரோதமோ இருக்கவில்லை.. மகிழ்ச்சியே தென்பட்டது.

ஒருவாறாக பலூன் முற்றாக அவனது கைக்கு வந்தது. நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மறுபக்கம் ஓடினான். அவர்களும் பின்தொடர்ந்து ஓடிவந்தார்கள். ஒரு சுவரோடு போய் நின்றுகொண்டான். அவன் பின்னால் வந்த அனைவரும் அவன் அருகில் வந்து அந்த பலூனைக் கைப்பற்ற முனைந்து முடியாது பின் வாங்கி நின்றார்கள். மெல்லத் திரும்பி அவன் அவர்களை நிமிர்ந்து பார்த்தான். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சி, குதூகலம், மீண்டும் அதனைக் கைப்பற்றும் எண்ணம். ஆனாலும் மூச்சிரைக்க பேசாமல் நின்றார்கள்.

அவன் நெஞ்சோடு அணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த பலூனை மெல்ல எடுத்து. கொடுக்க மனமின்றி அவர்களிடம் நீட்டினான். அவர்கள் அதனை வாங்கவில்லை.. "நீயே வச்சுக்கொள்ளு. உனக்கு பலூன் பிடிக்குமா" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "என் தங்கச்சிக்குப் பிடிக்கும்" என்று கூறினான். "அப்படியா. அப்ப உன் தங்கச்சிக்கு இதக் கொண்டேகுடு. நாங்க உள்ளபோய் வேற பலூன் எடுத்து விளையாடுறம்." என்று கூறிக் கொண்டே அவர்கள் உள்ளே ஓடிவிட்டார்கள்.

அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நேரமும் போய்கொண்டிருக்கின்றது. அவன் வந்து ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாகியிருக்கலாம். வீட்டிலே அம்மாவும், தங்கச்சியும் தனியாக இருப்பார்கள். அம்மாவுக்கு உடம்புக்கு முடியாது. சீக்காளி. எழுந்து வேலைகள் அதிகமாகச் செய்யமாட்டாள். இரவுச் சாப்பாடு எதுவும் செய்திருக்கமாட்டாள். தங்கையும் பசியோடு காத்திருப்பாள். இந்நேரம் தூங்கிவிட்டாளோ என்னவோ. நான் விரைவாகச் செல்லவேண்டும். இந்த மாமாவையும் இன்னமும் காணவில்லை.

எண்ணங்கள் வீடுநோக்கிச் சென்றிருந்தவேளை அவனைக் கடந்து பலர் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் வாயையும், வயிற்றையும் பார்த்தால் நன்றாக சாப்பிட்டிருப்பார்கள் போலத் தென்பட்டது. அவனது வயிறு காய்ந்துபோய்க்கிடந்தது. மேலும் அரை மணித்தியாலங்களுக்கு மேல் கால்கடுக்க காத்திருந்தான்.

சிறிது நாழிகையின் பின் மண்டபத்தினுள் இருந்து ஒரு கறுத்த உருவம் வெளியே வந்து எட்டி எட்டிப் பார்த்தது.போகிறவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றதனால் அவன் அந்த உருவத்தைக் கவனிக்கவில்லை.

"குபேரன். டேய் குபேரன்." என்ற சன்னமான குரல் ஒலியைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பியவன் சற்று தொலைவில் அந்த உருவத்தைப் பார்த்தவுடன் அது தனது மாமா கதிரேசன்தான் என்று புரிந்து கொண்டான். கதிரேசன் அவன் தாயின் ஒன்றுவிட்ட சகோதரன். அவனது ஒன்றுவிட்ட தமக்கையின் பிள்ளைகளை அவன்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

காலடியை அகல அகலமாக எடுத்து வைத்து ஓட்டமும் நடையுமாக அவனருகில் வந்து சேர்ந்தான்.

"பை கொண்டு வந்தியா."

"ஓம் மாமா இந்தா இருக்கு..."

"சரி கொண்டா. நீ அந்த மூலையில நில்லு. யார்ர கண்ணிலயும் பட்டிடாத."

"சரி மாமா..."

என்று கூறிக்கொண்டே கதிரேசன் காட்டிய வழமையான அந்த சிறிய ஒடையினுள் போய் நின்றுகொண்டான். 'குப்' என்ற இருள் பயத்தை உண்டுபண்ணியது. மாமா சீக்கிரம் வந்தா நல்லது என்று கடவுளை வேண்டிக்கொண்டான்.

நிமிடங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்துகொண்டிருந்தது.. ஆட்களின் அரவம் குறைந்திருந்தது. வாகனங்கள் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை படுத்து தூங்கிவிடுவாளே.. அம்மாவுக்கு மருந்து கொடுக்கவேண்டுமே. எனும் எண்ணம் வந்து அவனை அலைக் கழித்தது. அப்படியே சுவரோடு சாய்ந்து கொண்டான்.

மீண்டும் அந்த சன்னமான குரல் கேட்டது.

"குபேரா. டேய் குபேரா."

மெல்ல வெளியே வந்தான். அங்கே அவன் மாமன். வெளிச்சம் பட்டும்படாமலும் நின்றுகொண்டிருந்தான். கையில் சிகப்பு பையுடன். விரைந்துசென்று அவனருகில் நின்றான் குபேரன். "டேய்.. இந்தா. விரைவாகக் கொண்டுபோ. தங்கச்சி பசியோட இருப்பாள். நான் வரமாட்டன் எண்டு அம்மாட்ட சொல்லு. போ..போ.!". அவன் பையை வாங்கிக்கொண்டு திரும்பி நடந்தான். மீண்டும் மாமா அழைத்தார்.

" குபேரா. குபேரா. நில்லு."

நின்று திரும்பினான். சட்டென்று உள்ளே சென்று திரும்பிய அவன் மாமன் " இந்தா. இதயும் கொண்டுபோ. நீயும் அவளும் விளையாடுங்க. ஒரு பலூன் போதுமா என்ன."! என்று நான்கு ஐந்து வெவ்வேறு நிற பலூன்களை கொத்தாக அவனிடம் கொடுத்தார்.

பையில் இருக்கும் சாப்பாட்டை விட கையில் இருக்கும் பலூன்களே அவன் மனதை நிறைத் திருந்தது. ஓட்டமாக ஓடினான் வீட்டை நோக்கி. அவன் தங்கை அந்த பலூனுக்காகவோ என்னமோ விழித்துக்கொண்டிருந்தாள். நேரம் இரவு ஒன்பது முப்பது ஆகியிருந்தது.

* * *

## கனத்த இதயத்தோடு...

நான் சந்தித்த மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவர். மிகவும் எளிமையான மனிதர். இவை எல்லாவற்றையும் விட சிறந்த இலக்கியவாதியும் கூட. எனது கவிதை நூலின் அறிமுக நிகழ்வில் எனது நூலின் கருத்துரைகள் பகிர்ந்து கொண்டவர். எந்தவொரு இலக்கிய நிகழ்வில் சந்திக்க நேர்ந்தாலும் இன்னும் நிறைய கவிதைகளை எழுதுங்கள். உங்களுடைய கவிதைகள் பேசப்பட வேண்டும் என்பார். பேராசிரியர் செ. யோகராசாவின் மறைவுச் செய்தி கேட்டு மனம் கலங்கியது. அன்னாரின் இழப்பு எங்களுடைய சமூகத்திற்கு பேரிழப்பாகும். ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பூர்ணிமா கருணாகரன்**

## பண்பாளர்


சில நல்ல மனிதர்களின் இழப்பு நம்மை பல காலம் வருத்தும். அதே போல் நான் சில தடவைகள் அவருடன் பழகியிருந்தாலும் சாதாரண ஒரு இலக்கியவாதியாக ஆசானகவே உரையாடுவார். எமது கருத்துகளையும் ஏற்றுக் கொள்வார். பலரிடம் இந்தப் பண்பு இருப்பதில்லை. ஓரளவு பிரபல்யமடைந்து விட்டாலே அவர்கள் உரையாடல்கள் மாற்றமடையும். அவர்களின் நட்புவட்டம் மாற்றமடையும். அதை நானும் பலரிடம் உணர்ந்துள்ளேன். அமரர் யோகராசா அவர்கள் எங்கள் மனங்களை வென்ற வர். ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரும் ஒரு வரலாற்று நாயகன்.

**- கனக தீபகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❈ செங்கதிரோன்



# இரண்டாவது தாலி

வழமைபோல் அதிகாலை நான்கு மணிக்கே துயில் எழுந்துவிட்ட தனது மனைவி சுந்தரி குளியலறை செல்வது கந்தசஸ்டி கவசம் பாடலைக் கைபேசியில் போட்டுக் கேட்பது. சாமியறையுள் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுவது என அவளது எல்லா அதிகாலை நடமாட்டங்களினதும் அசுப்பை உணர்ந்து கொண்டு அரைத் தூக்கத்தில் கட்டிலில் கிடந்தான் கோகுலன்.

“இந்தாங்க! மேசையில தண்ணி எடுத்து வச்சிருக்கன். எழும்பிக் குடிங்க” என கோகுலனின் மனைவி அதிகாலை ஐந்தரை மணிபோல் அவனைத் தட்டி எழுப்பிவிட்டுத் தனது வழமையான நடைப் பயிற்சிக்காக வீதியில் இறங்கினாள்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரான மட்டக்களப்பு நகரின் சின்ன ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து ஆரம்பித்துச் செல்லும் பார்வீதிவழியே ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்த மட்டக்களப்பு வெளிச்ச வீட்டிற்கு அருகாமையில் பாலமீன்மடு கிராமத்தில் முகத்துவாரம் - சவுக்கடி வீதியின் தொடக்கப் புள்ளியில் பாலமீன்மடு ‘லைற் ஹவுஸ்’ விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்திற்கு எதிரே வீதியின் இடது புறத்தில் அமைந்திருந்தது கோகுலனின் வீடு.

கோகுலனின் வீட்டின் முன்னால் செல்லும் முகத்துவாரம் - சவுக்கடி வீதி நேரே சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரம் கடற்கரை நோக்கிச் சென்று பின் இடதுபுறம் திரும்பிச் சுனாமிக்குப் பின்னர் கடற்கரையோரமாக நடப்பட்டு வளர்ந்திருக்கும் சவுக்குமரக்காட்டின் ஓரமாகச் சென்று ஓரிடத்தில் சந்திபிரிந்து பிரதானவீதி தொடர்ந்து கடற்கரை ஓரமாகச் சவுக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்தடையும் போது ஆறரை மணியாகிவிடும்.

மனைவி தட்டியெழுப்பிவிடப் போர்வையை விலக்கிச் சோம்பல் முறித்துக்கொண்டே படுக்கையை விட்டெழுந்த கோகுலன் குளியலறை சென்று பல்விளக்கி. முகம் கழுவி பின் தன் மனைவி குசினிக்குள்ளே மேசையில் கோப்பையில் ஊற்றி வைத்துவிட்டுப் போயிருந்த இளஞ் சூடான நீரை எடுத்து மடமடவென்று பருகினான்.

பின் இயற்கைக் கடன்களை முடித்து விட்டு வீட்டின் முன்கதவைத் திறந்து வெளியே முற்றத்திற்கு வந்தான். சில்லென்று அடித்த அதிகாலைக் குளிர்காற்று அவனைத் தழுவியதில் மேனி சிலிர்த்தான். அன்றைய நாள் உதயத்தின் காற்று வழமைபோல் உடம்புக்கு இதமாக விருந்தது. சூரியன் உருண்டைத் தீம்பிழம்பாய் அடி வானத்திலிருந்து உதயமாகிக் கொண்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் மட்டக்களப்பின் உப்பேரியைக் கடந்து தெரிந்த வங்காள விரிகுடாக்கடல் இரையும் ஓசையும் காதில் விழ அன்றைய காலைப்பொழுதில் அதுவும் இதமாகவே இருந்தது. மட்டக்களப்பு வாவி கடலோடு கலக்கும் கழிமுகம்தான் முகத்து வாரம். வாவிக் கரையோரம் வளர்ந்திருந்த கண்ணாப்பற்றைகளும் தாழை மரங்களும் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தந்தன.

வீட்டுக்கு முன்னால் செல்லும் வீதியின் அக்கரையில் விளையாட்டு மைதானத்தின் ஓரமாக வரிசையாக நடப்பட்டிருந்த மல்லிகைச் செடிகள் நிறையப் பூத்து இலவம் பஞ்சைத்

நோக்கிச் செல்ல கிளைவீதி சிறுதூரம் நேர் பாதையாவும் பின் இரண்டு இடங்களில் மலைப் பாம்பாக வளைந்தும் சென்று திராய்மடு முருகன் கோயிலின் முன்னால் மீண்டும் நேராகி. முன்பு பிரப்பங் கொடிகளாலும் ஈச்சம் பற்றைகளாலும் நிரம்பி அடவியாகக் கிடந்து 'சுனாமி'க்குப் பின் ஊராய் எழும்பிய சுவிஸ் கிராமத்திற்குள் தலை நீட்டுகிறது.

கோகுலனின் மனைவி ஒவ்வொரு நாளும் காலையில் ஐந்தரை மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்த திராய்மடு முருகன் கோவில்வரை நடந்து சென்று திரும்புவது கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகக் கைக் கொண் டிருந்த பழக்கம். நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு வியர்க்க விருவிருக்க அவள் வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவியது போலக் காட்சியளித்தன. காலை எழுந்ததும் அம்மல்லிகைச் செடிகளில் பார்வையைப் பதிப்பது வழமைபோல் அன்றும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மனைவி நடைப்பயிற்சி முடிந்து வரும் வரைக்கும் விளக்குமாறினால் முற்றத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யத் தொடங்கினான். முற்றத்தின் நடுவில் நின்ற கறுத்தக்கொழும்பான் மாமரத்தின் பழுத்த இலைகளும் சருகுகளும் தரையில் கொட்டிக்கிடந்தன. அவற்றைக் கூட்டி அள்ளிக் குப்பைகள் போடுவதற்கென்றே வெட்டப்பட்டிருந்த குழியில் கொண்டு போய்க் கொட்டினான். வீட்டின் இரு பக்கங்களிலும் மதில் ஓரமாக நின்றிருந்த தென்னை மரங்களிலிருந்து கச்சான் காற்றடித்து விழுந்திருந்த பழுத்த ஓலைகளையும் பாளைகளையும் பூக்க நெட்டிகளையும் பன்னாடைகளையும் அப்புறப்படுத்தினான். வீட்டைச் சுற்றி வளவு நிறைய வளர்ந்திருந்த பூச்செடிகளுக்கும் மரக்கறிச் செடிகளுக்கும் வாழை மரங்களுக்கும் இடையே புகுந்து அவற்றிற்குச் செய்யவேண்டிய பராமரிப்பு வேலைகளையும் கவனித்தான். காலையில் எழுந்து வெயில் ஏறுமுன்னம் வீட்டு வளவைச் சுத்தம் செய்வதும் சிறுசிறு தோட்ட வேலைகளைச் செய்வதும் கோகுலனுக்கு எப்போதுமே திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றவை. காலையில் நடைப் பயிற்சிக்குப் போகாத அவனுக்குத் தேகப் பயிற்சியாக அவை அமைந்தன. ஆறரை மணிக்கு மனைவி நடைப்பயிற்சி முடிந்து வந்ததும் கோப்பியைக் குடித்துவிட்டு வெயில்ஏறி உடல் வியர்க்கும் வரைக்கும் வேலைகளைத் தொடர்வான். வேலைகளில் கவனத்தைக் குவித்திருந்த கோகுலன், நடைப்பயிற்சிக்குப் போயிருந்த கோகுலனின் மனைவி வழக்கமாக வீட்டை வந்தடையும் ஆறரை மணிக்கு முன்னரே வந்து 'கேற்' றைத் திறக்கும் சத்தம் கேட்டு வாசலை நோக்கினான். மனைவி முகத்தில் கலவரத்துடனும் பதட்டத்துடனும் கோகுலனை நோக்கி அருகில் வந்தாள்.ஏதோ என்னவோ என்றெண்ணிய கோகுலன்.

"என்ன சுந்தரி! இண்டைக்கு நேரத் தோட வந்திட்டா. முகம் ஒரு மாதிரியா இருக்கு. பதட்டப்படுறா! என்ன நடந்தது?" என்றான்.

"எண்ட தாலிக்கொடிய கள்ளனொருவன் பிச்சிட்டான் அப்பா" என்று தொண்டைக்குள்ளிருந்து வார்த்தைகள் வெளிவராமல் விழுங்கி விழுங்கிச் சொன்னாள் சுந்தரி. சொல்லிவிட்டுக் கண்கலங்கி நின்றாள். அவளது முகம் பேயறைந்தது போலிருந்தது. சுந்தரியின் முதுகில் வாஞ்சையோடு தட்டிய கோகுலன், "பதட்டப்படாத. ஆறுதலாக நடந்ததச் சொல்லு" என்று அவளை ஆசுவாசப்படுத்தினான்.

சுந்தரி கலவரமடைந்தவளாக . அந்தச் சம்பவம் மனதில் ஏற்படுத்திய பாதிப்பு பயம் என்பவற்றால் பதட்டமடைந்தவளாக தாலிக் கொடியைக் கள்ளனிடம் பறிகொடுத்ததனால் ஏக்கமுற்றவளாக விட்டுவிட்டுத்தான் - துண்டு துண்டாகத் தான் நடந்ததைச் சொன்னாள். கோகுலனும் அவளை அடிக்கடி ஆசுவாசப்படுத்தினான். நடந்தது முழுவதையும் துருவித் துருவித் துண்டுதுண்டாகத்தான் கேட்டு அறிய முடிந்தது. சற்றும் எதிர் பாராத அந்தச் சம்பவம் சுந்தரியை அதிர்ச்சியூட்டி அவ்வாறு ஆக்கிவிட்டிருந்தது.

நடந்தது இதுதான்.

கோகுலனின் மனைவி சுந்தரி வழமை போல் முகத்துவாரம் - சவுக்கடி பிரதான வீதியால் நடந்து சென்று திராய்மடு முருகன் கோயிலுக்குச் செல்லும் கிளை வீதியில் இறங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுதூரம் சென்றதும். வீதிக்குக் குறுக்கே நிர்மாணிக்கப் பெற்றிருந்த 'வோக்' கின் இடதுபுற மேற்சுவரின் மீது ஒருவன் குந்திக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறாள். 'வோக்' இன் அருகில் வீதியின் இடதுபுற ஓரத்தில் எருக்கலைச் செடிகள் உயர்ந்து வளர்ந்திருந்த காரணத்தால் அச்செடிகளின் மறைவில் குந்திக்கொண்டிருந்த அவனைப் பிரதான வீதியிலிருந்து கிளைவீதியுள் நுழையும் போது அவதானிக்க முடியவில்லை. 'வோக்'கை நெருங்கும்போதுதான் அவனைக் கண்டிருக் கிறாள். அவனைக் கண்டதும் காணாததுபோல வீதியின் வலதுபுற ஓரத்திற்குப் போய்ச் சற்று வேகமாக நடக்க முற்பட்டபோது அவன் சிங்களத்தில் ஏதோ சத்தமிட்டுக் கூறியிருக் கிறான். அது சிங்களம் ஒழுங்காகத் தெரியாத தமிழன் ஒருவனின் கொச்சைச் சிங்களமாகவே இருந்திருக்கிறது. அவன் கூறியது காதில் விழாததுபோல் பாவனை பண்ணிக்கொண்டு மேலும் வேகமாக நடக்க முற்பட்டபோது பின்னால் ஓடி வந்து சுந்தரியின் கையைப் பிடித்து அவளை நிறுத்தியிருக்கிறான். சுந்தரி சப்பாத்துக்காலால் அவனை உதைக்க விழுந்தி ருக்கிறான். வீதி வளைந்து வளைந்து செல்வ தால் அவ்வழியை நாடாமல் திராய்மடு முருகன் கோயிலை நோக்கிக் குறுக்கு வழியில் மணல் பாங்கான இடத்தால் ஓடியிருக்கிறாள். ஓடும்போது மணலில் கால்புதைந்து நிலத்தில் விழவும் பின்னால் துரத்திவந்த அவன் சுந்தரியை எழும்பவிடாமல் மணலில் அமரத்திப் பிடித்துக் கொண்டு கழுத்தில் அணிந்திருந்த தாலிக் கொடியைக் கழற்ற முற்பட்டிருக்கிறான். சுந்தரி ஒரு கையால் தாலிக்கொடியைத் தன் கழுத்தோடு அமர்த்திப் பிடித்துக்கொண்டு மறுகையால் அவனது பிடியிலிருந்து விடுபட அவனோடு மல்லுக் கட்டியிருக்கிறாள். அப்போது வீதியில் வந்துகொண்டிருந்த முதியவர் ஒருவர் சுந்தரிக்கு உதவும் நோக்குடன் அவனும் சுந்தரியும் அமளிப்பட்டு இழுபட்டுக்கொண்டிருந்த இடத்தை நோக்கிவர எத்தனித்திருக்கிறார். அப்போது அவன் கையில் வைத்திருந்த கறுப்புநிறத் துப்பாக்கி போன்ற பொருளைத் தூக்கிக் காட்டி அம்முதியவரை அருகில் வரவேண்டாமென்று எச்சரித்திருக்கிறான். முதியவர் பயத்தில் திரும்பிப் போய்விட்டார். அவன் வைத்திருந்தது விளையாட்டுத் துப்பாக்கி என்பதுதான் சுந்தரியின் அனுமானம். இறுதியில் எப்படியோ தாலிக்கொடியை அகற்றி அபகரித்துக் கொண்டு அவன் ஓடிப் போய்ச் சற்றுத் தூரத்தில் தரையில் கால்களைக் குத்தியபடி மோட்டார் சைக்கிளோடு காத்திருந் தவனின் பின்னால் ஏறி அமர்ந்து கொள்ள மோட்டார் சைக்கிள் ஊருக்குள் ஓடி மறைந்து விட்டது. அதன்பின் அவள் பதட்டத்துடன் வேகமாக நடந்து, வீட்டை அடைந்திருக்கிறாள்.

தாலிக்கொடி அவளது கழுத்தைத் தேய்த்துக் காயப்படுத்தி இலேசாக இரத்தச் சிவப்பாகத் தடம் போட்டிருந்ததையும் கோகுலன் அவ தானித்தான். சம்பவம் முழுவதையும் மனைவியிடம் கேட்டறிந்த கோகுலன் எந்தச் சலனங்களுமில்லாமல்

"சுந்தரி! கவலப்படாத. தாலிக்கொடி பொருள் தானே. போகட்டும். நல்லகாலம் நீ ஓடும்போது 'றோட்'டில விழுந்து அடிபடல்ல. விழுந்து தலயில அடிபட்டிருந்தா என்ன நடந்திருக்கும். அவனுக்குச் சப்பாத்துக்காலால உதைச்சதற்கு அவன் கோபத்தில உன்ன அறம்புறமாத் தாக்கிக் காயப்படுத்தியிருக்கலாம். கழுத்த நெரிச்சு உன்னக் கொல்லக்கூட முற்பட் டிருக்கலாம். உயிருக்கு எந்த ஆபத்துமில்லாம உடம்பில பலமான காயங்களெதுவுமில்லாம நீ அவனிட்ட இருந்து தப்பி வந்ததே பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம். பொருள் இழப்புத்தானே. போகட்டும். பிறகும் வாங்கிக் கொள்ளலாம். நடந்ததப் பற்றி ஒன்றும் 'சீரியஸ்' ஆக யோசியாத. தலைக்கு வந்தது தலைப்பாகையோட போய்த்து என்று எடுத்துக்கொள்" என்று கூறி முடித்தான்.

சுந்தரியின் முகத்தில் பட்டென்று பதட்டம் நீங்கியது. கலவரம் காணாமல் போனது. பயம் தெளிந்தாள்.

வாடிய பயிர் மழை நீரைக் கண்டதும் மதாளித்து எழுவதுபோல அவளின் முகம் மாறியது.

ஆனாலும், எதுவும் பேசாமல் அமைதி யாகச் சில நாழிகைகள் கோகுலனின் முகத்தை அண்ணாந்து பார்த்தபடி நின்றாள்.

"சுந்தரி! தாலி ஒரு அடையாளம் தானே. இன்னொரு தாலி கட்டப் போறன். இரண்டாவது தாலியையும் உன்ர கழுத்திலதானே கட்டப் போறன். இன்னொருத்தி கழுத்தில இல்லத் தானே" என்று கோகுலன் சிரித்துக் கொண்டே தொடர்ந்தான்.

"தாலி இரண்டாவதாக இருக்கலாம். கழுத்துத்தான் இரண்டாவதாக இருக்கக் கூடாது" என்று கூறி மறுபடியும் சிரித்தான்.

"சும்மா போங்க! உங்களுக்கு எப்பவும் பகிடிதான். நேரம் காலம் தெரியாம" என்று கூறிய சுந்தரியின் முகத்தில் இலேசான முறுவல் முகையவிழ்ந்தது.

கோகுலன் சொன்னான். "ஏழு மணியாப் போய்த்து. போய்க் கோப்பியப் போடு"

சுந்தரி வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே குசினிக்குள் நுழைந்தாள். கோகுலன் அவளைப் பின் தொடர்ந்தான்.

* * *

# பெரும் துயரோடு நான்

பேராசிரியர்.செ.யோகராஜா நம்மை விட்டு போய் விட்டார்.கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நான் இணைந்த நாள் தொடக்கம் இன்று வரை என் நண்ப ராய்.அறிவார்ந்த கருத்துக்கள் பகிரும் அறிஞராய். பக்கத்து வீட்டுக் காரனாய். அவ்வப்போது ஆலோசனை சொல்லும் என் எழுத்துகளை விமர்சிக்கும். பேராளுமையாய் தொடர்ந்த பேராசியரின் இழப்பு தமிழியலுக்கு பெரும் இழப்பு. என்னைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட இழப்பும் கூட.இதை நான் இப்போது எழுத உடல் நடுங்க உணர்வுகள் ஒடுங்க இதை எழுதுகிறேன் .மகள் அனாமிகாவோடு அன்பும் பாசமும் மிக்கவர்.

கடந்த 19 வருடங்களாக சுனாமி நினைவாய் அனாமிகா கலை இலகிய நிகழ்வுகளில் தவறாது பங்குகொண்டு தன் நேசிப்பை வெளிப்படுத்தி வந்தவர்.சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் சென்ற ஆண்டு நடைபெற்ற அனாமிகா கலை இலக்கிய கூடலில் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்த பெருமகன் .என் செயல்பாடுகளுக்கு எப்போதும் ஊக்கம் தந்து உற்சாகப்படுத்தும் உற்ற நண்பர். என்னை ரசிக்கும் மா ரசிகர் எனது நாடகங்கள் கலைச் செயல்பாடுகளை ஆர்வமாய் எப்போதும் மகிழ்வோடு கொண்டாடி மகிழும் உள்ளம். பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மீது அவர் ஆய்வுகள் பால் தீவிர ஈடுபாடு கொண்டவர். பேராசிரியர் கைலாசபதியின் மாணவர். பேராசிரியர் கைலாசபதி இறந்த மாதத்திலேயே இறந்திருக்கிறார்.ஓடி ஓடி தமிழ்ப்பணியாற்றிய தமிழியலாளர் இன்று ஓய்ந்து கிடக்கிறார். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பதற கேற்ப வாழ்ந்து தன் வாழ்வை ஒரு முன்னுதார ணமாக்கிச் சென்றுளார்.

**பேராசிரியர் பால சுகுமார்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது கால்

சனிக்கிழமை காலை பத்து மணி. பட்டு வேட்டியும் அதற்கேற்ப பளபளப்பான ஒரு மஞ்சள் நிறத்தில் ஒரு ஷேர்ட்டும் தோளில் மடிப்புக் கலையாத உத்தரியமும் அணிந்து கண்ணாடி முன்னால் நின்றேன். "வயது அறுபதை அண்மித்தாலும் இன்னும் மாப் பிள்ளை போலத் தாண்டா இருக்கிறாய்" என்று எனக்கு நானே பெருமையாகச் சொல்லிக் கொண்டேன்.

"உங்கள் அழகை நீங்களே ரசித்தது போதும். நேரமாச்சுது வெளிக்கிடுங்க. லண் டன் டிராஃபிக்கில் எவ்வளவு நேரம் எடுக்குமோ தெரியாது. கல்யாணத்தில் தாலி கட்ட முன்னமாவது போய்ச் சேர வேண்டாமா?"



என்று சொல்லிக் கொண்டே தங்க முலாம் பூசப்பட்ட கைப்பிடியைக் கொண்ட எனது கைத்தடியினைக் கொண்டு வந்தாள் மாதங்கி. என் மூளையில் உதிக்கும் எண்ண அலை களை நான் ஒரு வார்த்தை பேசாமலே புரிந்து

**ந. ஜெயரூபலிங்கம்**

கொள்ளும் அசாத்தியத் திறமை கொண்டவள் எனது மனைவி.

நான் எந்த நேரத்தில் எந்த உடை அணிய வேண்டுமென்பதும், முக்கியமாக அவளுடன் சேர்ந்து போவதானால் அவள் அணியும் சேலைக்கு அல்லது டிரெஸ்ஸிற்கு ஏற்ற நிறத்தில் இருக்க வேண்டுமென்பதும், கையில் எந்த மணிக்கூடு கட்ட வேண்டுமென்பதும், எந்தக் கைத்தடி கொண்டு போக வேண் டுமென்பதுமான சில்லறை விஷயங்கள் அனைத்தும் என் பெண்டாட்டியின் தேர்வுதான். எடுத்து வைக்கப் பட்டிருப்பவற்றைச் சரியாக அணியும் அதிமுக்கிய கடமை மட்டும் எனக்குச் சொந்தமானது. சும்மா சொல்லக் கூடாது. என் நண்பர்கள் நான் நிற ஒற்றுமையுடன் நவ நாகரீகமாக உடுத்திக் கொண்டுவருவது கண்டு வியந்து போவதும் உண்டு. ஆள்பாதி ஆடை பாதி எனும் பழமொழியை எனக்கு என் மனைவி அடிக்கடி நினைவு படுத்துவாள். எனது தோற்றத்துக்கான பெருமை அனைத்தும் எனது தர்மபத்தினிக்கே உரித்தானது. ஆங் கிலேயர்கள் மனைவியைக் குறிப்பிடும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக "மை பெட்டர் ஹாஃப்" என்று சொல்வார்கள். அது என் மனையாளுக்கு நூறு சத வீதம் பொருத்தமானது.

பல வருடங்களுக்கு முன்னால் ஒரு நாள் நான் அலுவலகத்துக்குக் கொஞ்சம் கண்களைக் கவரும் பிங்க் நிறத்தில் ஷேர்ட் அணிந்து சென்றேன். அங்கிருந்த நண்பர்களாகப் பழகும் சக ஊழியர்கள் சிலர் என்னைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள். முக்கியமாக ஜேசன் எனும் ஆங்கிலேய நண்பர் என்னிடம் நேரடியாகவே கேட்டார் "எப்படி இந்த நிறத்தில் ஷேர்ட் வாங்க வேண்டும் போல் உனக்குத் தோன்றியது?".

"நான் எனக்காக ஒரு ஷேர்ட் கடைசியாக எப்போ வாங்கினேன் என்பதே ஞாபகமில்லை. என் மனைவி தருவதைப் போட்டுக் கொண்டு வரும் ஒரு அடக்க ஒடுக்கமான புருஷன்" என்று நான் சொன்ன பதிலைக் கேட்டு ஜேசன் மட்டுமல்ல அங்கிருந்த ஆண் பெண் இருபாலாரான சக ஊழியர்களும் ஆச்சரியத்துடன் ஒரு அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல என்னைப் பார்த்தார்கள். மத்தியான நேரம் மனைவியுடன் தொலைபேசியில் பேசும் போது ஜேசன் என்னிடம் எனது ஷேர்ட்டின் நிறம் பற்றிக் கிண்டலாக விசாரித்ததைச் சொன்னேன்.

"கிணற்றுத் தவளை போல் இருக்காமல் இன்றைய ஃபாஷன் டிரெண்ட் என்னவென்று ஜேசனை அறிந்து கொள்ளச் சொல்லுங்கள். நேற்று இரவு கூட சானல் 4 இல் செய்தி வாசித்தவர் பிங்க் நிறத்தில் தான் ஷேர்ட் அணிந்திருந்தார் என்று ஜேசனிடம் சொல்லுங்கள்" என்று எனக்குப் பதில் சொன்னாள். அப்படியே அதை ஜேசனிடம் ஒப்புவித்தேன். அன்று கிடைத்த அறிவுரையின் காரணமாக அதன் பின் நான் அணியும் எது பற்றியும் ஜேசன் கருத்துச் சொன்னதே இல்லை.

என்னிடம் மூன்று கைத்தடிகள் உண்டு. ஒன்று தினசரிப் பாவனைக்கு. அது ஒரு சாதாரண மரக் கைப்பிடி கொண்ட கைத்தடி. இரண்டாவது கறுப்பு நிறத்தில் பளபளப்பான கைத்தடி நான் கோட் சூட் அணிந்து போகும் போது கொண்டு செல்வது. மூன்றாவது இன்று என் கையில் தரப்பட்டிருக்கும் கைத்தடி. பட்டு வேட்டியுடன் போகும் போது கொண்டு செல்வது. தங்க முலாம் பூசப்பட்ட இக்கைத் தடியின் கைப்பிடி பட்டு வேட்டிக்கு மேட்சாகுமாம் என்பது மாதங்கியின் பொன்னான கருத்து.

எனது இடது முழங்காலில் ஒரு பிரச்சினை. கொஞ்சத் தூரம் நடந்தாலே வலி உயிரை வாங்கும். ஆப்பரேஷன் செய்து பார்க்கலாம் என்று டாக்டர் சொன்னாலும் எனக்கு அதில் உடன் பாடில்லை. இயன்றளவு தள்ளிப் போடலாம் என்று இருக்கிறேன். கடந்த இரண்டு வருடங்களாக இந்த மூன்று கைத்தடிகளும் இடது முழங்காலுக்கு அழுத்தம் கொடுக்காமல் நடப்பதற்கு உதவியாக எனது மூன்றாவது காலாகப் பயன்படுகின்றன. இவற்றின் உதவியுடன் இதுவரை எனது முழங்கால் பிரச்சினை எனது அன்றாட வாழ்வைப் பாதிக்காதபடி நன்றாகவே சமாளித்து வருகிறேன்.

இங்கிலாந்தில் கடந்த நூற்றாண்டுகளில் பிரபுக்களாக இருந்தவர்கள் பெரிய மாளிகைகளில் வாழ்ந்தார்கள். அவற்றில் சில தற்காலத்தில் ஹோட்டல்களாகப் பயன்படுத்தப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகின்றன. அந்த மாளிகைகளிலிருக்கும் பாரிய மண்டபங்கள் திருமணங்கள் மற்றும் வைபவங் கள் நிகழ்த்துவதற்குப் பயன்படுத்தப் படுவதுண்டு. அப்படி ஒரு மாளிகையில் தான் எனது உறவினர் தனது மகனின் திரும ணத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

திருமண அழைப்பில் காலை பத்து மணிக்கு வைபவம் ஆரம்பிக்கும் எனப் போடப்பட்டிருந்தது. எமது இளமைக் காலத்தில் நாங்கள் அழைப்பிதழில் போடப்பட்டிருக்கும் நேரத்துக்குச் சரியாக மண்டபத்துக்குப் போவோம். ஆனால் அங்கு அப்போது தான் அலங்காரங்கள் செய்து கொண்டிருப்பார்கள். நம்மவர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்தாலும் நம்ம ஊர்ப் பழக்கத்தைக் கை விடுவதில்லை என்று தெளிவாகப் புரிந்த பின்னர் அழைப்பித ழில் போட்டிருக்கும் நேரத்துக்கு ஒரு மணி நேரம் பிந்தி நாங்கள் போகப் பழகிக் கொண் டோம். ஆனால் இத்தடவை அது தப்பான கணக்கீடு என்று புரிந்து கொண்டேன். வாகனத் தரிப்பிடத்தில் கார் நிறுத்துவதற்கு இடமில்லை. ஹோட்டல் ஊழியர் ஒருவர் மேலும் கொஞ்சத் தூரம் போனால் இரண்டா வது கார் பார்க் இருக்கிறது என்று சொல்லி வழி காட்டினார். ஒரு வழியாகக் காரை நிறுத்தி விட்டு ஐந்து நிமிடம் நடந்து மண்டபத்தை நானும் மாதங்கியும் வந்தடைந்தோம்.

திருமண மண்டப வாசலில் அழகான ஒரு வளைவு பொருத்தப்பட்டிருந்தது. மணவ றையில் மாப்பிள்ளையும் மாப்பிளைத் தோழனும் இருந்தார்கள். மணவறைக்கு வலது பக்கத்தில் ஒரு மேடையில் அமர்ந்து நாதசுவரக் கலைஞர்கள் தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கவாத்தியமாக இரண்டு மேளக் கலை ஞர்களும் தூள் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். எமது செவிப்பறைகளைப் பாதுகாப்பதானால் இந்தக் கலைஞர்களிடமிருந்து சற்றுத் தொலை விலிருப்பதே உகந்தது என உடனேயே முடிவெடுத்துக் கொண்டேன்.

இரண்டு இளம் பெண்கள் எங்களை வரவேற்று ஒரு சிறிய பலகாரத் தட்டுடன் குளிர் பானமும் தந்தார்கள். மண்டபம் முக்கால்வாசி நிரம்பியிருந்தது. அதிகம் ஆட்களில்லாத ஒரு ஆசன வரிசையில் போய் உட்கார்ந்தோம். கைத் தடியைப் பக்கத்து நாற்காலியில் சாய்த்து வைத்து விட்டுப் பலகாரத் தட்டிலிருந்த பயத்தம் பணியாரத்தைச் சாப்பிடத் தொடங்கினேன்.

"சித்தப்பாவும் சித்தியும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்தில போய் இருப்பம் வாங்கோ" என்று ஒரு பரிச்சயமான குரல் காதில் விழுந்தது.

திரும்பிப் பார்த்தேன். எனது பெரியப்பாவின் மகன் சண்முகம் அண்ணாவை அவரது மகன் ராம் கையில் பிடித்துக் கூட்டி வந்தான்.

"சித்தப்பாவைப் பாருங்க. வாக்கிங் ஸ்டிக் கோட வந்திருக்கிறார்." ராம் சண்முகம் அண்ணாவை எனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு சொன்னான்.

"அண்ணா. காலில என்ன பிரச்சினை? நடக்கச் சிரமமென்றால் ராம் சொல்வது போல ஒரு வாக்கிங் ஸ்டிக்கோட வரலாம் தானே"

"எனக்கு கொஞ்சம் ஆர்த்திரைட்டிஸ் இருக்குதடா. இப்ப வயசாக நடக்கக் கொஞ்சம் கஷ்டம் அதுதான் இவன் கையைப் பிடிச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தனான். அவனுக்கு அது வெட்கமாக இருக்குது போல." சண்முகம் அண்ணன் சொன்ன விதத்தில் தெளிவாகத் தெரிந்தது அவருக்கு கைத்தடியோடு வந்திருக்கலாம் என்று ராம் சொன்னது பிடிக்கவில்லை என்பது.

"சித்தப்பா, எனக்கு ஒரு வெட்கமுமில்லை. அவர் சுதந்திரமாக யார் தயவு மில்லாமல் வாக்கிங் ஸ்டிக்கோட நடக்கலாம். முன்பெல்லாம் காலையில எழும்பி அரை மணித்தியாலமாவது நடக்கப் போவார். காலில் வலிப்பதால் இப்போ போவதில்லை. வாக்கிங் ஸ்டிக்கோடு மெதுவாக நடந்தாலும் வெளியில போய் நடந்தால் நல்லது அல்லவா?" ராமின் ஆதங்கம் நியாயமாகத்தான் பட்டது எனக்கு.

"அவன் சொல்கிறதும் சரிதானே. நீங்கள் ஏன் வேண்டாமென்று சொல்கிறீங்க?" என் கேள்விக்கு சண்முகம் அண்ணனிடமிருந்து பதில் வரவில்லை. பலகாரத் தட்டிலிருந்த முறுக்கை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"அவர் சொல்ல மாட்டார் சித்தப்பா. அவருக்கு வாக்கிங் ஸ்டிக்கோட வெளியே போனால் மரியாதைக் குறைவாம். மற்றவர்கள் தன்னைக் குறைவாக எடை போடுவார்களாம். அதாவது இவரின் வறட்டுக் கௌரவம் தான் காரணம்." ராம் பொரிந்து தள்ளினான்.

"ஓமடா. என்னோட வறட்டுக் கௌரவம் தான் காரணம். உனக்கு என்னைக் கூட்டிக் கொண்டு வாறது ஏலாதென்றால் சொல்லு. நான் வேறு யாரையாவது கேட்கிறன் அல்லது வீட்டில இருக்கிறன்." கொஞ்சம் கடுப்பான குரலில் அண்ணனின் பதில் வந்தது.

என்னை விடக் கிட்டத்தட்ட பத்து வயது மூத்த சண்முகம் அண்ணனுக்குக் கைத்தடியின் உதவியோடு நடப்பது மரியாதைக் குறைவாகத் தெரிகிறது. நான் இரண்டு வருடங்களாக இப்படி எதிர்மறையாக ஒரு தடவை கூடச் சிந்திக்காமல் என் மனைவி வாங்கித் தந்த கைத்தடிகளைத் தினமும் பயன்படுத்துகிறேன். பெண்டாட்டி தருவதை அணிந்து கொண்டு போகும் பழக்கத்தால் நான் எனது சுயமாகச் சிந்திக்கும் திறனை இழந்து விட்டேனோ? என்று ஒரு கேள்வி என் மனதில் எழுந்தது.

நேரடியாக அண்ணன் சொல்லா விட்டாலும் அவரது மனதில் என்னைக் குறைவாகத் தான் எடை போடுவாரென்பது தெரிகிறது. எனது சுயகௌரவத்துக்கு இழுக்கு வருவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நான் வாக்கிங் ஸ்டிக்கோடு வருவது எவ்வளவு நியாயமானது என்று அவருக்கு விளக்கிச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன்.

"அண்ணே, இதிலென்ன வெட்கமிருக்கிறது. சிவாஜி கணேசன் பழைய படங்களில் எவ்வளவு ஸ்டைலாக வாக்கிங் ஸ்டிக்கோட நடந்து வருவார். அது மட்டுமல்ல லண்டன் ஒக்ஸ்ஃபோர்ட் ஸ்ட்ரீட்டில் கைத்தடிகளுக்கும் குடைகளுக்கும் என்று தனிக் கடையே உள்ளது. ஒரு காலத்தில வாக்கிங் ஸ்டிக் ஆண்களுடைய ஃபாஷன் அக்செஸரியாக இருந்தது. ஆயிரத்தெழுநூறுகளில் லண்டனில் வாக்கிங் ஸ்டிக் எப்படிக் கொண்டு போக வேண்டு மென்று எல்லாம் விதிமுறைகள் இருந்தது மட்டுமல்லாமல் லைசன்ஸ் வேற எடுக்க வேண்டும். வாக்கிங் ஸ்டிக் கின் வரலாற்றைப் படிச்சுப் பாருங்க. அதை விட முக்கியமாக எனக்கு இது முழங்காலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியில்லாமலிருக்க உதவுகிறது. அதற்கு நான் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க முடியுமோ? எனக்கு வலி வந்தால் அதை அனுபவிப்பது நான் தானே. அதனால் தான் நான் வாக்கிங் ஸ்டிகோடு வெளியில் போகிறேன்" நான் வாக்கிங் ஸ்டிக்கின் அருமை பெருமைகளைப் பற்றிச் சொன்னதைக் கவனமாக அண்ணன் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் பதிலேதும் வரவில்லை. அந்நேரத்தில் சரியாக மணப்பெண் மண்டபத்துக்குள் பிரவேசித்தாள்.

..........

ஞாயிற்றுக்கிழமை என்பதால் அலாரம் வைக்காத நாள். எழுந்து நேரத்தைப் பார்த்தேன் ஏழு மணியாகிறது. மாதங்கி ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறாள் என்பதை அவளிடமிருந்து வந்த மெல்லிய குறட்டைச் சத்தம் உறுதிப் படுத்தியது. அவளது நித்திரையைக் குழப்பாமல் மெதுவாக எழுந்து கீழே வந்து ஒரு தேநீர் போட்டேன். வழக்கம் போல் தேநீர் குடித்தபடி எனது ஐபோனில் சமூக வலைத் தளங்களில் எனது பார்வை இருந்த போதிலும் என் ஆழ் மனதில் நேற்று ராம் சொன்னது தான் திரும்பத் திரும்பப் பழைய தேய்ந்த கிராமபோன் ரெக்கார்ட் மாதிரி ஓடிக் கொண்டிருந்தது. எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்த நினைவுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. காலைக் கடன்களை முடித்து விட்டு வெளியில் போக ஆயத்தமானேன்.மே மாதக் கடைசி வாரம் என்பதால் லண்டனில் சூரியன் அதிகாலை ஐந்து மணியளவிலேயே உதித்து விடும். கூகிளின் தரவுப்படி ஏற்கனவே வெப்பநிலை பதினெட்டுப் பாகை செண்டிகிரேட் ஆகி விட்டது. ஷோர்ட்சும் ரீஷேர்ட்டும் அணிந்து கொண்டு புறப் பட்டேன்.

கதவோரமாக இருந்த எனது கைத்தடி "என்னை விட்டு விட்டுப் போகிறாயா?" என்று கேட்பது போல ஒரு பிரமை. ஒரு கணம் நின்று யோசித்து விட்டுத் திடமான முடிவுடன் கைத்தடியை எடுக்காமல் வெளியில் இறங்கினேன்.

வழக்கத்தை விடக் கொஞ்சம் மெதுவாகவே நடந்தேன். பத்து நிமிடமாவதற்குள் இடது முழங்காலில் வலி ஆரம்பித்துவிட்டது. வலியைப் பொறுத்துக் கொண்டு மெதுவாக மேலும் ஒரு ஐந்து நிமிடங்கள் நடக்க அதற்கு மேல் என்னால் முடியவில்லை. முழங்கால் வலி உயிரை எடுக்கும் வலியாக அதிகரித்து விட்டது. ஒரு பேருந்துத் தரிப்பு கண்ணில் பட அதில் போய் உட்கார்ந்து என் காலுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுத்தேன்.

ஒரு சில நிமிடங்கள் போக வலி குறைந்து விட்டது. சாலையின் எதிர்பக்கமாக இருந்த வளைவில் ஒரு வயதான ஜோடி திரும்பியது என் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தத் தம்பதிகள் வேறு யாருமல்ல. கையில் வாக்கிங் ஸ்டிக்குடன் மெதுவாக நடந்தாலும் கம்பீரமாக நடக்கும் சண்முகம் அண்ணாவும் அண்ணியும் தான். அண்ணியின் கையைப் பிடிக்காமல் சுதந்திரமாகத் தனது கைத்தடியின் உதவியோடு சண்முகம் அண்ணா நடந்து போகிறார். அண்ணியும் அவருடன் பேசிக் கொண்டு மகிழ்ச்சியாகப் போகிறார். அவர்கள் சாலையின் மறுபக்கத்தில் சென்றதால் நான் இப்பக்கத்தில் பேருந்துத் தரிப்பில் இருப்பதைக் கவனிக்காமல் நடந்து சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயான்

நட்சத்திரங்கள் நாலாபக்கமும் சரம் சரமாக தொங்கிக் கொண்டிருக்க கண் ணைக் கூசும் அந்த ஒளிவட்டம் மெல்ல மெல்ல விரிந்து நில வாகி அதன் மூடி திறந்தது. உள்ளிருந்து ஒரு உருவம் மங்க லாய் கையை நீட்டியது வா வா என்று அழைத்தது. மெல்ல அதன் கையை பற்ற நினைக்கையில் போகாதே போகாதே என்ற குரல்..

அம்மாதான் நின்று கொண்டிருக் கிறாள். முன்னை விட மெலிந்து கருத்து எலும் பும் தோலுமாய் போகாதே போகாதே திரும்பத் திரும்ப சொல்லுகிறாள்.

அதைத் தொடர்ந்து வேகமாகக் கதவு தட்டப்பட்டும் ஓசை.

ஆயான்..எழுந்தாச்சா என்ன பண் றீங்க..

சே..கண்டது கனவா?

எரிச்சலானார் பரசு.உடம்பெல்லாம் விண் ணென்று வலித்தது.இனி எழுந்து அடுப்பு பத்தவச்சு காப்பி போடணும்.

இதுக்குத்தான் ஒரு பொம்பிளை கூட இருக்கணும் கசங்கிய மனசை அதட்டி அடக்கிவிட்டு எழுந்தார்.

பாக்கியம் கையில் பால் குவளையோடு வாசலில் நின்றிருந்தாள்.

பெரியாச்சி வீட்டுல தெவசம்.நாச்சி காய்கறி வாங்கியாந்துட்டானாம். ஆச்சி ஞாபகப்படுத்த சொன்னாக.ஆமாம்.மணி ஆறைத் தாண்டி விட்டது.

"நான் வர்றேன்.நீ போ."

பாக்கியம் இன்னும் தயங்கியபடி அங்கேயே நிற்க..

"நேத்து மவளோட கொலுசு தொலைஞ்சு போச்சு.வேப்ப மரத்தடியில தான் விளையாடி னாளாம்.நானும் சல்லடை போட்டு சலிச்சு பார்த்திட்டேன்.கிடைக்கல.ஆயான் ஒரு எட்டு வந்தா கிடைச்சிடும்"

'ஆயான் பூமியைப் பார்க்கப் பிறந்தாராம். அதனால் அவருக்குப் புதையல் யோகம் இருப்பதாக' அம்மா சொல்வாள். அது உண்மையோ என்னவோ தினம் தெருவில் நடக்கும்போது எதையாவது கண்டெடுத்து விடுவார். இப்போதெல்லாம் யார் எதைத் தொலைத்தாலும் அவரிடம் தான் வருகிறார்கள்.

"தெவச வேலை நிறைய கிடக்கு.பார்ப் போம்"

முத்தம்மா வீட்டுக்காரர் தெவசம்.பரசு போய் தான் தானத்துக்கு காய் எடுத்து வச்சு கூடமாட நிக்கணும்.

**தேன்மொழி**

இன்னைக்கு சமையல் தடபுடலா இருக்கும். பருப்பு நெய்.இஞ்சி பச்சடி.பூவன் வறுவல் காராகருணை பொரியல் புடலை கூட்டு கொத்தவரை உசிலி அவரைக்காயும் தாதுருண்டையும் போட்ட பொரிச்ச குழம்பு வாழைத் தண்டும் ஆமவடையும் போட்ட மோர்க் குழம்பு அரிசிப் பாயாசம் அப்பளம் வடைனு பெரிய மெனு. நேத்தே லிஸ்ட் போட்டாச்சு.

முத்தம்மாவின் சின்ன பொண்ணு பக்கத்து தெருவிலிருந்து வந்து பக்குவமா சமைச்சிடும். நல்ல சாப்பாடு சாப்பிட்டே பல நாளாச்சு.நாக்கு ஊறியது பரசுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலையும் தூளையும் கொதிக்க வச்சு வடிகட்டற சமயம்.. மறுபடியும் கதவு தட்டற சத்தம். முத்தம்மா பேத்தி கௌசி எட்டிப் பார்த்தாள். ஆயான்..மாவிலை இரண்டு கொத்து வேணுமாம்.

கொண்டுவரேன் போ.

சொல்லி முடிப்பதற்குள் உள்ளே வந்து விட்டாள்.

ஆயான்..சேப்புப்பழம் பறிச்சுக்குறேன்.

என்றபடி கொல்லைக்கு ஓடினாள்.

பரசுவுக்கு எரிச்சலாய் வந்தது.அவருக்கு குழந்தைகளே ஆகாது.ஏதாவது குரங்குத்தனம் பண்ணுவார்கள். பத்து வயசு ஆகப்போகுது. அவங்க பாட்டிக் கெல்லாம் இந்த வயசில கல்யாணமே ஆயிடுச்சு.

"ஏ!பாப்பா.வீட்டுக்குப் போறியா.அப்பாகிட்ட சொல்லி அடிவாங்கி வைக்கவா.." அவர் அதட்டலில் பழிப்புகாட்டி ஓடிப் போனாள். வீட்டில் போய் ஆயான் திட்டறார்னு மோலாசு பண்ணும். மூங்கில் ப்ளாச்சு போட்ட தட்டியை இழுத்து பூட்டிவிட்டு சாவியை இடுப்பில் செருகிக் கொண்டார்.

வாங்க ஆயான்.இன்னைக்கு சமைக்கிற வேலையில்லை.

நாச்சி நக்கலடித்தான்.

"பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. இத்தனை வருஷமா காய் வாங்கற,தானத்துக்கு கீரைத்தண்டு வைக்கணும்னு புத்தியில்லை."

சரியான இடத்தில் பத்தவச்ச திரி.. முத் தம்மா வெடித்தாள்.

"தீவட்டி.கொஞ்சங் கூடப் பொறுப்பில்லே.."

நாச்சி முகஞ்சுருங்கி நகர..

"கோவில் வாசலில் இருக்கும்.போய் வாங்கிட்டு வா." நாச்சி சட்டென தலையைத் தூக்கி முத்தம்மா பெண் வள்ளியிடம் சாடை காட்டி னான். பரசுவுக்குத் தெரியாமலில்லை.கோவில் வாசலில் புதிதாய்க் கடை போட்டிருக்கும் அஞ்சலையை அவர் அடிக்கடிப் பார்ப்பது இவர்களுக்கு அவலாயிருக்கிறது.நேற்று ராத்திரி அஞ்சலைக்கு சாப்பாடு கொடுக்கப் போனபோது நாச்சி முக்காடு போட்டு கிட்டு பின்னாடியே வந்து வேவு பார்த்தான்.



அஞ்சலைக்கு மிஞ்சிப் போனா நாப்பது வயசுக்குள்ள இருக்கும்.கறுப்புன்னாலும் களையா இருந்தா. புருஷன் செத்துப் போனதும் வழி தெரியாம கோவில் மண்டபத்தில் ஒண்டி யிருந்தவள் காய்கடை போட்டு பொழைக்கிறாள்.

பத்துநாளைக்கு முன் பரசு கிணற்றடியில் வழுக்கி விழுந்தார்.காலில் சுளுக்கு வந்து வலி பின்னியெடுத்தது.அப்போதும் நாச்சியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு யாரோ கண்டுக்கல.ஆனால் அவர் விந்தி விந்தி நடப்பதைப் பார்த்து அஞ்சலை பதறினாள். எண்ணெய் தடவி சுளுக்கெடுத்து விட்டாள். ஏனோ அவருக்கு தேவானை ஞாபகம் வந்தது. அவளும் அப்படித்தான்.சின்ன விஷயத்துக்கெல்லாம் பதறுவாள்.ஆனால் அம்மா அவளிடம் பரசு இணக்கமா இருக்கிறதை என்றுமே விரும்பியதில்லை. மதியம் சாப்பாடு முடிஞ்சதும்

"அடுத்து ஆயான் கல்யாண சாப்பாடு தான்.." நாச்சி மறுபடியும் வம்பிழுத்தான்.

ஆயானுக்கு எழுபது வயதிலும் கிண்ணென்று இருப்பார்.காது கடுக்கனும் நெற்றியில் விபூதி பட்டையும் பார்க்க கெடுபிடியா இருக்கும். கடுகடுவென்ற அவர் தோற்றம் பார்ப்பவரை பயமுறுத்தி தள்ளியே வைக்கும். பதினெட்டு வயது இளைஞனான நாச்சியை அவருக்கு சுத்தமாகப் பிடிக்காது.பொதுவாக அவருக்கு இளைஞர்களைப் பிடிப்பதில்லை.

பெரியவங்க சின்னவங்கனு மட்டு மரியாதையில்லாம என்ன பேச்சு? போய் ஒழிச்சு போடு. முத்தம்மா கடிந்தாள்.

ஆயான் போனதும் வள்ளி முணு முணுத்தாள்.

ஆயான் சரியில்லை மா.இந்த வயசில ஏன் புத்தி இப்படி போகுது?

உனக்கு ஒண்ணும் தெரியாது. பத்து வயசில கோதாவேரி பரசுவை பிடிச்சிட்டு எங்க வீட்டு வாசலில் நின்னுச்சு.

புள்ளைக்காகவே வாழ்ந்த பொம்பளை

எங்க அண்ணன் புடிவாதத்தில தேவானையை பரசுவுக்கு கட்டிவச்சது. இரண்டுபேரும் ஆசைபாசையாத்தான் இருந்தாங்க.ஆனா கோதாவேரி மரு மகளை பாடா படுத்தி வச்சது. ஒருநாள் கொடுமை தாங்காம தேவானை குளத்தில இறங்கிடுச்சு. அன்னையிலிருந்து பரசு தனியாத்தான் இருக்கார்.யாரும் ஒரு குறை சொல்ல முடியாது.

"சும்மா புரளியைக் கிளப்பாம வேற வேலையிருந்தா பாருங்க" ஒண்டியாளுதான் சமைக்கிறதை மட்டுமில்ல மாங்காய் தேங்காயெல்லாம் அவளுக்கு கொண்டு கொடுக்கிறாரு.உன் மாப்பிள்ளையே ரெண்டு தடவ கோயிலடியில பார்த்தாங்களாம்.வள்ளி போகிறபோக்கில் சொல்லி விட்டு கிளம்பினாள்.

அரசல்புரசலாகத் தெருவெல்லாம் இதே பேச்சாத்தான் கிடந்தது..பரசு காலையிலும் மாலையிலும் கங்கம்மா வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து ஊர்கதை பேசுவார். வள்ளியோ முத்தம்மாவோ குழம்பு ரசம் இட்லி தோசைனு ஏதாவது கொடுப்பார்கள். கொஞ்ச நாட்களாக அதிகம் வருவ தில்லை.

அன்று மாலை அவர் வந்ததும் நாச்சி தான் கத்தினான்.

"ஆயானோட கடுக்கனைக் காணோம்." ஆயான் கடுங்கோபத்தோடு அவன் முதுகில் பட்டென்று அடித்தார்.

பிறகு எழுந்து வீட்டுக்குப் போய் விட்டார்.

மறுநாள் பாக்கியமும் சொன்னாள்.

அஞ்சலை ஊரைவிட்டு போயிட்டாளாம். ஆயான் கதவைத் திறக்கவேயில்லை.அன்ன ஆகாரமில்லாம உள்ளே கிடந்தா என்னாகும்?

நாச்சியோடு போய் வள்ளி தான் கதவைத் தட்டித் திறந்தாள்.. உடம்பு அனலாய் சுட ஆயான் சுருண்டு படுத்திருந்தார்

தலைமாட்டில் இற்றுப்போன மஞ்சள் நிற பட்டுப்புடவை நிறம் மங்கிக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகசபை தேவகடாட்சம்

நடமாடும் நிலையும் வந்து விட்டது. காலையில் துயில் எழும்பி மெதுவாக நடந்து வைத்தியசாலையின் அறையின் சாளரத்தினூடாக அனுராதபுரத்தின் ஒருபக்க எழிலை இரசித்தேன். பருவம் வந்த பெண் ணைப் போன்று நாணத்துடன் தலை கவிழ்ந்து நிற்கும் நெற்கதிர்களின் விஸ்தீரணமாக நீண்டு பரந்து வயலை அழகு படுத்திக் கொண்டிருந்தது. அதைவிட மேலே வட்டமிடும் கீச்சான் பறவைகளும், பூச்சிகளும் இசைக்கும் ரீங்காரத்தில் என்னை மறந்து இரசித்துக் கொண்டிருந்தேன். என்னை அறியாது என் ஆத்மா எல்லாளன் தேசத்து மண்ணை பலமுறை முத்தமிட்டு வணங்கி மரியாதை செலுத்திக்கொண்டிருந்தது. அந்த மண்

# கண்ணீர் உப்பிட்டு

வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களுக்கான காவு வண்டி யில் என்னை ஏற்றிச்செல்லும் போதுதான் என்னால் உணர முடிந்தது. "இதயம்" எவ்வளவு முக்கியமானதென்றும் அதை அசிரத்தையாக பராபரித்ததன் விளைவு இந்த அளவிற்கு மோசமான நிலையை தோற்றுவித்ததுடன் அதன் கோபம் என்னை கைவிட்டு விடுமோ என்ற ஏக்கமும் பயமும் சுற்றிவர வியாபித்திருந்தது. இந்நிலையில் சொந்த ஊரை விட்டு பிரியும் வேளை, மீண்டும் வருவேனோ? என்ற ஏக்கமும் வாட்டியிருந்தது. மரண பீதியுடன் அனுராதபுர வைத்தியசாலையை அடைந்ததும் திருப்தி கலந்த பெருமூச்சொன்று வெளியேறியது. சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது மனதிலும் மகிழ்ச்சியும் ததும்பியிருந்தது. இப்போது ஓரளவு

தேசியத்தின் உணர்வை உயிரில் இணைத்து வாழ்ந்த தலைவனை கருக்கொள்ள வைத்த பூமியல்லவா?

அந்த பக்தி என்னை பலமுறை வணங்க வைத்தது. அதனைத்தொடர்ந்து பழைய சம்பவங்கள் என்னையும் மீறி என் மனதில் அலைபாயத்தொடங்கியது. அனைத்தும் படமாகத்தெரிந்தது.

"இடியாப்ப...... இடியாப்ப......." என்று கூவும் சிறுமியின் சின்ன குரல் என் சிந்தனையை திசைமாற்றி திரும்ப வைத்தது. அவளை பார்த்தவாறு மெதுவாக நடந்து சென்று எனது நோயாளருக்குரிய கட்டிலில் அமர்ந்தேன். அந்த சிறுமியுடன் ஒரு சிறு பையனும் இணைந்துகொண்டு இடியப்பம் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் இருந்த நோயாளர்கள் பலர் அதனை வாங்குவதில் ஆர்வம் காடடவில்லை என்பதை சற்று வருத்தத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தேன். இருப்பினும் இரு சிறுவர்களின் அதீத முயற்சியால் ஓரளவு விற்று தீர்ந்துவிட்டது. எஞ்சியிருந்த இரு இடியப்ப பார்சல்களையும் விற்பதற்காக என் கட்டிலருகே வந்தனர்.

அவர்களின் மொழியிலே என்னை அறியாது கேள்வியொன்று மிதந்து வந்தது. "ஏன் நீங்கள் இருவரும் பாடசாலை செல்வதில்லையா?" என்று அந்த இடியப்பம் விற்கும் சிறுமியிடம் கேட்டேன். அவள் மெதுவாக என் அருகில் வந்து. "நானும் தம்பியும் பள்ளிக்கூடம் சென்று கொண்டிருப்பவர்கள்தான். தற்பொழுது தந்தையை இழந்திருக்கின்றோம்" என்றாள். அவள் மேலும் தன்னுடைய வியாபாரத்தில் குறியாக இருந்ததால் எல்லா இடியப்ப பார்சல்களும் விற்று தீர்ந்துவிட்டது. மிகுதியாக உள்ள இந்த இரு பார்சல்களையும் விற்றாக வேண்டும் என்றவாறு என்னிடம் நீட்டினாள். மேலும் அச்சிறுமியிடம் முன்பு கேட்ட கேள்வியை மீண்டும் கேட்டேன். மேலும் அச்சிறுமி "அதோ பாருங்கள்! எங்களது பாடசாலைப் புத்தகங்களை வெளியில் வைத்துவிட்டு வந்திருக்கின்றோம். இந்த இரு பார்சல்களும் அம்மா எங்களுக்காக தந்த உணவு. அதைத்தான் இப்பொழுது விற்கின்றோம். பாடசாலை முடிந்து வீடு சென்று அம்மாவின் கைகளில் பணத்தை ஒப்படைத்த பின்னர் தான் மதிய உணவிற்கான அரிசி உலையேறும்." என்றாள்.

எனது இதயத்தில் ஏற்பட்ட வலியை இச்சிறுவர்களின் கதை அதிகமாக வலிக்க வைத்தது. மறுகணம் ஐந்நூறு ரூபாவை கொடுத்து அந்த இரு பார்சல்களையும் அவர்களே கொண்டு செல்லும்படி கூறினேன். சிறுவர்கள் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தார்கள். அதிலும் அந்த சிறுமியின் கண்களில் ஈரம் கசிந்தது தெரிந்தது. "இந்த பணத்தை கொண்டு தான் இருவரும் கொப்பிகள் வாங்கவேண்டும்" என்று கூறிக்கொண்டு பாடசாலைக்கு நேரமாகிவிட்டதை உணர்ந்து ஓட்டமாக இருவரும் சென்றார்கள். நானும் கனத்த இதயத்தோடு கட்டிலில் சாய்ந்தேன்

சிறிது நேரத்தில் எனது காலில் நீர்த்துளிகள் படுவதை உணர்ந்து எழும்பினேன். என் காலடியில் ஒரு பார்சல் இருந்ததை கண்டேன். எழும்பி அழைக்கமுன்னர் மின்னலாய் அச் சிறுமி மறைந்துவிட்டாள். அவளின் கண்ணியமும் நேர்மையும் என்னை வியக்க வைத்துக்கொண்டிருந்தது. எனது கட்டிலுக்கு பக்கத்து கட்டிலில் இருந்த வயோதிபர் அச்சிறுமியால் விற்கப்பட்ட பார்சலை அவிழ்த்து உண்ணத்தொடங்கினார்.


நானும் அவள் தந்த பார்சலை விரித்தேன். ஒரு கறியும் இன்றி வெறும் தேங்காய்ப்பூவுடன் அவளுக்காக கட்டிய இடியப்பம் இருந்தது.

அவளின் கண்ணியமான முகம் அந்த இடியாப்பத்தினுள் எனக்குத்தெரிந்து. எனது கண்களால் நீர் சொரிந்து இடியப்பத்தினுள் வீழ்ந்து கலந்தது. இதற்கு மேல் எனக்கு அதை உண்ண மனமில்லை. பசி முற்றாக மறையாது பார்த்துக்கொண்டிருந்த அந்த பக்கத்து வயோதிபரிடம் நான் வைத்திருந்த பார்சலை தூக்கிக்கொடுத்துவிட்டு அமைதியாக கட்டிலில் சாய்ந்தேன்.

இருப்பினும் என் மனச்சாட்சி குற்ற உணர்வுகளுடன் சுட்டிக்காட்டி சுட்டெரித்துக் கொண்டிருந்தது. அந்த ஐந்நூறு ரூபாயை விட இன்னும் கொஞ்சம் கூட கொடுத்திருக்கலாமென்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஷெல்லிதாசன்**

பஸ்சிலை வேலைக்குப் போனவள். திரும்ப வரேக்கையும் நேரத்துக்கு பஸ் கிடைச்சாத் தானே வரேலும்" பதட்டத்துடனிருக்கும் மனைவியைப் பார்த்து அவர் ஆறுதல் படுத்தினர். "உங்களுக்கென்ன தெரியும். இந் தக்காலத்திலை சின்னப் பிள்ளையளை கடைக்கு அனுப்பிப்போட்டே காவலிருக்க வேண்டியிருக்கு. உங்கடை மகள் வயதுக்கு வந்த குமர்ப்பிள்ளை. இருபத்தி மூண்டு. இருபத்தினாலு வயதுப்பிள்ளை வேலைக்குப் போய் இவ்வளவு நேரமாகியும் காணேல் லையெண்டா யோசிக்கத்தானே வேணும். உங்களுக்கென்ன அக்கறை. எந்த நேரமும் புத்தகம். பேப்பரை படிச்சுக்கொண்டு கதி ரைக்கை கிடக்கத் தானே தெரியும்"

# இப்படியும் சில பிறவிகள்

மழை நாள். மாலை ஆறுமணி ஆவ தற்கு முன்னமே பூமி இருட் போர்வையை போர்த்திக் கொண்டு உறக்கத்திற்குப்போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. மனோன்ம ணிக்கு நேரம் செல்லச் செல்ல பதட்டம் அதிகரித் துக் கொண்டிருந்தது. காலை எட்டுமணிக்கு வேலைக்குப்போன மகளை மாலை ஆறுமணிக்கு மேலாகியும் காணவில்லை யென்றால் எந்தத் தாய்தான் சும்மா இருப்பாள்.

வீட்டுச்சுவரில் மாட்டியிருந்த மணிக்கூட்டைப் பார்ப்பதும் தெருக் கதவைத் திறந்து வெளியே வந்து எட்டிப் பார்ப்பதுமாக இருந்த மனைவி மனோவைக் கவனித்த சிவராசா மாஸ்டர் அவளது செய்கையை உணர்ந்தவராய். "வேலைக்குப் போனவள் வருவாள் தானேப்பா.

இவர்கள் இரண்டுபேரும் இப்படி முட்டி மோதிக் கொண்டிருக்கும்போது தூரத்தே பஸ் வரும் சத்தம் கேட்டது. மனோன்மணி படாரென வெளிக் கதவைத் திறந்து வெளியே வந்து தெருவை நோட்டமிட்டாள். அவர்க ளது வீட்டுக்கு சற்றுத் தொலைவிலுள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து தனது மகள் மஞ்சு குதித்து இறங்கி வருவதை அவதானித்த மனோன்மணி அவள் வீட்டுக்கு வரும் வரையில் பொறுமையில்லாமல் மகளை நோக்கி விரைந்து ஓடிப்போய் மஞ்சுவை அழைத்துவந்தாள். இதைப் பார்த்த சிவராசா மாஸ்ரர் கொடுப்புக் குள்ளே சிரித்துக் கொண்டார். ஆனாலும் தாய்ப்பாசமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தனியானதென அவர் அறியாதவரில்லை. பஸ்சிலிருந்து வாடி வதங்கி வந்த மகளைப் பார்த்த அம்மா "மகள்..ஏனடி பிள்ளை இண்டைக்கு இவ்வளவு நேரம்....நானும் என்ன ஏதோ எண்டு பயந்து போனன் பிள்ளை"

"அம்மா...சும்மா என்ரை வாயைக் கிளறாதேங்கோ...நானோ உந்த பஸ்சிலை நெரிஞ்சு எலும்பு உடைஞ்சு வியர்த்து விறு விறுத்து வாறன். நேரத்துக்கு பஸ் கிடைச்சா எனக்கு வரத்தெரியாதே....கடைசியா வந்த இந்த பஸ்சிலையும் ஏறமுடியாமல் ஏறி வாறன்....அது உங்களுக்கு தெரிஞ்சாத்தானே"

மகளிடம் இனியும் கதைச்சா வாங் கிக்கட்டத்தான் வேணுமென தன் நிலை யிலிருந்து மெல்ல விலகிய அம்மா,
"சரி பிள்ளை களைச்சுப்போனாய். போய் உடுப்பைமாத்தி கைகால் முகங் கழுவி விட்டு வா தேத்தண்ணி குடிக்க" ஆண் பெண் வியர்வை நாத்தங்களால் துர்நாற்றம் வீசிய உடைகளைக் களைந்தெறிந்த அவள், நேரடியாக குளியலறைக்குள் நுழைந்து குளித்துவிட்டு வந்து படுக்கையில் போய் விழுந்து பெருமூச்சு விட்டாள். இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த பஸ் பிரயாணம் என்பதுதான் அவளது ஏக்கம். சற்று நேரத்தில் அம்மா கொண்டுவந்து கொடுத்த சுடசுடப்பால் தேனீரைக் குடித்த மஞ்சு படுக்கையில் சற்று ஓய்வெடுத்துக்கொண்டாள்.

-------------------

மஞ்சுவுக்கு அண்மையில்தான் பட்டதாரி நியமனம் கிடைத்தது. திருகோணமலை பிரதேச செயலகத்தில் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தராக இணைந்த அவள், நகரின் புறநகர்ப் பகுதியான அன்புவழிபுரத்திலிருந்தே நாளாந்தம் பஸ்சில் வேலைக்குப் போய் வந்தாள். கிட்டதட்ட மூன்று கிலோ மீற்றர் பிரயாணம்.

காலையில் அவள் அவசர அவசரமாக வெளிக்கிட்டு ஏழரை மணிக்கே பஸ்தரிப்பு நிலையத்துக்குச் சென்று விடுவாள். ஆனால் காலைவேளை போக்குவரத்து நெரிசலான வேளை. பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் என வரும் பஸ்களெல்லாம் நிரம்பிவழிந்து பறந்துகொண்டிருக்கும். எட்டுமணிக்கு மேலை தான் இவளுக்கு பஸ் கிடைக்கும். ஆரம்பத்தில் "இடமிருக்கு தங்கச்சி ஏறுங்கோ...ஆராவது தங்கச்சிக்கு இடங்குடுங்கோ" என பரிவுடன் கதைக்கும் நடத்துனர் "வாசலிலை நிக்காமல் உள்ளை போங்கோபாப்பம்" என காட்டமாக கத்துவதுடன் சில வேளைகளில் தனது கையால் உள்ளே தள்ளிவிட்டு "றையிற்..றயிற்" என கத்தி பஸ்சை எடுக்கவைத்துவிடுவான்.

இந்தத் தொல்லையெல்லாவற்றையும் தாங்கி பஸ்சில் ஏறினால், முழத்துக்கு முழம் நிற்பாட்டி ஆக்களை ஏற்றுவதில் குறைவிருக் காது. ஏனடா வந்தோம் என கதறவேண்டும் போல இருக்கும் அவளுக்கு. இப்படியாக காவடியாட்டம்போட்டு அவள் அலுவலகம் செல்ல மணி ஒன்பதைத் தாண்டிவிடும். அநேகமான வேளைகளில் சிவப்புக் கோட்டின் கீழ்தான் அவள் கையொப்பமிடவேண்டி வரும். இதனால் நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் என்பவர்களிடம் அவள் ஏச்சும் வாங்கவேண்டிய நிலையும் வருவதுண்டு. நாளாந்தம் அவள் வேலைக்கு வரப்படுகிற பாட்டை அவர்களுக்கு சொன்னால் புரியவா போகிறது.

---------------------------

"அப்பா...எத்தினை நாளைக் கப்பா..இந்த பஸ்சுகளிலை நெரிஞ்சு கொண்டு போய்வாறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை நாளுக்கு கந்தோரிலை நேரஞ்செண்டு வாறதெண்டு பேச்சு வாங்கி அழுகிறது."

"கொஞ்ச நாளைக்குப் பொறு பிள்ளை. உனக்கிந்த உத்தியோகம் கிடைச்சதே பெரிய காரியம். ஏதோ வழிபிறக்கும். என்ரை பென்சனிலைதான் வீட்டுச் சிலவெல்லாம். கம்பசிலை படிக்கிற உன்ரை தம்பிக்கு மாதா மாதம் பத்தாயிரம் அனுப்ப வேணும். உன்ரை தங்கச்சியின்ரை பள்ளிச் சிலவு. ரியூசன் காசு. அதோடை இந்த மாதத்தோடை கறண்ட் காசும். தண்ணிக்காசு எல்லாம் கூட்டிப்போட்டாங்கள். இப்ப நாலைஞ்சு மாதமாத்தான் உன்ரை சம்பளம். அதுவும் உனக்குச் சிலவுக்குப்போக…நீ கொஞ்சம் மிச்சம் பிடிச்சாத்தான் உனக்கு ஸ்கூட்டியைக் வாங்கேலும். கந்தோரிலை இப்பத் தான் சேந்தனி. கஷ்டத்தைப்பாராமல் சமாளி பாப்பம்" கவலைப்படும் மகளை இப்படியாகச் சொல்லித் தேற்றினார் அப்பா.

---

எப்படியோ மஞ்சு பிரயாணத் தொல்லை, கந்தோர் ஏச்சுப்பேச்சுக்களை தாங்கி ஒருவருசம் கழித்துவிட்டாள். அன்றும் மஞ்சு வழமைபோல அலுத்துக் களைச்சுத்தான் கந்தோராலை வந்தாள். ஆனால் வீட்டுக்கு வந்ததும் அம்மாவுடன் எரிஞ்சு விழுறவள் அன்று முகத்திலை புன்னகை மலர வீட்டுக்குள் நுழைந்தாள். அதைக் கவனித்த மனோன்மணி கணவனுக்கருகில் போய் ரகசியமாக " என்னப்பா…நித்தம் எரிஞ்சு விழுந்து முகத்தை உர்ரெனப் பிடிச்சு வர்ரவள் இண்டைக்கு சிரிச்ச முகத்தோடை வாறாள்…என்ன நடந்ததோ தெரியல்லை" என புதிர் போட்ட மனையாளைப் பார்த்து. "என்னைக் கேக்கிறாயப்பா….குமர்ப் பிள்ளையளுக்கு உப்பிடி திடீரென மூட் மாறுறது பற்றி நீயும் பெம்பிளை எண்டதாலை உனக்குத்தான் தெரியும்" என நக்கலடித்தார் சிவராசா மாஸ்ரர்.

"உங்களுக்கப்பா எப்பவும் ஒரு நக்கல்" கணவன் மேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்து ஓய்ந்தவளாய் மனோ. அறைக்குள்ளே நுழைந்த மகளிடம் சென்று "என்ன மகள்….வேலைக்குப் போனநாளிலையிருந்து கடுகடுடெண்ட முகத்தோடை வாறனி இண்டைக்கு ஏதோ சிரிச்சபடி சந்தோஷமா வந்திருக்கிறாய். அப்பிடி என்னபிள்ளை நடந்தது?"

" இல்லையம்மா…எங்கடை கந்தோருக்கு ஒரு அரச வங்கியைச் சேந்த சிலபேர் வந்தவங்கள்"

"அதுக்கென்ன பிள்ளை அவங்கள் ஆரிட்டையும் கடன் வசூலிக்க வந்திருப்பாங்கள். அதுக்கு நீ.."

"சும்மா நான் சொல்லி முடிக்கிறதுக் கிடையிலை அவசரப்படுறியள். எங்களுக்கு வாகனம் வாங்கிறதுக்கு லோன் தரப்போறாங்களாம். வாகனம் அவசியமானவை மூண்டு லச்சம் வரை லோன் எடுக்கலாமாம்"

"உண்மையே பிள்ளை. நல்லதாப் போச்சு. நீயும் லோன் எடுத்தா ஒரு ஸ்கூட்டியைக்கை வாங்கலாமெல்லே"

"ஓமணை. விண்ணப்பப்படிவங்களையும் தந்கிட்டுப் போனவை. விருப்பமானவையை கெதியிலை விண்ணப்பிக்கட்டாம். ஆனா அப்பாதான் லோன் எடுக்க விடுவாரோ தெரியாது"

"அவர் என்னத்தைச் சொல்லிறது. நீ லோன் எடுத்து வாகனத்தை வாங்கு. உன்ரை அப்பர் சீவியத்திலை கந்தோரிலை லோன் எடுக்காதவர். அதுமாத்திரமே ஆரிட்டையும் ஒருசதமும் கடனும் வாங்காதவர்..எந்த வெளிநாட்டு சொந்தக் காரரிடமும் கையேந்தாத தனிப்பிறவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிற சம்பளத்திலை சீராக வாழவேண்டு மெண்டு நினைக்கிற மனிசன். ஆனா உன்ரை விசயத்திலை..." மனோன்மணி கதையை முடிக்கமுதல் சிவராசா மாஸ்ரர் "என்ன... என்னைப்பற்றி கதை ஏதோ நடக்குது போல இருக்குது...."

"இல்லை அப்பா...நான் பாங்கிலை லோன் ஒண்டு எடுக்கலாமெண்டு யோசிக்கிறன். பைக் ஒண்டு வாங்கினால் அல்லை தொல்லை இல்லாமல் கந்தோருக்கு நேரத்துக்குப் போகலா மெல்லே. உந்த பஸ் பிரயாணம் இனி என்னாலை முடியாதப்பா."

"நல்லது பிள்ளை..நான் லோன் வாங்காமல் சீவிச்சிட்டன். நீ இந்தக் காலத்துப் பிள்ளை. இந்தக் காலத்திலை அரைக்கரைவாசி அரசாங்க உத்தியோகக்காரர் லோனிலை தானே ஓடு கினம். அதுவும் உந்த லீசிங் மண்ணாங்கட்டி ஒண்டு வந்து சனமெல்லாம் லீசிங் வலைக் குள்ளை விழுந்து வௌவால்களா துடிக்குதுகள். லீசிங்கிலை ரீவி. லீசிங் கிலை பிறிச்..தையல் மெசின்.ஓட்டோ. கார். எல்லாம் லீசிங் மயமா போச்சு. வீட்டிலை ஆனமான சாப்பாடில்லாமல் சம்பலும் சோறும் சாப்பிட்டுகொண்டு லீசிங் கட்டிறத்திலேயே களைச்சுப்போய் சனம் படுகிறபாடு நாய்படாப் பாடு. வெளியிலை பாத்தா ஆடம்பரத்துக்கு மாத்திரம் குறைச்சலில்லை"

"அப்பா அப்பா...நான் ஏதோ கேக்க நீங்கள் ஒரு வாத்தியாரெண்டதை காட்டிப்போட்டியள். நான் லோன் எடுக்கிறதோ விடுறதோ?"

"உன்ரை சம்பளம்....நீதானே கட்டப் போறாய்...அப்பா குறுக்க நிக்க மாட்டன். வேறை வழி இல்லையெண்டா உதுதானே வழி பிள்ளை"

தந்தையின் அங்கீகாரம் கிடைத்ததே போதும் என எண்ணிய மஞ்சு உடனடியாக கடன் விண்ணப்பத்தை வங்கியில் கொடுத்து ஒருவாரம் காத்திருந்தாள்.

-------------------------------

எந்தவித தடாங்கலுமில்லாமல் இரண்டு பேரின் சாட்சியோடு மூண்டு லட்சம் ரூபா கடனைப்பெற்ற மஞ்சு உடனடியாக தகப்ப னாரைக் கூட்டிக் கொண்டுபோய் தனக்குப் பிடித்த சிவப்பு நிறத்தில் "சூட்டிப்பொப்"ஒன்றை வாங்கி வீடுவந்து சேர்ந்தாள்.

புதிய சூட்டிபைக்கோடு வந்து நிற்கும் மகளைக் கண்டதும் மனோன்மணிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"நில்லு பிள்ளை வாறன்" என மகளுக்குச் சொல்லிவிட்டு அடுக்களைக்குள் போன அவள், இரண்டு மூன்று செத்தல் மிளகாயுடன் உப்புக்கல் சிலவற்றையும் சேர்த்து கையில் பொத்தியபடி எடுத்துவந்து மஞ்சுவை மூன்று முறை சுற்றியெடுத்து. அவளை மூன்று முறை அதில் துப்பவைத்து உடனடியாக எரியும் அடுப்பில் கொண்டுபோய் போட்டாள். அடுப்பில் விழுந்த மிளகாய் எவ்லோரையும் இரும வைக்க. உப்பு படபடவென வெடித்து வேடிக்கை காட்டியது.

மகளைப் பார்த்து யாரும் நாவூறு படுத்தி விடக்கூடாதென்ற முன்னேற் பாடே அம்மா மனோவின் இந்தச் சுத்திப்போடல்.

"இஞ்சேரப்பா. சும்மாகிடந்த மிளகாயை எடுத்து அடுப்புக்குள்ளை போட்டு இப்ப வீடு வாசலிலை ஆக்கள் இருக்கேலாமலிருக்கு" என பலமாக இருமியபடி சிவராசா மாஸ்ரர் குற்றம் சாட்டினார்.

"உங்களுக்கப்பா எல்லாம் பகிடிதான். மஞ்சுவுக்கு ஏதும் ஆகக்கூடாதெண்டு தானே சுத்திப் போட்டனான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரியப்பா கதையை விடு. இனி ஆகிற காரியத்தைக் கதைப்பம். மகள் பைக்கை ஓடப் பழக வேணும். பின்னேரத்திலை உள் ஒழுங்கையளிலை ஓடிப்பழகு பிள்ளை. நான் பழக்கிவிடுறன்.'

"இஞ்சேருங்கோப்பா அவள் ஓடிப் பழகிறவரை மஞ்சுவை நீங்கள்தான் கந்தோருக்கு கூட்டிக்கொண்டுபோய் வரவேணும். இனியும் அவளை பஸ்சிலை அலைய விடேலாது..ஓ. நீங்கள் பென்சன் எடுத்திட்டு சும்மா பேப்பர் படிச்சுக் கொண்டுதானே கிடக்கிறியள். இதை யாவது செய்தா குறைஞ்சே போகும்"

" அம்மா சும்மா அப்பாவை ஏன் வறுத்துக்கொட்டிக்கொண்டிருக்கிறியள். சும்மா வாயை வைச்சுக்கொண்டு இருங்கோ பாப்பம்"

" அது பிள்ளை உன்ரை அம்மாவுக்கு நான் பென்சன் எடுத்தாப்பிறகு இப்பிடி என்னை வாட்டி எடுக்கிறது வாடிக்கையாய் போச்சு. அவ சொல்லித்தானே நான் எல்லாத்தையும் செய்யிறன். ஏன் எனக்கது தெரியாதே. நீ யோசியாதை பிள்ளை நீ நல்லா பைக் ஓடிப்பழகிற வரைக்கும் கந்தோருக்கு கூட்டிப்போறவேலையை நான் ஒழுங்காச் செய்வன். ஆனாலொண்டு நீ கெதியிலை நல்லாப் பழகி லைசென்ஸ் எடுத்துப்போடு..ஓ.." "அப்பாவுடன் இனி கந்தோருக்குப் போகலாம். இனிமேல் உந்த பஸ்சுக்கு நித்தம் தூங்கத் தேவையில்லை" என ஆறுதல் கொண்ட மஞ்சு, உந்துருளியை அப்பாவின் துணையோடு விரைவில் பழகி லைசென்சுக்கும் விண்ணப்பித்ததுடன் அதற்குரிய நேரடியான எழுத்துப்பரீட்சை ஏனைய பரிசோதனைகளிலும் தேர்ச்சி பெற்றுக்கொண்டதுடன் தற்காலிக லைசென்சையும் தனதாக்கிக்கொண்டாள். இதனால் மகிழ்வடைந்த மஞ்சு "அப்பா இனி நான் தனிய பைக்கிலை கந்தோருக்குப் போகலாம்...இண்டைக்கு வெள்ளிக்கிழமை. சனி ஞாயிறெல்லாம் நல்லா ஓடிப்பழகிட்டு திங்கக்கிழமையிலிருந்து போகப்போறனப்பா. ஆனால் அப்பா பின்னாலை ஆக்களை ஏத்தியோட பயமாயிருக்குது"

"நீ நல்லா ஓடிப்பழகிறவரை ஆர் கேட்டாலும் ஏத்தி ஓட நினைக்காதை. கேட்டால் டபிள் ஓடமாட்டேண்டு கறாரா சொல்லிப்போடு. மற்றப்படி இனி நீ தனிய கந்தோருக்கு பயப்படாமல் போகலாம்"

"இஞ்சை வா பிள்ளை நீ தனிய பைக்கிலை கந்தோருக்குப் போகமுதல் பிள்ளையார் கோயிலுக்கு சைக்கிளைக் கொண்டு போகவேணும். இதை நீ பைக்கை எடுத்திட்டு வந்ததும் நாங்கள் செய்திருக்கவேணும். விட்டிட்டம். இண்டைக்குப் பின்னேரம் போவம். இஞ்சேருங்கோப்பா ஒரு மஞ்சள் பட்டொண்டு உந்தச் சந்திக் கடையிலை வாங்கி வையுங்கோ...அதைக் கொண்டுபோய் ஐயற்ரை கையாலை பைக்கிலை கட்டவைச்சு ஒரு அரிச்சினையும் செய்யவேணும்" மனோன்மணி சொன்னால் அப்பீல் ஏதுமிருக்கே. சிவராசா மாஸ்ரரும் எந்தக் கதையும் பேசாமல் சந்திக் கடைக்குப் போய் மஞ்சள் பட்டு வாங்கி வைத்திருந்தார். மாலை நேரம் மஞ்சுவும் அம்மாவும் பைக்குடன் கோயிலுக்குச்சென்றனர். அப்பொழுது கோயிலில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மஞ்சுவின்ரை பெயரிலை ஒரு அரிச்சினைக்கு காசு கட்டிய மனோன்மணி, பூசை முடிந்ததும் தான் கொண்டுவந்த பட்டுத் துணியை ஐயரிடம் கொடுத்து விடயத்தை அவரிடம் சொன்னாள். விபூதி. சந்தனம்.குங்குமம் பூக்களென பக்தர்களுக்கு பரிமாறிய ஐயர்.மஞ்சுவின் பைக்கின் அருகே போய் அதன் முன் பகுதியில் விபூதி சந்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமம் சாத்தி ஏதேதோ மந்திரம் உச்சரித்தபின்னர் பட்டுத் துணியை முறுக்கியெடுத்து பைக்கின் கான்ரிலைச் சுற்றிக்கட்டிவிட்டு நிற்க. மனோன்மணி அவர் கையில் வைத்திருந்த தட்டில் ஐந்நூறு ரூபா நோட்டை பக்தி பூர்வமாகப்போட்டு வணங்கி னாள். அதைக் கண்ட ஐயர் தாய்க்கும் மகளுக் கும் தாராளமாக விபூதி சந்தனம் குங்குமம் பூக்களென அள்ளி வழங்கிவிட்டு உள்ளே செல்ல. மஞ்சு பெரு மகிழ்வுடன் தனது பைக்கை உருட்டிக்கொண்டு தாயாருடன் வீடுவந்து சேர்ந்தாள்.

------------------------

அன்று திங்கட்கிழமை. மஞ்சு தனது பைக்கில் முதன் முதலாக கந்தோருக்கு தனிய போக ஆயத்தமானாள். அன்றைய தினம் அதிகாலையிலேயே குளித்து முழுகிய மஞ்சு வெகு ஆசாரமாய் வெளிக்கிட்டு தனது பைக்கில் ஏறி பிள்ளையார் கோயிலுக்குப்போய் "பிள்ளையாரப்பா நான் எந்தவித விக்கின முமில்லாமல் கந்தோருக்கு போய்வர அருள் தா அப்பனே" என மனதுக்குள் வேண்டியவளாய் வீட்டுக்கு வந்து தனது காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாகி. தலைக் கவசத்தை அணிந்து பைக்கில் ஏறிக் குந்தியி ருந்து பைக்கை இயக்கினாள். தாயும். தகப்பனும் அவளை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்க. மஞ்சு இருவருக்கும் விடை சொல்லியபடி கந்தோருக்குப் புறப்பட்டுச் சென்றாள். ஆனால். மகள் புறப்பட்டுப்போய் அரை மணித்தியாலமும் இருக்காது அம்மா அவளுக்கு தொலைபேசி அழைப்பெடுத்தாள். நல்ல காலத்துக்கு மஞ்சு அப்பொழுதுதான் கந்தோருக்குள் நுழைந்தாள். அம்மாவின் அழைப்பால் அனுங்கிய தனது தொலை பேசியை மஞ்சு எடுத்தாள். "கலோ..பிள்ளை... எப்பிடி கரைச்சலில்லாமல் போனியோ?"

"ஓமம்மா...றபிப் பொலிசைப் பாக் கேக்கை பயமாத்தான் இருந்தது...எண்டாலும் சமாளிச் சுக்கொண்டு வந்திட்டனம்மா. பயப்பிடா தேங்கோ..அப்பாவுக்கும் சொல்லுங்கோ..பிறகு கதைக்கிறன்" என அம்மாவுடன் கதைத்த மஞ்சு தனது தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக்கொண்டாள்.

அப்பாடி எனப் பெருமூச்செறிறந்த மனோ "இஞ்சேருங்கோப்பா..மஞ்சு கவனமா கந்தோ ருக்குப் போட்டாளாம்"

"உந்த மனிசிக்கு எல்லாத்துக்கும் பயம்... பயம்" மனிசியை மனதுக்குள் திட்டிக்கொண்டு சிவராசா மாஸ்ரர் மீண்டும் தனது கையிலிருந்த புத்தகத்துக்குள் மூழ்கினார்.

------------------------

வழமைபோல அன்றும் வேலைக்கு மஞ்சு புறப்பட்டாள். அன்றைய தினம் அவளது பிறந்த நாளென்ற காரணத்தால் அம்மாவிடம் ஐம்பது வடை சுடச்சொன்னதுடன். அப்பாவிடம் சொல்லி பேக்கறியிலை ஒரு கிலோ கேக்கும் வாங்கி இரண்டையும் பக்குவமாய் எடுத்துக் கொண்ட துடன் தனது மதிய நேர உணவுப் பொதியையும் எடுத்து வைத்து புறப்பட அவள் ஆயத்தமான வேளை. "பிள்ளை அஞ்சு இண்டைக்குப் பின்நேரம் கோயிலுக்குப்போய் கும்பிட்டிட்டு உன்ரை பேரிலையும் அரிச்சினை செய்ய வேணும் மினக்கிடாமல் பின்னேரம் கெதியிலை வா பிள்ளை" எனச் சொன்னபடி மகளுக்கு விடை தந்தாள் அம்மா.

ஆனால் அம்மா சொன்னமாதிரி மஞ்சு அன்று வழக்கமாய் அவள் வருகிற நேரத்துக் குக்கூட வரவில்லை. நேரம் மாலை ஆறு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு மாத்திரமல்ல சிவராசா மாஸ்ரருக்கும் மனதுக்குள் பயம் ஏற்பட்டுவிட்டது. "என்னப்பா... இண்டைக்கெண்டு அவளை இவ்வளவு நேரமாகியும் காணேல்லை" என்றாள் மனோன்மணி கணவனைப் பார்த்து. "ஓமப்பா எனக்கும் யோசனையாத்தான் இருக்கு ஒருக்கா அவளுக்கு கோலெடுத்துப்பார்" என மாஸ்ரர் சொல்லிக்கொண்டிருக்க, மனோன்மணியின் தொலைபேசி அலறியது. பதட்டத்துடன் அதை எடுத்து காதிலை வைத்ததும் "அம்மா நான் மஞ்சுதான் கதைக்கிறன். நான் இங்கை உவர்மலைச்சந்தி வழிவிடு பிள்ளையார் கோயிலடியிலை நிக்கிறன். உடனை அப்பாவை இங்கை வரச்சொல்லுங்கோ" என மஞ்சுவின் குரலொலித்து ஓய்ந்தது. மாஸ்ரரும் அதை அறிந்து தாமதியாமல் ஓட்டோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு அங்கு விரைந்தார். அங்கு சென்றவர் மகளின் கோலத்தைக் கண்டதும் துடி துடித்துப்போனவராய் "பிள்ளை என்னடி நடந்தது? கையெல்லாம் காயம், உடுப்பெல்லாம் சேறு சகதி" என வினவியபடி மகளின் உந்துருளியையும் நோட்டமிட்டார். அதைப் பார்த்ததும் மேலும் வெலவெலத்துப்போனார் மாஸ்ரர். அதன் முன் மட்காட் நீளப்பாட்டுக்கு வெடித்திருந்ததுடன் முன்லைற் கண்ணாடியுடன் பக்கப்பார்வைக் கண் ணாடிகள் முறிந்து தொங்கிக்கொண்டிருந்தன. தகப்பனைக் கண்ட மகளுக்கு பொத்தென அழுகை பீறிட்டெழுந்தாலும் கோயிலருகே நின்ற சனத்தைக் கருத்திற்கொண்டு சற்று நிதானங் கொண்டவளாய் அப்பாவை கட்டித்தழுவ. "பிள்ளை யோசிக்காதை தலைக்கு வந்தது தலைப் பாகையுடன் போயிருக்கு உனக்கொண்டும் நடக்காதது பெரிய புண்ணியம். எப்பிடியும் பைக்கைத் திருத்த முப்பதாயிரத்துக்கு மேலை வரும்போலை கிடக்குது. நீ யோசியாதை நான் உனக்குத் திருத்தித் தாறன்" என மகளை அவர் தேற்றிவிட்டு "அதுசரி பிள்ளை அப்பிடி என்ன நடந்ததடி இப்பிடியெல்லாம் நடக்க" என மகளைப் பார்த்து கவலையுடன் கேட்டார்.

மஞ்சுவும் நடந்த கதையை தகப்பனுக்கு அழுதழுது எடுத்துரைத்தாள்.

---

அன்று வழமைபோல பின்நேரம் அலுவலகம் விட்டு வெளியே வந்த மஞ்சு, உட்துறைமுக வீதியூடாக தனது உந்துருளியை செலுத்தி வந்துகொண்டிருந்தாள். அப்படி அவள் வந்து கொண்டிருக்கும்போது அவளுக்குப் பின்னாலிருந்து ஒரு பலமான கைதட்டல் அவளை மறிக்க, மஞ்சு, யாராய் இருக்குமோ என அறியும் பொருட்டு தனது உந்துருளியை மெதுவாக்க , " மஞ்சு...நில் நானும் வாறன் உன்ரை வீட்டுக்குக் கிட்டத்தான் நானுமிருக்கிறனான். நான் உனக்கு யோக்கி றபி ரியூசன் தந்த கலா ரீச்சரின்ரை மகள் சித்திரா...என்ன என்னை மறந்துபோட்டியே? நான் இங்கை பில்டிங்கிலை வேலை செய்யிறன்" எனச் சொன்ன அவள், தனது கையில் ஆயத்தமாக வைத்திருந்த தலைக் கவசத்தை மாட்டியபடி மஞ்சுவின் உந்துருளியின் பின்னால் பாய்ந்து ஏறிக்கொண்டாள். அவள் பின்னால் தொற்றிக்கொண்டதை அறிந்த மஞ்சு, "ஐயோ அக்கா தயவுசெய்து இறங்குங்கோ எனக்கு டபிள் ஓடிப் பழக்கமில்லை. ஆரையும் நான் இது வரைக்கும் பைக்கிலை ஏத்தினதில்லை அக்கா..தயவுசெய்து இறங்குங்கோ..என்னாலை டபிள் ஓடேலாதக்கா...பிளீஸ் இறங்குங்கோ...பிறகு எங்கை யெண்டாலும் இரண்டுபேரும் விழுந்தெழும்பவேண்டிவரும் இறங்குங்கோ"என மஞ்சு பலமுறை கெஞ்சியும் ரீச்சரின்ரை மகள் சித்திரா அசையாமல் இடிச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளிபோல பின்னால் இருந்துகொண்டு "மஞ்சு.. நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை நான் இருக்கிறன்.. உன்னை பலன்ஸ் பண்ணி கொண்டுபோறது என்ரை பொறுப்பு" எனச் சொன்னபடி மஞ்சுவை வலுக்கட்டாயமாக உந்துருளியை ஓட வைத் தாள். "என்னடா ஒரு சோதனை…எங்கை இருந்து இந்த வேதாளம் வந்து தொத்திக் கொண்டதோ" என மனசுக்குள் எண்ணியபடி உந்துருளியை பயந்தபடி மெல்ல மெல்ல நகர்த்தினாள் மஞ்சு. கையெல்லாம் உதறல் எடுத்தது. கான்ரில் அங்கையும் இங்கையுமா பைக்கை உலாஞ்ச வைத்தது. உவர்மலைச் சந்தி வரை ஒருவாறு அவள் வந்துவிட்டாள். திடீரென எதிரே வந்த ஒரு வாகனம் வலு வேகமாக இவளைநோக்கி வருவது போல இருக்க பதட்டப்பட்டவளாய் தன்னை மோத வருவதுபோல ஒரு பயப்பீதியில் சடாரென பைக்கை திருப்பினாள். அவ்வளவுதான். "படார்" என ஒரு சத்தத்துடன் அவளது உந்து ருளி தெருவின் கரையில் இருந்த கழிவுநீர் வாய்க்காலுக்குள் பாய்ந்தது. உந்துருளியில் இருந்த மஞ்சு ஒருபுறமும். பின்னால் அடம்பிடித்து ஏறிய சித்திரா ஒருபுறமும் வீசி எறியப்பட. இருவரும் தடாலென தெருவிலே போய் விழுந்தனர். நல்ல காலத்துக்கு அவ்வேளை ஒரு வாகனமும் வராததால் இருவரும் தப்பித்துகொண்டனர். இதை அவதா னித்த தெருவிலே போய்க்கொண்டிருந்த சனங்கள் ஓடோடி வந்து இருவரையும் கைத்தாங்கலாக தூக்கிவிட்டனர். அது மாத்திர மல்ல சில இளசுகள் விழுந்து கிடக்கிற பெண் பிள்ளைகளுக்கு உதவி செய்வதை விட்டு விட்டு தமது கைத் தொலை பேசியில் அந்தக் காட்சிகளை வீடியோ பண்ணிக் கொண்டி ருந்தனர். மஞ்சுவுக்கோ அதையெல்லாம் பார்க்க பெரிய வெக்கமாயும் அழுகையாகவும் வந்தது. அத்துடன் வந்தவர்களில் சிலர் அஞ்சுவைத்தான் குற்றம் சொல்லி பேசிக் கொண்டும் நின்றனர். ஆனாலும் சில மனிதாபிமான முள்ளவர்கள் கானுக்கை சரிவாக விழுந்து கிடந்த உந்துருளியை பெரிய முயற்சி யெடுத்து வெளியே எடுத்து நிறுத்தி விட்டு அவளைத் தேற்றி ஆறுதல் கூறினர்.

தனது கைகாலில் காயங்கள். பிருஸ்ட பாகத்தில் பலமான அடி .உடையெல்லாம் சேறு என்பதோடு வலி வேதனையால் தவித்துக்கொண்டிருந்த மஞ்சுவுக்கு. தனது உந்துருளியின் கோலத்தைப் பார்த்தபோது மயக்கமே வந்துவிடும் போல இருந்தது. வாங்கி மூன்று மாதங்களுமாகவில்லை அதற்குள் முன்பக்க மட்காட் நீளப்பாட்டுக்கு வெடித்திருந் ததுடன். முன் லையிற் கண்ணாடி,பக்கப் பார்வைக் கண்ணாடிகள் உடைந்து முறிந்து தொங்கிக் காட்சி தந்தன. இதையெல்லாம் பார்த்த மஞ்சு. அவளுக்கு பின்னால் அழுங்குப் பிடியாய் தன்னால் டபிள் ஓடேலாது என கெஞ்சி மண்டாடிக் கேட்டும் குந்தியிருந்த வேதாளத்தை ஒரு வாங்கு வாங்கவேணுமென்ற ஆத்திரத்தில் அவளைத்தேடினாள். அவள் அப்படித் தேடிக் கொண்டிருக்கும் போது. அவள் தேடிய அந்த வேதாளம். தனது உடைகளை சரிப்படுத்தியபடி தலைக் கவசத்தை அணிந்து ஆயத்தமாக நின்றவள். அங்கு நடந்த அவலங்களைப்பற்றி எந்தவித அக்கறையும் கொள்ளாதவளாக. அவ்வேளை தெருவில் அந்த வழியால் உந்துருளியில் வந்த ஒரு இளைஞனை கைகாட்டி மறித்து அதில் படாரெனத் தொத்தி ஏறி. மஞ்சுவை ஏறெடுத்தும் பாராமல் பறந்து கொண்டிருந்தாள்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சியாமளா யோகேஸ்வரன்**



அது வசந்தனின் உணர்வுகளுக்கு எந்தத் தயவும் காட்டாமல் மணி ஒன்று பத்து என்று காட்டியது. விடிவதற்கு இருக்கும் நேரம் வெகு நீண்டதாய் தோன்றியது. தேநீர் ஒன்றைப் போட்டுக் குடித்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது. ஆனால் அதைச் செயற்படுத்தும் உற்சாகம் மனதில் இருக்கவில்லை. வேலைக்குப் போவ தற்காக தூங்கியே ஆக வேண்டும். அப்போது தான் விடியக் காலையில் எழும்பலாம் என்பது போன்று ஒரு கட்டாயமும் இப்போதிருக்கவில்லை.

முன்பானால் காலையில் ஏழு மணிக்கே வசந்தன் வேலைக்குப் போய் விடுவான். இரவு நேரத்தில் நோயால் நொந்து போனவர்கள் விடிந்ததும் முதல் வேலையாக வைத்தி

# வடுக்கள்

இரவின் ஆழ்ந்த அமைதியைக் குலைப்பதாய் தூரத்தில எங்கோ நாய் ஒன்று ஒரு ரிதத்துடன் நீண்ட நேரமாய் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருந்தது. அதற்கு இணையாக பக்கத்தில் இருக்கும் வீடுகளில் இருக்கும் நாய்களும் அவ்வப்போது குரல் கொடுத்து விட்டு அமைதியாகி விட்டிருந்தன. ஆனால் அடங்கவே மாட்டேன் என்று ஒரு நாயின் குரைப்பு மட்டும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. கைக்கு எட்டும் தூரத்தில் இருந்த கைத்தொலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்த்தான் வசந்தன்.

யரைப் பார்த்து மருந்து வாங்கிக் கொள்ளத் துடிப்பார்கள் என்பது வசந்தனுக்கு நன்றாகவே தெரியும். அதனால் தான் தன் தூக்கத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு முதலாவது ஆளாக கிளினிக்கைத் திறந்து நோயாளிகளைப் பார்க்கத் தொடங்கி விடுவான். மனைவி பிரியா வும் கணவனின் மனதையும் தொழிலில் அவனது ஈடுபாட்டையும் பற்றி நன்கறிந்தவளாய் அவனுக்கு அனுசரணையாயிருந்தாள். காலை யில் கணவனின் உதவியை எதிர்பாராமல் அவனுக்கானதும், தனக்கானதும் பள்ளியில் ஐந்தாவது படிக்கும் மகன் சத்யனுக்குமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவைத் தயார் செய்வாள். வசந்தன் தம் இருவருக்குமான கோப்பியைத் தயாரிப்பான். அதை சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருந்தபடி ஏதாவது பேசிக்கொண்டு அருந்துவார்கள். தினமும் அவர்களின் பொழுது அழகாக ஆரம்பிப்பது அப்படித்தான். வசந்தன் கிளம்பிய பின்னர், பிரியா சத்யனைத் தயார் செய்து தானும் வங்கி வேலைக்குத் தயாராவாள்.

மாலையில் நான்கு மணிக்கு வேலையை முடித்து மகனையும் அழைத்துக் கொண்டு வசந்தன் வீட்டுக்கு வந்து விடுவான். பிரியா வருவதற்குள் வீட்டை ஒதுங்க வைத்து, இரவுச் சமையலுக்குத் தேவையானதை எடுத்து வெட்டி வைப்பான். பிரியா வந்தவுடன் அன்றைய வேலை நிகழ்வுகளை அல சியபடி மாலைக் கோப்பியுடன் ஏதாவது கொறிப்பார்கள். பிறகு இருவரும் சேர்ந்து பேசிக்கொண்டு சமைப்பார்கள். சமைப்பது பிரியா தான் என்று சொன்னாலும் கூட்டி வைத்து ருசி பார்க்கும் வேலை மட்டும் தான் அவளுடையது. சமைத்தவற்றை பாத்திரத்தில் எடுத்து வைத்து, கழுவி ஒதுங்க வைப்பது எல்லாம் வசந்தன் தான். வேலை செய்வதே தெரியாமல் ஆரோக்கியமான சமையலை வீட்டிலேயே முடித்து விடுவார்கள். வெளியில் சாப்பாட்டுக்கென அவர்கள் செல்வது மிக அரிது. ஒருவர் வீட்டில் இல்லையென்றாலும் மற்றவருக்கு எதையோ தொலைத்து விட்ட உணர்வை உருவாக்குவதும் அந்தப் பொழுதுகள் தான்.

அப்படி வாழ்ந்தவர்கள் இப்படி பிரிந்து போகக் கூடும் என்று யாரும் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். உணர்வோடு கலந்து உயிராய் வாழும் மனைவி கிடைத்து விட்டிருக்கின்றாள் என்று எத்தனை தடவைகள் வசந்தன் பெருமைப் பட்டிருக்கின்றான். ஆனால் தன்னைப் பற்றி கேவலமாய் நினைத்து பிரியா விலகிச் சென்று விடும் நிலைமை என்றாவது உருவாகும் என்று அவன் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை. பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போன்று, வலியால் துடிப்பவனுக்கு ஆறுதல் தராமல், பிரிவு என்ற கொடுந் தண்டனையையும் தந்து விட்டுச் சென்று விட்டிருக்கின்றாள் பிரியா. அவளை நினைத்து உருகி, மகனைக் காண வேண்டும் என்ற தவிப்பில் வாடி, சரியாகச் சாப்பிட்டு, சரியாகத் தூங்கியே வெகு நாட்களாகி விட்டிருந்தன.

உடலின் ஒவ்வொரு அணுவும் பிரியா வையும், சத்யனையும் பார்ப்பதற்காக ஏங்கித் துடித்துக் கொண்டிருந்தது. பிரியாவுக்கும் இதே போன்ற உணர்வுகள் இருக்கக் கூடுமா? நான்கு வருடக் காதலும், பத்து வருட மணவாழ்க்கையுமாய் மனமொன்றி வாழ்ந்த இத்தனை வருட காலங்களில் பிரியா தன்னைப் பற்றித் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லையே என்ற கவலைதான் இப்போது அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

கம்பசில் படிக்கும் போது முதலாவது வருடமே அவர்களது காதல் அரும்பி விட்டிருந்தது. படிப்பை முடித்து வேலை கிடைத்தவுடனேயே இரு வீட்டினர் சம் மதத்துடன் திருமணத்தை முடித்துக் கொண்டு எதிர்கால நல்வாழ்வைத் தேடி அவுஸ்திரேலியாவுக்குக் குடி பெயர்ந்தனர். வந்தவுடனேயே வைத்தியராக வேலை கிடைத்து விடவில்லை. அவுஸ்திரேலியாவில் வைத்தியராவதற்காக ஒவ்வொரு பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கஷ்டப்பட்டுப் படித்தே தடை தாண்ட வேண்டியிருந்தது. ஒருவாறு பொது மருத்துவராக ஒரு கிளினிக்கில் வேலை எடுத்த பின்னர் ஓய்ந்து இருக்கலாம் என்றால் அதுவும் முடியவில்லை. அதற்குப் பிறகும் மாறி மாறிப் படித்துப் பரீட்சை எடுக்க வேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில் எதற்காக நாட்டை விட்டு வந்தோம் என்று தோன்றத் தொடங்கியிருந்தது. வைத்தியர் என்றால் ஊருக்குள் ஒரு மரியாதையுடன் எத்தனை கௌரவமாய் வாழ்ந்திருக்கலாம் என்ற எண்ணமும் தோன்றி மறைந்திருக்கின்றது. ஆனால் வந்த நாட்டில் வாழ்க்கையே இப்படித் தொலைந்து போய் விடக் கூடும் என்று என்றுமே எண்ணியிருக்கவில்லை.

உயிராய் மதித்த தொழிலையும் குடும்பத்தையும் தொலைக்கக் காரணமாயிருந்த அன்றைய வெள்ளிக்கிழமையை இன்னமும் மறக்க முடியவில்லை. வழமை போல தான் அன்றைய பொழுது விடிந்திருந்தது. அன்று அதிக நோயாளிகள் முன் கூட்டியே பதிந்திருக்கவில்லை என்பதால், நேரத்துக்கே வீட்டுக்குப் போய் விடலாம் என்பதில் வசந்தனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பத்து மணிக்கு தேநீரை மட்டும் போட்டு எடுத்துக் கொண்டு அடுத்த நோயாளியை அழைத்தான்.

வந்தவள் ஒரு ஐரோப்பிய இனப் பெண் மணி. வயது முப்பத்தைந்து என்பதை நோயாளிக்கான குறிப்புச் சொன்னது. அறைக்குள் நுழையும் போதே மூக்கைத் துளைக்கும் விதமான அதீத வாசனை. சிக்கன ஆடையும் முகத்துக்கு அளவுக்கதிகமான மேக்கப்புமாய் இருந்தவளை. அழைத்து உட்கார வைத்தான் வசந்தன். ஆங்கிலத்தில் கேள்விகளைக் கேட்டபோது அவள் தடுமாறிய விதத்தில் அவளது தாய்மொழி ஆங்கிலமல்ல என்பது புரிந்து போனது. மொழி பெயர்ப்பாளரின் உதவி வேண்டுமா என்று கேட்டபோது தன் கௌரவமே போய் விட்டதாய் முகத்தைச் சுருக்கிக் கொண்டு தனக்கு ஆங்கிலம் பேச நன்றாக வரும் என்று சொன்னாள்.

"என்ன பிரச்சனை?" எளிய ஆங்கி லத்தில் ஆறுதலாகவே பேசினான் வசந்தன்.

" நான்கைந்து நாளாக வயிற்றில் வலி" வேதனையால் முகத்தைச் சுருக்குவது போல் வைத்துக் கொண்டு வயிற்றின் அடிப்பகுதியைத் தொட்டு சொன்னாள்.

"விட்டு விட்டு வருகிறதா?"

"இல்லை அப்படியே இருக்கிறது."

மாதவிடாய், உணவு, கழிவகற்றல் எல்லாவற்றையும் பற்றிக் கேட்டுக் குறித்துக் கொண்டவன் அருகில் இருந்த நோயாளிகளைப் பரிசோதிக்கும் மேசையில் ஏறிப் படுத்துக் கொள்ளச் சொன்னான்.

அளவாக ஆடையைத் தளர்த்தச்சொல்லி விட்டு அடி வயிற்றிலும் மேற்புறமாகவும் மெதுவே அழுத்தி வலி இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டு வந்தான். 'இல்லை, இல்லை' என்று சொல்லிக் கொண்டு வந்தவள் திடீரென்று வலியை உணர்த்துவதாய் "ஆ" என்றபடி அசைந்து திரும்பி விட வசந்தன் "சொறி" என்றபடி அவசரமாய் கைகளை விலக்கிக் கொண்டான். நடந்ததை எப்படி எடுத்துக் கொண்டாளோ என்று வசந்தன் யோசித்துக் கொண்டிருக்கையில் அந்தப் பெண் கதவைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டாள்.

அவசரமாய் எழுந்து வெளியே போனவளைத் தடுக்க முடியவில்லை. அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனபின்னர் தலையில் கையை வைத்து அழுத்தியபடி யோசனையில் அப்படியே அமர்ந்திருந்தான். அடுத்த நோயாளியை அழைக்கவும் தோன்றவில்லை. ஒரு பத்து நிமிடம் ஆகியிருக்கும் வெளியே பெரிய குரலில் யாரோ வாக்குவாதம் செய்வது போன்றிருக்க கதவைத் திறந்து வெளியே வந்தான்.

அந்தப் பெண்ணுடன் ஒரு ஆடவனும் நின்றிருக்க இருவரும் வரவேற்புப் பெண் ணுடன் பலத்த குரலில் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். வசந்தனைக் கண்டதும் அந்தப் பெண். ஆணிடம் என்னமோ சொல்ல அவன் இவன் பக்கம் திரும்பினான். பழக்கவழக்கமோ. பேசும் விதமோ தெரியாதவனாய் வசந்தனையும், அவன் தொழிலையும் அவன் இனத்தையும் சேர்த்துக் கெட்ட வார்த்தையில் ஆட்களுக்கு முன்னால் திட்டியதில் வசந்தனுக்குப் பாதி உயிர் போய் விட்டதைப் போன்றிருந்தது. தனது பெண் நண்பியைத் தவறான எண்ணத்துடன் தொட்டு. அசிங்கமாய் கேள்வி கேட்டதற்கு நியாயம் சொல்ல வேண்டும் என்று பலத்த குரலில் அந்த ஆடவன் கத்திக் கொண்டிருக்க அந்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி அழைக்கப்பட்டார். நடந்ததைக் கேட்டவர் வசந்தனைப் பார்த்த பார்வையில் மரியாதை மட்டும் கொஞ்சமும் இருக்கவில்லை.

வசந்தனால் தன் நிலையை எடுத்து சொல்லி முழுமையாகப் புரிய வைக்க முடியவில்லை. ஒரு பெண் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் சமூகம் இருவரின் வாதத்தையும் கேட்டு முடிவெடுக்கும் நிலையில் இல்லை என்றே வசந்தனுக்குத் தோன்றியது. அன்றே அவன் மேல் வழக்குப் பதியப்பட்டு அவன் மருத்துவம் பார்ப்பதற்கான உரிமையும் ரத்துச் செய்யப்பட்டு விட்டிருந்தது. ஒரு நாளில் தன் உலகம் இருண்டு விட்டதாய் வசந்தனுக்குத் தோன்றியது. மாலை ஆறு மணியாகி விட்டிருந்தும் வசந்தன் வீட்டுக்கு வந்து சேரவில்லையே என்று பிரியா வேறு போன் பண்ணிக் கொண்டிருந்தாள். பிரியாவிடம் அத்தனையும் கொட்டி அவள் தோளில் சாய்ந்து ஒரு பாட்டம் அழுதால் தான் மனம் ஆறும் போல் தோன்றியது. விட்டால் போதும். மிகுதியைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான். காரை விட்டு இறங்க முன்னர் பிரியா கராஜ் கதவைத் திறந்து கொண்டு வந்து விட்டாள்.

"ஏம்பா லேட்? " பதில் சொல்லத் தேவை யில்லாமலேயே அடுத்த கேள்வியையும் கேட்டு விட்டாள்.

"ஏன் முகம் ஒரு மாதிரியா இருக்குது? என்ன நடந்தது?"

"சொல்லுறன்.." வசந்தன் சொல்லி விட்டுப் போய் கதிரையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். தண்ணீர் கொதிக்கும் சத்தம் கேட்டது. ஐந்து நிமிடத்துள் தேநீரைக் கொண்டு வந்து நீட்டினாள் பிரியா.

"குடியுங்கோ" என்றதும் மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் குடிக்கத் தொடங்கினான்.

"என்னப்பா நடந்தது?" பிரியா பொறுமை யில்லாமல் கேட்டாள். நடந்ததை எப்படிச் சொல்வது என்று தெரியாத திகைப்பில் தேநீர் கூடத் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டு விட்டது.

பிரியாவுக்கு விசயம் கொஞ்சம் தீவிரம் என்பது இப்போது புரிந்து விட. வசந்தனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா" என்று அழைத்தபடி வந்த சத்யனை மேலே போய் விளையாடச் சொன்னாள். இருட்டி விட்டிருந்தாலும் எழும்பிச் சென்று லைட்டைப் போடும் மனநிலையில் இருவருமே இல்லை

"ஏனப்பா இப்பிடி இருக்கிறீங்கள்?" பிரியா கேட்டவுடன் வசந்தன் நடந்ததைச் சொன்னான்.

வசந்தனின் கைகளைப் பிடித்திருந்த பிரியாவின் விரல்கள் மெல்லத் தளர்ந்தன. வசந்தனின் இதயம் படுவேகத்தில் துடிக்க பிரியாவின் முகத்தைப் பார்த்தான். இருட்டில் பிரியாவின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் அணைத்து ஆறுதல் சொல்லமாட்டாளா என்றே வசந்தனின் மனம் ஏங்கியது. அடுத்து வந்த சில நிமிடங்களை ஆட்சி செய்த மௌனம் வசந்தனைக் கூறு போடப் போதுமானதாய் இருந்தது.

"பிரியா?" வசந்தனின் குரலில் நடுக்கம்.

"நீங்கள் அப்பிடி ஒன்றும் செய்ய வில்லைத் தானே?"

பிரியா அந்தக் கேள்வியைக் கேட்டதன் அர்த்தம் என்னவாயும் இருக்கலாம். ஆனால் அப்படிக் கேட்டதே தன்னைச் சந்தேகப்பட்டது போலிருந்தது. எதுவும் சொல்லாமல் எழுந்து போய் படுக்கையில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான். இதயம் அழத் தொடங்கியிருந்தது.

உலக அழகியாக இருந்தால் கூட எனக்குள் எந்த உணர்வும் தோன்ற மாட்டாது என்பதைப் பிரியா அறிய மாட்டாளா? வைத்தியத் தொழிலில் உடல்களையும் உறுப்புகளையும் பார்த்துப் பார்த்து என் உணர்வுகள் மரத்து விட்டிருக்கின்றனவே? அதனால் மணவாழ்க்கையில் கூட நான் தண்டனை அனுபவிக்கின்றேன் என்பதை அவளுக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? ஏன் இப்படி ஒரு கேள்வி கேட்டாள்?கேள்விகள் சுழன்று வர வசந்தனின் இதயம் கனத்துப் போயிருந்தது.

எல்லாப் பெண்களும் இப்படித்தான் இருப்பார்கள் என்று அறிவு சொன்னதை இதயம் ஏற்க மறுத்தது. எல்லாமாய் இருந் தவளுக்கே என்னைப் புரியவில்லை எனும் போது எப்படி என் மேல் எந்தத் தப்பும் இல்லை என்பதை மற்றவர்களுக்கு நிரூபிக்கப் போகின்றேன் என்றெண்ணிப் பார்க்கையில் எதிர்காலம் இருண்டு விட்டதாய் தோன்றியது.

கீழே பிரியா சமைத்துக் கொண்டி ருப்பதைப் பாத்திரங்களின் ஒலியில் இருந்து அறிந்து கொண்டான். போக வேண்டும் என்று மனம் துடித்தது. சத்யன் அப்பாவைச் சாப்பிட வருமாறு கூப்பிட்டபோது. "அப்பாவுக்கு உடம்பு சரியில்லை நீ சாப்பிடு" என்று பிரியா சொன்னதும் கேட்டது. படிகளில் கேட்ட அழுத்தமான காலடிச்சத்தத்தில் பிரியா மேலே வருகிறாள் என்பதை ஊகித்துக் கொண்டான். பிரியா தன்னைக் கேட்டது இன்னமும் மனதில் உறுத்திக் கொண்டிருந்ததில் கண்களைத் திறந்து அவளைப் பார்க்கத் தோன்றவில்லை. என்ன சொன்னாலும் சமாதானம் ஆகப் போவதில்லை என்று பொய்க்கோபத்துடன் எண்ணிக் கொண்டான். ஆனால் ஐந்து நிமிடங்களுக்குக் கிட்ட கடந்து விட்ட போதிலும் பிரியா அருகில் வந்ததாகத் தெரியவில்லையே என்ற யோசனையில் கண்களைத் திறந்து பார்த்தான்.

பிரியா இவனைப் பார்த்தபடியே நின் றிருந்தாள். முகத்தில் வேதனை இழை யோடியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாங்கோ சாப்பிட" பிரியாவின் குரலில் வெறுமையே அதிகமாய் இருந்தது.

வசந்தனுக்குப் பசிக்கவேயில்லை. வேலையில் நடந்த அநியாயத்தை விட, பிரியா தன்னைப் புரிந்து கொள்ள வில்லை என்ற வேதனையே அதிகமாய் இருந்தது.

"சாப்பிடலாம் வாங்கோ." பிரியா இரண்டாம் தடவையாகச் சொல்ல.

"உனக்குக் கூடவா என்னைப் பற்றித் தெரியவில்லை பிரியா? நான் அப்படிப்பட்ட ஆளில்லை பிரியா." தன்னைப் புரிய வைத்து விடவேண்டும் என்ற தவிப்புடன் வசந்தன் சொன்னான்.

"நான் உங்களுக்கு என்ன குறை வைத்தேன்?" வசந்தனுக்கு ஒரு நிமிடம் எதுவுமே புரியவில்லை. நான் தவறாகவே நடந்து கொண்டு விட்டேன் என்று முடிவு செய்து விட்டாள் என்பது அப்போது புரிந்தது.

"நாளைக்கு எனக்கு வேலை இருக்குது. சாப்பிட்டால் எல்லாத்தையும் கழுவி வைச்சிடுவன்."

"எனக்கு பசிக்கேல்லை. ஒன்றும் வேண்டாம்." வசந்தன் சொல்லி விட்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டான். கண்களைக் கண்ணீர் ஈரமாக்கியது.

"என்ன இருந்தாலும் விசாரணையில் தெரியும் தானே? இப்ப வாங்கோ."

"அந்த விசாரணையின் பின்னர் தான் என்னை உனக்கு நிரூபிக்க வேண்டும் என்றால் இத்தனை நாள் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமில்லை. ஊருக்கு நிரூபிக்க வேண்டிய தேவையிருக்கலாம். ஆனால் உனக்குமா பிரியா?" குரல் உடைவதை வலிந்து நிறுத்தினான்.

"இப்படி வசனம் பேசுறதிலை ஒரு அர்த்தமும் இல்லை. உங்களுக்குத் தெரிய வேணும்.." பிரியா சொல்லிக்கொண்டிருக்க வசந்தன் இடைமறித்தான்.

"பிரியா பிளீஸ். என்னை வருத்தாதே. ஏற்கனவே நான் நொந்து போயிருக்கிறன். இப்போதைக்கு என்னைக் கொஞ்சம் அமைதியா இருக்க விடு."

பிரியா படியில் இறங்கிச் சென்ற விதத்தில் கோபமோ அல்லது ஏதோவொன்று அப்படியே தெரிந்தது.

வசந்தனுக்கு வேதனையாக இருந்தது. ப்ரியாவும் சாப்பிடவில்லை என்பது அடுத்த பத்து நிமிடத்தில் வீட்டின் கீழ்ப்புறம் அமைதியாகி விட்டதில் இருந்து புரிந்து கொண்டான். உறங்குவதற்கென அந்த அறைக்குள் வரவில்லை. மகனுடன் போய் படுத்துக் கொண்டிருப்பாள் என்று நினைத்துக் கொண்டான். செல்லச் சண்டைகளோ அல்லது கொஞ்சம் தீவிர சண்டைகளோ வந்தபோதெல்லாம் யாரோ ஒருவர் சமாதானக் கொடி பிடித்து பிரச்சனையைத் தீர்த்து விடுவார்கள். சாப்பிடாமல் உறங்கிய இரவுகளே இல்லை எனலாம். எல்லா வருத்தத்தையும் திட்டியோ கொட்டியோ தீர்த்து விட்டு மறுநாள் எல்லாவற்றையும் மறந்து புதுநாளைத் தொடங்குவார்கள். இன்றையது போல் என்றுமே நடந்ததில்லை. பிரியா இத்தோடு தன்னை வெறுத்து விடுவாளா? விசாரணையில் நான் எப்படி என்னை நிரூபிக்கப்போகின்றேன்? மானம் என்ற பெயரில் பெண்கள் சொல்வதை சமூகம் இலகுவில் ஏற்றுக் கொண்டு விடுமே? என்ன செய்யப் போகின்றேன்? பிரியா என் அருகில் வந்து என் சுமைதாங்கியாகி என்னை ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த மாட்டாளா? ஏக்கம் வெறும் நிராசையாக மட்டுமே போனது. அன்று தொலைத்து விட்ட தூக்கத்தை அதன் பின்னர் வசந்தன் இன்றும் தேடிக்கொண்டு தானிருக்கின்றான்.

அதற்குப்பிறகு பல கட்டங்களாக உள்ளக விசாரணைகள் நடந்து விட்டன. வேலையில்லாமல் வீட்டில் இருக்கின்றோமே என்று எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுக் கொண்டு செய்தான். பிரியாவுடன் சகஜமாகப் பேச முயன்ற வேளைகளில் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றாள். தன்னுடைய வேலைகளைத் தானே பார்த்துக் கொள்வேன் என்று இறுக்கமாகச் சொன்னாள். சத்யனை இழுத்து தன்னுடனேயே வைத்துக் கொண்டாள். வசந்தனின் வாழ்க்கையில் அத்தனை வசந்தமும் ஒற்றை நாளில் தொலைந்து போய் விட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது பிரியாவும் வந்திருந்தாள். வீட்டில் தன்னிலை பற்றிய விளக்கம் கொடுக்க முடியாத நிலையில் இருந்த வசந்தனுக்கு அதுவும் ஒருவிதத்தில் நன்மை என்றே முதலில் தோன்றியது. ஆனால் அந்தப் பெண் கையும் காலும் வைத்து ஒவ் வொன்றாக விபரித்த விதத்தில் வசந்தன் ஒரு காமாந்திரனாகவே தோற்றுவிக்கப்பட்டான். வசந்தனுக்கு முள்ளின் மேல் நிற்பது போன்றிருந்தது. பிரியா இடைநடுவே தலையைக் கைக்குள் கொடுத்துக் கொண்டு அழுவதைக் கண்டதும் இன்னமும் துடித்துப் போனான்.

அன்று வீட்டுக்கு வந்ததுமே பிரியா தன்னுடைய உடுப்புகளை மடித்து அடுக்கத் தொடங்கினாள். தேவையான பாத்திரங்களையும் எடுத்து வைத்த போது வசந்தனுக்கு விசயம் புரிந்து போனது.

"நான் தேவையேயில்லை என்று தீர்மானித்து விட்டாயா? என்னைக் குற்றவாளி என்று முடிவு செய்து விட்டாயா பிரியா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

"வைத்தியத் தொழில் பற்றி உனக்கு என்ன தெரியும் பிரியா? எனக்கு என்னை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் தாவன் பிளீஸ்"

"எனக்கு எதுவும் தெரியாது என்ற தைரியந்தானே உங்களை இப்படிச் செய்ய வைத்தது?" வார்த்தைகளைப் பிடித்து வம்பு வளரப் போகின்றது என்பது வசந்தனுக்குப் புரிந்து போனது.

"பிரியா எனக்கு உன்னையும் சத்யனையும் விட்டால் யாருமேயில்லை."

"உங்களுக்கு யாருமே தேவை யில்லை." பிரியா சொல்லிவிட்டு தம் அறைக்குள் போய் கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள்.

பூட்டிய கதவையே வசந்தன் பார்த்துக் கொண்டு நின்றான். மனம் இப்போது இறுகிப் போய் விட்டிருந்தது. போராடி வென்று தன்னை நிரூபிக்க வேண்டும் என்ற வைராக்கியம் பிறந்தது.

பிரியாவும் சத்யனும் எங்கு போயிருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளத் தோன்றவில்லை. அப்பாவுடன் பேச வேண்டும் என்று சத்யன் அடம் பிடிக்கும் வேளையில் பிரியா அழைப்பெடுத்துக் கொடுக்கின்றாள். போன் நம்பரை மாற்றவில்லை என்பது மட்டும் ஒரு ஆறுதலான விடய மாயிருந்தது. வசந்தன் தானாக ஒரு நாளும் அழைப்பெடுக்கவில்லை. சத்யசோதனையாக மனோதத்துவப் பரிசோதனை தொடக்கம் ஏதோவெல்லாம் செய்யச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்கள். அவனை விசாரித்தவர்களுக்கு அவன் பொய் சொல்லவில்லை என்பது தெரிந்திருக்கும். ஆனால் சட்டத்துக்கு அதை விடவும் சான்றுகள் தேவைப்பட்டனவே.?

வசந்தனின் காலம் நன்றாக இருந்திருக்க வேண்டும். இதே போன்றொரு சம்பவத்தில் அந்தப் பெண் நட்ட ஈடு பெற்றுக் கொண்டமை விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது. அவள் மனிதர்களைத் தவறாகப் புரிந்து கொள்கின்றாளோ அல்லது அவளின் நோக்கமே பணம் பறிப்பதோ தெரியவில்லை. வசந்தன் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டான். பிரியாவுக்குப் போன் எடுத்து சொல்ல வேண்டும் என்று கூட வசந்தனுக்குத் தோன்றவில்லை. எல்லாம் முடிந்து அவன் இனிமேல் வேலைக்குச் செல்லலாம் என்று முடிவும் வர மாலையாகி விட்டிருந்தது. ஏனோ வெற்றி பெற்று விட்டதான உணர்வு மட்டும் தோன்றவேயில்லை. மனது நிர்ச்சலனமாயிருந்தது. எல்லையற்ற அமைதியால் மனது நிறைந்திருந்தது.

வெளியில் இருந்த கதிரையில் ஆறுதலாக அமர்ந்து கொண்டான். அன்றுதான் காற்றைச் சுதந்திரமாகச் சுவாசிப்பது போன்று உணர்ந்தான். இளங்காற்று இதமாக வருடிக்கொடுக்க மேற்கில் வர்ணஜாலம் போட்டு மறையும் சூரியனின் அழகைப் பார்த்து ரசித்தான். பார்த்துக் கொண்டிருக்க முழுநிலவு அடுத்த பக்கத்தில் எழுந்தது. அந்தவட்ட நிலா பிரியாவை ஞாபகப்படுத்தியது. பிரியாவுக்குத் தீர்ப்பு தெரிய வந்தால் என்ன முடிவெடுப்பாள்? பிரியா தன்னுடன் வந்து இணைந்து விடுவாள் என்று உள்மனம் ஆணித்தரமாய் சொன்னது. கதிரையில் மூடிக் கொண்டு கதிரையில் நிம்மதியாகச் சாய்ந்து கொண்டான். கதிரையில் நீட்டிக் கொண்டிருந்த ஆணி ஒன்று என்றோ ஆறிப் போயிருந்த கைக்காயத்தில் குத்தி விட, வலியால் முனகியபடி தடவி விட்டுக் கொண்டான். வலிகள் சில நிரந்தரமானவை.




**கண்ணீரைக் காணிக்கை ஆக்குகிறேன்**

இலக்கிய நிகழ்வுகளில் இனி பேராசிரியர்
யோகராசாவை நாம் சந்திக்கமுடியாது.
மிகவும் பெறுமதிமிகு பண்பாளர்
எம்மைவிட்டுப் போய்விட்டார். எமது
எழுத்துக்களை வாசித்து உண்மையாய்
ஊக்குவிக்கும் பெரியவர். வாசிப்பின்
சொந்தக்காரர். தெளிவான சிந்த
னைக்குரியவர். நேசிப்பின்
புன்னகையாளர். தற்புகழ்ச்சி அறியாதவர்.
பேச்சின் பெருமதிப்பாளர். தமிழ்பேற்றின்
பெரும் வளவாளர்.
ஒரு தந்தைபோன்று எம்மை நேசித்தீர்கள்.
ஒரு ஆசிரியராய் கற்றலில், வாசிப்பில்
ஆர்வப்படுத்தினீர்கள்.
தேவையின்றி சலசலத்ததில்லை. பெரிதாக
உறவுபோல் ஒட்டிப் பேசியதில்லை.ஆனால்
எங்கு கண்டாலும் உரிமையாய் கல்வி
சேவை தொடர்பாக பேசுவீர்கள்.
பேராசிரியராக நீங்கள் இருந்தபோது
தமிழில் நீங்கள் கொண்ட ஆர்வமும்
அனைவரையும் மதிக்கும் சிறப்பிலும்
வாசிப்பில் நீங்கள் கொண்டிருக்கும் காதலும்
உங்களை எமக்கு முன்னுதாரணமாகக்
காட்டியது. மரணம் எல்லோருக்குமானது.
காலமானாலும் காலம் கடந்து வாழ்வீர்கள்.
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்

**சுதாகரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலெக்ஸ் பரந்தாமன்

# படிப்பும் பாதிப்பும்

**கதை: நினைப்பதெல்லாம்.. ஆசிரியர் : மண்டூர் அசோகா**

**தொகுப்பு: உறவைத்தேடி ஆண்டு: 2002**

வாழ்க்கை யாவர்க்கும் பொதுவானதொன்று. அது வாழ்வதற்கானதெனினும். அவ்வாழ்விலுள்ள ஏனைய ஜீவன்களைத் துன்புறுத்தலுக்கு ஆளாக்காது வாழ்தலே அறநெறியாகும். அறியாமல் செய்துவிடும் தவறுகளுக்கு மன்னிப்பு உண்டு. அறிந்து செய்யப்படும் தவறுகளுக்கு காலம் வழங்கும் தண்டனை கடினமானது. மனிதனானவன் இள அகவைகளில், தான் செய்வது தவறுகள் எனத் தெரிந்தும். தனது சுயநலனுக்காக மேலும் அச்செயல்களைச் செய்யும்போது. காலமானது தனக்குள் கணித்து வைத்து. உரியநேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தவறுகளை உணர்த்தித் தண்டித்து விடுகிறது.

அதேவேளை, பொறுமை எனும் உணர்வைக் கடைப்பிடித்து, சகிப்புத் தன்மையை முன்னெடுத்து, தம்மைத் தரம் தாழ்த்துபவர்களிடமிருந்து விலகிக் கடந்து செல்பவர்களை அக்காலமானது வழி நெடுகிலும் கைகொடுத்து உதவுகிறது. ஒதுக்கி விடப்பட்டவர்கள் முன்பாக அது உயர்நிலைக்கு உயர்த்தி விடுகிறது. வாழ்க்கை என்பது எவருக்கும் இங்கே நிரந்தரமில்லாதது. ஆயினும், வாழும் காலத்தில் வீம்புணர்வுகள்... வில்லங்கமான பேச்சு வார்த்தைகள்... 'நான்' எனும் ஆணவச் செருக்கு... நலிந்தவர்களை ஏளனமாக நோக்கல்... போன்றவற்றைத் தவிர்த்து வாழ்வதானது, யாவருக்கும் நன்மையையும் உரியநேரத்தில் உதவி ஒத்தாசைகளையும் தந்துதவும் என்ற கண்ணோட்டத்தில், நல்லதொரு சிறுகதையை வாசகர்களுக்குத் தந்திருக்கின்றார் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மண்டூர் அசோகா எனும் பெண் எழுத்தாளர்.

ஒருவிடயத்தை எழுத்துகள்மூலம் படைப்பாக்கமாக உருவமைப்பது என்பது, எல்லோருக்கும் கைவரப்பெற்றதொன்றல்ல. செவிகள் உள்வாங்கும் விடயங்களுக்கு அப்பால், தரிசனங்கள் மூலம் அல்லது நேரடி அனுபவங்களூடாகப் பெறப்படும் உணர்வினை எழுத்துக்களாக்கும்போது, அங்கே நல்லதொரு படைப்பாக்கம் உருவாகி விடுகிறது. அதேவேளை, அப்படைப்பு இச்சமூகத்துக்கு என்ன சொல்ல வருகிறது என்பதையும், அப்படைப்பை வாசிக்கும்போது, அது வாசிப்பவரது மனதுள் ஏதோவொரு தாக்கத்தை ஏற்படுத்தின், அப்படைப்பு உயரியதொன்றாகவே கருத முடிகிறது.

எழுதப்படுகின்ற எல்லாப்படைப்புகளும் இச் சமூகத்திற்குப் போதனை செய்ய முடியாதுவிடினும், சில படைப்புகளானது இறுதியில் ஓர் 'அறைதலை' அல்லது 'சிந்தனைத் தூண்டுதலை', 'மனத்தெளிதலை' நிகழ்த்திவிட்டு நகரும்போது, அதுவே அப்படைப்பு இச்சமூகத்திற்கு வழங்குகின்ற பதிலும், அதேவேளை படைப்பின் கனதியுமாகிறது.

மண்டூர் அசோகா அவர்கள் எழுதியிருக்கும் 'நினைப்பதெல்லாம்...' சிறுகதை இச்சமூகப் பொதுவெளியில் சொல்ல வருவதென்ன?

எளியமொழிநடையில், தொய்வில்லாத வசனக் கோர்வை கொண்டு நகரும் இக்கதை, மேம்போக்கான குணம் கொண்டோருக்கு ஓர் 'அறைதலை'யும், ஒரு சிந்தனைத் தூண்டுதலையும், வாசிப்போருக்கு ஒரு மனத் தெளிதலையும் கொடுத்துவிட்டு நகருகிறது.

சிலருள் படிப்பினால் ஏற்படும் அகம்பாவம் அவர்களது அகக்கண்களை மறைக்கும்போது, அவர்கள் எப்படியான மனோபாவத்துக்குள் சிக்கிக் கொள்கிறார்கள் என்பதையும், தமக்கான நகரும் காலத்தில் எந்தளவு பரிதவிப்புக்குள் உள்ளாகிறார்கள் என்பதையும் இக்கதையினுள் மயில்வாகனம் எனும் பாத்திரமூடாக வெளிப்படுத்தப்படுகிறது. மயில்வாகனம் போன்றவர்களால் பழிவாங்கப்படும் இரண்டாம் தர நிலையிலிருப்போர், அவர்தம் பொறுமையை வெளிப்படுத்தி நாளடைவில் எப்படி ஓர்மம் கொண்டு நிமிர்கிறார்கள்... நிமிரவேண்டும் என்பதை இராஜகோபால் எனும் இன்னொரு பாத்திரமூடாக வெளிக்காட்டியிருக்கும் விதம் நெகிழ்ச்சியான உணர்வுமயமானதொன்று.

மயில்வாகனம் என்பவர் ஓய்வுபெற்ற ஒரு பாடசாலை அதிபர். இவரது மகள் மாலதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ஒன்றைக் கடந்து, மறுபக்க நிலப் பரப்பிலுள்ள ஒரு பாடசாலையில் கல்வி கற்பிப்பவள். தினம்தினம் மகள் ஆற்றைக்கடந்து சென்று, கற்பித்தலில் ஈடுபடும் அவளது சிரமத்தை அறிந்த தாயானவள், மகளுக்கு கல்வித் திணைக்களத்தில் ஒரு இடமாற்றத்தைக் கேட்டுப் பெறும்படி தனது கணவனை நாளாந்தம் நச்சரித்தபடி இருக்கிறாள். மனைவியின் இந்த நச்சரிப்பினை நிராகரிக்க முடியாதவராக அன்றைய தினம் திணைக்கள அலுவலகத் திற்குப் புறப்படுகிறார் மயில்வாகனத்தார். திணைக்களத்தினுள் ஊழியர்கள் பலரும் இயங்கிக் கொண்டிருப்பது அவருக்குத் தெரி கிறது.

கல்விப் பணிப் பாளரின் அறைக்கு முன்பாக பலரும் தம் தேவையின் பொருட்டுக் காத்து நிற்கின்றார்கள். அவர்களில் ஒருவராக மயில்வாகனமும் இருக்கிறார். அப்போது நடேசன் என்பவர் அங்கு வருகின்றார். நடேசன் ஒருகாலத்தில் மயில்வாகனத்தோடு இணைந்து படிப்பித்தவர். மயில்வாகனம் வந்திருக்கும் விடயத்தை அறிந்த அவர், மயில்வாகனத்தைப் பார்த்துச் சிரிக்கிறார். மயில்வாகனம் அவரது சிரிப்பின் அர்த்தம் புரியாமல், அவரிடமே கேட்டு விடுகிறார். அதற்கு நடேசன் கூறும் பதில்... மயில்வாகனத்துக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து விடுகிறது.

காரணம் - மயில்வாகனம் அதிபராக இருந்த காலத்தில், அவரால் பாடவகுப்பு மாணவர்கள் முன், அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ஒரு பட்டதாரி ஆசிரியனே அக்கல்வித் திணைக்களத்திற்குப் புதிதாக வந்து பதவி ஏற்றிருக்கும் அதிகாரி இராஜ கோபால்!

மயில்வாகனத்துக்கு, தான் அதிபராக இருந்த காலத்தில் தனது அதிகார செயல்பாடுகள் அனைத்தும் ஞாபகத்துக்கு வருகின்றன. 'அதிபர்' எனும் தகுதியை முன்னிறுத்தி, பாடதான விடயங்களில் ஏனைய ஆசிரியர் களுடன் கடும்போக்கைக் கடைப்பிடித்தமை... பவானி என்கிற ஆசிரியை இராஜகோபாலுடன் தனது தனிப்பட்ட கருத்துக்களைப் பரிமாறி விளக்கம் கேட்பதைத் தவறாகப் புரிந்து கொள்ளுதல்... இது குறித்து அவர்களை எச்சரித்தபின், மீண்டும் அவர்கள் இருவரும் பேச்சுக்களில் ஈடுபட்டமையைக்கண்டு, பழி வாங்க நினைத்தமை... இதற்கு ஒரு வடிகாலாக இராஜகோபாலின் தாயார் சுகவீனமுற்று இருக்கையில், இராஜகோபால் அடிக்கடி விடுப்பு எடுத்தமையை வைத்து, அவரது வகுப்பு மாணவர்கள்முன் அவமானப்படுத்தி இட மாற்றம் செய்தமை... போன்றன யாவும் நினைவினில் வர, தன்னால் அவமதிக்கப்பட்ட ஓர் ஆசிரியனே அதிகாரியாக வந்து, அவர் முன்பாக, தான் வேண்டுதலுக்காக நிற்க வேண்டிய நிலையை நினைத்து தனக்குள் குமையத் தொடங்குகிறார்.

திரும்பி வீட்டிற்குச் செல்ல நினைத்தார். ஆயினும், 'அதிபர்' என்ற பழைய திமிர்த்தனம் செல்லவிடவில்லை. ' சரி... ஒருக்கா உள்ள போய்தான்தான் பார்ப்போமே...' என நினைத் துக் கொண்டிருக்கையில், அவர் உள்ளே அழைக்கப்படுகிறார். அவரைக் கண்டதும், மிகுந்த முகமலர்ச்சியுடன் அவரை வரவேற் கிறார். அவரது சுகநலத்தை விசாரிக்கிறார். அதைக்கண்ணுற்ற மயில்வாகனம் தனக்குள் கூனிக்குறுகிப் போகிறார்.

என்னதான் இருந்தாலும், இராஜகோபால் இப்போது உயரதிகாரி. இதன் நிமித்தம் மயில்வாகனம் அவரைப் பார்த்து, " தம்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்... நீ, நீங்க..." விளிக்க முற்பட்டபோது, அதற்கு இராஜகோபால் " ஏன் சேர் இப்படி அவதிப்படுகிறீங்க? என்னை நீயெண்டே சொல்லலாம். பதவி மாறினாலும் நான் இன்னும் பழைய இராஜகோபால்தான். என் குணம் என்றைக்கும் மாறாது..." என்று கூறியதைக் கேட்டு, மனதளவில் தவித்துப்போகும் மயில் வாகனம், ஆரம்ப காலத்தில், தான் செய்த பாவமான காரியங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறார். அதற்கு இராஜகோபால், " எனது இந்த உயர்வுக்கு நீங்களும் ஒரு காரணம்... " எனக் கூறும்போது, மயில்வாகனம் திகைத்த வராய், "அதெப்படி...?" எனத் திருப்பிக் கேட்கிறார்.

" சேர்... நீங்க முயற்சி எடுத்து, 'பணிஸ் மெண்ட் ரான்ஸ்பர் ல என்னை அனுப் பினதாலைதான், எனக்குள் ஒரு ரோச உணர்ச்சி உண்டாயிற்று. எப்படியாவது நானும் ஓர் அதிகாரியாகவேணும்... எண்டதொரு வைராக்கியம். அதால பரீட்சைகள் எடுத்துப் பாஸ் பண்ணி இந்தப் பதவிக்கே வந்தீற்றன்..." என்று இராஜகோபால் கூறியதைக் கேட்டு, மயில்வாகனத்தால் எதுவும் பேச முடியவில்லை. அதிபராக இருந்த காலத்தில், மாணவர்கள்முன் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்..." என்று கூறிய வார்த்தை, இன்று 'பூமராங்' ஆயுதம் போன்று தன்னையே வந்து தாக்கிவிட்டதை அவர் உணர்ந்து கொண்டார்.

முடிவில், மாலதியின் இடமாற்றம் தொடர்பாக இராஜகோபால் மயில்வாகனத்திற்கு உறுதிமொழி வழங்கியதும், மயில்வாகனம் எழுந்து புறப்பட்டு விடுகிறார்.

திரும்பத் திரும்பப் படிக்கத் தூண்டும் இக்கதையினுள், வாழ்வியல் சார்ந்த பல அறச் சூட்சுமங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. கதையை வாசித்து முடித்தபின், கதைக்கான கருவோடு ஆழ்ந்து சிந்திக்கையில்தான், இவை மெல்லெனவாய்ப் புலப்படுகின்றன.

"அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மேட்டிமை (நீதி மொழிகள் - 16 : 18)" என்பதற்கொப்ப மயில்வாகனத்தின் செயற்பாடுகளும், " நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் - 12 : 21)" என்பதற்கொப்ப இராஜகோபாலின் செயற்பாடுகளும் அமைவதை நோக்கும் போது, இப்பத்தியின் தொடக்கத்தில் குறிப் பிட்டிருப் பதுபோன்று, ' வாழ்க்கை யாவர்க்கும் பொதுவானதொன்று, அது வாழ்வதற்கான தெனினும் அவ்வாழ்வினுள் ஏனைய ஜீவன்களைத் துன்புறுத்தலுக்கு ஆளாக்காது வாழ்வதே சிறப்பு' என்பதே உண்மையாகிறது.



## மறந்திடும் ஒருவரல்ல

மறந்திடும் ஒருவரல்ல
மாபெரும் மன்னர் நீங்கள்,
இறந்திடவில்லை, இல்லை
இருக்கின்றீர் எமது நெஞ்சில்
மறக்காது மகுடம், ஆமாம்
மறந்திடார் நூலார்!
உறங்குவீர் ஐயா, தேவை
உளபோது விழித்து வாரீர்!

- கவிஞர் தாமரைத்தீவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ayshnavi Vinojan

# Lost cause

Where did I leave them? All my precious notes and textbooks with annotations and all my hard work on them. Anger started creeping into my voice. There is only one place where I left it and only one person who knows where I left it: Piper, my best friend. She could not have done this to me. I have known her all my life, and she can't possibly do this, but she has a motive. We have been in what we like to call an academic war all our lives, both striving to be the best in everything, from small end-of-topic tests to final exams. Even so, we knew everything about each other. We are both doing our finals, the ultimate exam, the one we have both been waiting for all our lives.

Frantically, I pull out my phone, hesitating before calling her. She answers on the first ring (as always), "Hey Q, what's up?" Q? The audacity to call me by my nickname during this situation. I don't respond. "Quince?" her voice rings through the phone.

"Piper, did you take my life's work of notes for the finals?" my voice trembles as I form words.

"Are you kidding! Of course not, why would I!" she says. I want to believe her, but my gut tells me the opposite. It is wrong to narrow it all down to her because anyone could have found the spot and taken everything they saw. I try to stop myself from overthinking, like I always do, and take deep breaths before responding to her, "I need you to be honest with me, Pip." I say.

"I swear I didn't!" Piper's voice escalates with every word she says. That's when I knew it was time to end the call. I started to think about what I should do if I never found those notes. My eyes are heavy; this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

means I need to sleep; now it is 9 pm anyway.

I wake with a scream from my roommate. I jump up, fumbling when I get to my feet to check what happened. I am half asleep, but I am not blind, only to see her staring down at her phone and then chanting, "Finally! A thousand views!" My shoulders slouch as I turn back around to head for my bed. She notices me and comes, skipping, "Q! Can you believe it? I'm practically famous!" I groan as I have disturbed such a tranquil sleep for this.

"I'm so happy for you," I mutter, walking to bed. I go to wash up to see dark circles surrounding my eyes. My eyes are still red.

Most people think losing a couple of notes or textbooks isn't a big deal, but it means life or death to me. Those endless hours I annotated every line, every word, those key terms I wrote repeatedly, I miss them. Then I remember. I'm going to be late! My roommate had left after I came out of the bathroom, and now I have to rush to be on time. I hate rushing; I threw up the last time I did that. I know it sounds silly. I hate rushing. I don't live at home, so I have to lock my apartment's door before leaving as we have had several break-ins around here, and I don't like risking it. I arrive at school ten minutes later, so I am on time to see Piper. She has a smug smile, her blonde wavy hair falling elegantly to her waist. Her skirt is blue, and she wears leg and hand warmers to match while she wears a cyan crop top; in this weather, those warmers don't save her. She is giggling with her other friends as they love to suck up to her. They always follow her around as if they are pleading for something. For some reason, when they see me, they start to flee. I don't mind that much as they weren't ever 'friends' to me.

Piper runs over to me, waving as if the call we had never even happened. "What's up?" she says. "Nothing," I muster under my breatu; she notices how I speak and steps before me to stop me from heading to class. "Look," she says, touching my shoulders to pull me from being hunched back. "I promise it wasn't me, okay, but I can help you find all of it?" she says.

"I know, it's just hard for me to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

believe, and no one gets it," I say.

"I get it, okay. I would go bonkers if someone took all my hard work away from me; you surprisingly are taking this all really well," she says, reassuring me. Ultimately, she is my best friend; she is the only thing holding me up right now as I have an absent family; she is all I have right now. I thank her and start heading for class. I need to remember to do my daily quote. I always write down one of my favourite quotes for the day. Today's quote: 'You laugh at me because I am different; I laugh because you are all the same.' I love that; it means so many things. It is also quite intimidating if you say so.

Now it is break time, and I have a headache; my hand is aching from taking down so many notes. My phone buzzes, and I reach to get it. It is a text message but doesn't have a name; it is probably one of those scam texters. I place my phone back in my pocket and go about my day. A couple of minutes later, my phone is rapidly buzzing. The texts come piling through from the same number, 'unknown'. I don't open them because I know scam texters don't usually spam you; they would sit and wait. I pluck up the courage to open the texts; maybe one of my classmates has just gotten my number, so it says unknown. No. Not classmates; no. It is strange—a real unknown. I read what it says. "Watch out; I have the notes and your little friend." And another, "Time's ticking."

## What is a short story?

A short story is a work of prose fiction that can be read in one sitting—usually between 20 minutes to an hour. There is no maximum length, but the average short story is 1,000 to 7,500 words, with some outliers reaching 10,000 or 15,000 words. At around 10 to 25 pages, that makes short stories much shorter than novels, with only a few approaching novella length. A piece of fiction shorter than 1,000 words is considered a "short short story" or "flash fiction," and anything less than 300 words is rightfully called "microfiction."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What are the different types of short stories?

Short stories come in all kinds of categories: action, adventure, biography, comedy, crime, detective, drama, dystopia, fable, fantasy, history, horror, mystery, philosophy, politics, romance, satire, science fiction, supernatural, thriller, tragedy, and Western. Here are some popular types of short stories, literary styles, and authors associated with them:

***Fable:*** A tale that provides a moral lesson, often using animals, mythical creatures, forces of nature, or inanimate objects to come to life (Brothers Grimm, Aesop)

***Flash fiction:*** A story between 5 to 2,000 words that lacks traditional plot structure or character development and is often characterized by a surprise or twist of fate (Lydia Davis)

***Mini saga:*** A type of micro-fiction using exactly 50 words (!) to tell a story

***Vignette:*** A descriptive scene or defining moment that does not contain a complete plot or narrative but reveals an important detail about a character or idea (Sandra Cisneros)

***Modernism:*** Experimenting with narrative form, style, and chronology (inner monologues, stream of consciousness) to capture the experience of an individual (James Joyce, Virginia Woolf)

***Postmodernism:*** Using fragmentation, paradox, or unreliable narrators to explore the relationship between the author, reader, and text (Donald Barthelme, Jorge Luis Borges)

***Magical realism:*** Combining realistic narrative or setting with elements of surrealism, dreams, or fantasy (Gabriel García Márquez)

Minimalism: Writing characterized by brevity, straightforward language, and a lack of plot resolutions (Raymond Carver, Amy Hempel)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KAGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO

LUXMI
EDUCATION CENTRE

# LEC



## ENROLLING NOW
2022 / 2023

**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org